

புதிய தசாப்தத்தில் தற்சார்பு இந்தியாவுக்கு அடிப்படைத்தளம் அமைப்பதாக இந்த நிதிநிலை அறிக்கை அமைந்துள்ளது: நிதியமைச்சர்

நிர்மலா சீதாராமனின் பேட்டி - பக்கம் 22-25

இலவச விநியோகத்திற்காக

தொகுதி 1, இதழ் 16

பிப்ரவரி 16-28, 2021

# நியூ இந்தியா சமாச்சார்

NEW INDIA SAMACHAR

Volume 1, Issue 16


February 16-28, 2021




# சுய - சார்பு இந்தியாவிற்கான பட்ஜெட்

**மத்திய பட்ஜெட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள ஆறு முக்கியத் தூண்கள், சுய-சார்பு இந்தியா என்ற கனவை நனவாக்கும் நோக்கில், கட்டமைப்பு வளர்ச்சியில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது**

# பாலகோட் விமானத் தாக்குதலின் இரண்டாண்டு நிறைவு




> क्षमाशील हो रिपु-समक्ष
> तुम हुए विनीत जितना ही,
> दुष्ट कौरवों ने तुमको
> कायर समझा उतना ही।
> सच पूछो, तो शर में ही
> बसती है दीप्ति विनय की,
> सन्धि-वचन संपूज्य उसी का
> जिसमें शक्ति विजय की।

**ராம்தாரி சிங் திங்கர்**

பிப்ரவரி 26, 2019 அன்று பாலகோட் விமானத் தாக்குதலுக்குப் பிறகு இந்திய ராணுவம் வெளியிட்ட டுவிட்டர் பதிவு

நியூ இந்தியா
# சமாச்சார்

தொகுதி 1, வெளியீடு 16 பிப்ரவரி 16-28, 2021

**Editor**
Kuldeep Singh Dhatwalia,
Principal Director General, PIB,
New Delhi

**Consulting Editors**
Vinod Kumar
Santosh Kumar

**Designer**
Ravindra Kumar Sharma

**Published & Printed by**
Satyendra Prakash,
DG, BOC
on behalf of Bureau of
Outreach and
Communication

**Printed at**
Infinity Advertising services Pvt.Ltd.
FBD-One Corporate Park, 10th floor,
New Delhi-Faridabad border, NH-1,
Faridabad-121003

**Published from**
Bureau of Outreach and
Communication, 2nd Floor, Soochna
Bhawan,
New Delhi -110003

NEW INDIA SAMACHAR

RNI No. : DELTAM/2020/78809

response-nis@pib.gov.in

## பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| 1 | தலையங்கம் | பக். 02 |
| 2 | அஞ்சல் பெட்டி | பக். 03 |
| 3 | செய்திச் சுருக்கம் | பக்.04-05 |
| 4 | ஆளுமை | பக். 06-07 |
| 5 | கவர் ஸ்டோரி<br>மத்திய பட்ஜெட் 2021-22 | பக். 08-21 |
| 6 | பேட்டி | பக். 22 -25 |
| 7 | டாவோஸ் பேச்சுவார்த்தை | பக். 26-27 |
| 8 | கொரோனாவுக்கு<br>எதிரான நடவடிக்கைகள் | பக். 28-29 |
| 9 | கெவாடியா-விற்கு ரயில்<br>போக்குவரத்து | பக். 30-31 |
| 10 | பராக்கிரம தினம் | பக். 32 |
| 11 | பிளம்கேவிஷய் 3.0 | பக்.33 |
| 12 | முன்னோடித் திட்டம் :<br>எஸ்பிஎம்ஆர்எம் | பக். 34-35 |
| 13 | பத்ம விருதுகள் | பக். 36-39 |
| 14 | வேளாண்மை | பக். 40-41 |
| 15 | அமைச்சரவை முடிவுகள் | பக். 42 |
| 16 | ஆக்கப்பூர்வ அணுகுமுறை | பக். 43 |
| 17 | மனதின் குரல் | பக். 44 |

# ஆசிரியர் மேசையிலிருந்து...

வணக்கம்!

புதிய தசாப்தத்திற்கான மத்திய அரசின் புதிய பட்ஜெட், வரலாற்றுச் சிறப்புமிக்கது, ஏனெனில், பெருந்தொற்றால் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்திற்கு புத்துயிரூட்டுவதற்கான, தொலைநோக்குடன் கூடிய சீர்திருத்தங்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

'அனைவரும் இணைவோம் அனைவரும் உயர்வோம்' என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட இந்த பட்ஜெட், சுகாதாரம் மற்றும் நலவாழ்வு, சொத்து & நிதி முதலீடு மற்றும் கட்டமைப்பு வசதி, மாற்றத்தை விரும்பும் இந்தியாவிற்கான உள்ளடக்கிய வளர்ச்சி, மனித முதலீட்டிற்கு புத்துயிரூட்டுதல், கண்டுபிடிப்பு மற்றும் ஆராய்ச்சி & மேம்பாடு மற்றும் குறைந்தபட்ச அரசு மற்றும் அதிகபட்ச ஆளுகை ஆகிய 6 முக்கியத் தூண்களை சார்ந்துள்ளது.

கோவிட்-19 பெருந்தொற்றிலிருந்து கற்றுக்கொண்ட பாடத்திலிருந்து, சுகாதாரம் மற்றும் ஆரோக்கியத்திற்கு அரசு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளது. அனேகமாக, மத்திய பட்ஜெட்டில் சுகாதார சேவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பது இதுவே முதன்முறை ஆகும். சுய-சார்பை விரும்பும் நாட்டில், நம்பிக்கை என்ற தடுப்பூசி ஏற்றியதுபோல இந்த பட்ஜெட் இருக்குமென கருதப்படுகிறது.

அதே பற்றுதல் மற்றும் நம்பிக்கையுடன், உங்களது கருத்துக்களை தெரிவிக்கவும்.

முகவரி: களவிளம்பரம் மற்றும் தொடர்புப் பிரிவு, இரண்டாவது மாடி, சூச்னா பவன், புதுதில்லி - 110003

மின்னஞ்சல் : response-nis@pib.gov.in

K S Dhatwalia

(கே எஸ் தத்வாலியா)

# அஞ்சல் பெட்டி




அன்புக்குரிய நண்பருக்கு,

அருமையான இந்த இதழை வெளியிடுவதற்காக, முதற்கண் எனது வாழ்த்துக்களை ஏற்றுக் கொள்ளவும். இந்த நாட்டின் குடிமகன் என்ற அடிப்படையில், நாட்டின் மேம்பாட்டிற்கு வழிவகுக்கக்கூடிய அனைத்து ஆக்கப்பூர்வ முயற்சிகளுக்கும் நான் துணை நிற்பேன்.

எனது ஆலோசனைகள் வருமாறு :

(1) நாட்டிற்கும், நாட்டு மக்களுக்கும் முக்கியமானதாக கருதப்படும் எந்தவொரு அரசுத் திட்டம் குறித்த தகவல்களை அளிக்கவும்.

(2) ஆக்கப்பூர்வ சாதனை புரிந்த மற்றும் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்ட, உண்மையான வீரர்களைப் பற்றிய தகவல்களை வெளியிடலாம்.

(3) நீதித்துறை மற்றும் கல்வி ஆகிய இரண்டு துறைகளும், எந்தவொரு அமைப்புக்கும் அடிப்படை என்பதால், அவற்றில் கொண்டுவரப்படும் மாற்றங்கள் பற்றிய தகவல்களை அளிக்கலாம்.

நன்றிகளுடன்

ஹிதேஷ்கன்வராணி

hit7sci1@gmail.com

அய்யா,

நடப்பு வெளியீட்டை நான் படித்துப் பார்த்தேன், அது புதிய இந்தியாவை உருவாக்குவதற்கான மத்திய அரசின் முன்முயற்சிகளை பிரதிபலிக்கும் கண்ணாடியாக உள்ளது. இதற்காக மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் எனது நல் வாழ்த்துக்கள்

தங்கள் உண்மையுள்ள,

மதுசூதன்

academic1978cskhpkv@gmail.com

அன்பார்ந்த அய்யா/அம்மா,

நியூ இந்தியா சமாச்சார் இதழை, அது தொடங்கப்பட்டதிலிருந்து படித்து வருவதை வாடிக்கையாகக் கொண்டவன் நான். இந்த இதழ் பயத்தை உருவாக்குபவர்களால் ஏற்படுத்தப்பட்ட விரக்தியை விரட்டி, நம்பிக்கை & முன்னேற்றம் குறித்த சூழலைப் பிரதிபலிக்கும், சமூக நலத் திட்டங்கள் பற்றிய செய்திகள், அரிய கருத்துக்கள் மற்றும் தகவல்கள் நிறைந்ததாக உள்ளது.

nayananand164@gmail.com

மதிப்பிற்குரிய அய்யா,

நியூ இந்தியா சமாச்சார் இதழ் அரசின் திட்டங்கள் பற்றிய பல்வேறு பயனுள்ள தகவல்களை அளிக்கிறது.போட்டித் தேர்வுகளுக்காக தயார் செய்து கொள்ள நியூ இந்தியா சமாச்சார் இதழுக்கு நான் சந்தா செலுத்த விரும்புகிறேன். இந்த அச்சிதழைப் பெறுவதற்கு சந்தா செலுத்தும் வழிமுறைகளை தெரிவிக்கவும்

நன்றிகள்

பி.சாந்தி.

pshanthir@gmail.com

மதிப்பிற்குரிய அய்யா,

நியூ இந்தியா சமாச்சார் இதழை வெளியிடுவதற்காக, முதலில் நான் உங்கள் அனைவரையும் பாராட்டுகிறேன். டிசம்பர் ஆன்லைன் இதழை நான் படித்தபோது, தகவல் அறிந்துகொள்ளக்கூடிய பல்வேறு அம்சங்கள் அதில் இருப்பதைக் கண்டு வியந்து போனேன். இந்த இதழின் வங்காள மற்றும் ஆங்கில மொழிப் பிரதிகளை, எனது மின்னஞ்சல் முகவரிக்கு தொடர்ந்து அனுப்பிவைக்கவும். இந்த இதழ் அச்சடித்து வெளியிடப்படுகிறதா என்பதையும் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

நன்றிகளுடன்,

சுமித் மஹாதா.

sumitmahata14@gmail.com

அய்யா,

உள்பக்க அட்டையில் இடம்பெற்றிருந்த பிரதமர் நரேந்திர மோடியின் கவிதை எங்களை வியப்பில் ஆழ்த்தியது. வில்லியம் வேர்ட்ஸ்வொர்த்தின் கவிதைகளில் காணப்படும் இயற்கை அழகியலை பிரதிபலித்து, நினைவுகூர்வதாக இருந்தது. ஏராளமான கவிதைகளை இயற்றிய காலஞ்சென்ற அடல் பிகாரி வாஜ்பாயி-ன் அடியொற்றி தற்போது பிரதமர் நரேந்திரமோடியும் கவிதை எழுதுகிறார். இதுபோன்ற மேலும் பல கவிதைகளை வெளியிடவும்.

நன்றிகளுடன்,

டாக்டர்.சதீஷ் கே.இடாகி

இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல் துறை

ராணி சண்ணம்மா பல்கலைகழகம்,

பெலகாவி(கர்நாடகா)

satishitagi10@gmail.com

## வீரர்களை களத்தில் பாதுகாக்க, ரிமோட் கண்ட்ரோல் முறையில் இயங்கும் வாகனம் மற்றும் ரிமோட்டால் இயக்கப்படும் கண்ணிவெடிகளை கண்டறியும் சாதனம்




கண்ணிவெடிகள், பொதுவாக, பாதுகாப்புப் படையினர் மற்றும் பொதுமக்களின் உயிருக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகின்றன. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விதமாக, புனேயில் உள்ள ராணுவ பொறியியல் கல்லூரியைச் சேர்ந்த கேப்டன் ராஜ் பிரசாத், நிலப்பரப்பில் ஆளில்லாமல் இயங்கக் கூடிய சேப்பர்ஸ்கவுட் எனப்படும் கண்ணிவெடி கண்டறியும் சாதனைத்தை வடிவமைத்து உருவாக்கியுள்ளார். இந்த சாதனம், கன்னிவெடிகளைக் கண்டறிந்து, குறியிடுவதுடன், படைத்துருப்புகள் கண்ணிவெடி புதைக்கப்பட்டுள்ள இடங்களை, பாதுகாப்பான முறையில் கடந்துசெல்ல வகை செய்கிறது. ரிமோட் மூலம் இது இயக்கப்படுகிறது. எக்ஸ்ப்ளோடர் என்றழைக்கப்படும் ரிமோட் மூலம் இயக்கப்படும் வாகனம் (ROV) ஒன்றையும் பிரசாத் உருவாக்கியுள்ளார். முதுகில் மாட்டிக்கொள்ளக்கூடிய அளவிலான மற்றும் குறைந்த எடைகொண்ட இந்த சாதனம், ரிமோட்டைப் பயன்படுத்தி, பாதுகாப்பான தொலைவிலிருந்தே கண்ணிவெடிகளை அழிக்க உதவிகரமாக அமைந்துள்ளது. ROV மற்றும் கன்னிவெடிகளைக் கண்டறியும் சாதனங்கள், இதுவரை சோதனை அடிப்படையில் பரிசோதிக்கப்பட்டு வரும் நிலையில், இந்த சோதனை வெற்றிகரமாக அமைந்தால், அவை ராணுவத்தில் சேர்க்கப்படும்.

## ரூ 1,000 கோடியில் ஸ்டார்ட் அப் இந்தியா மூலதன நிதியம்

இந்தியாவில் புதிய தொழில் தொடங்குவதற்கான சூழலுக்கு மேலும் ஊக்கமளிக்கும் விதமாக, ஸ்டார்ட் அப் இந்தியா மூலதன நிதியம் ஒன்று தொடங்கப்படுவதாக, பிரதமர் நரேந்திர மோடி ஜனவரி 16, 2021 அன்று அறிவித்தார். 'பிராரம்ப்: ஸ்டார்ட்அப் இந்தியா சர்வதேச உச்சிமாநாடு' நிகழ்ச்சியின்போது, அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டார். ரூ.1,000 கோடி ஸ்டார்ட் அப் இந்தியா மூலதன நிதியம், புதிய தொழில் தொடங்குவதற்கு ஆரம்ப முதலீட்டிற்கு பற்றாக்குறை இல்லாத நிலையை உறுதி செய்யும். உத்தரவாதம் மூலம் மூலதனம் திரட்டும், புதிய தொழில் நிறுவனங்களுக்கும் அரசு உதவி செய்யும். 'இளைஞர்களால், இளைஞர்களுக்காக, இளைஞர்களே' என்பதை தாரக மந்திரமாகக் கொண்டு, புதிய தொழில் தொடங்குவதற்கான சூழலை நோக்கி இந்தியா சென்று கொண்டிருக்கிறது. "அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கான இலக்குகளை நாமே நிர்ணயித்து, இந்த இலக்குகளின் அடிப்படையில் புதிய தொழில்களைத் தொடங்குவதுடன், இந்த புதிய தொழில்கள், உலகளாவிய பெருந்தொழில் நிறுவனங்களாகவும், எதிர்காலத்திற்குத் தேவையான தொழில்நுட்பத்தில் முன்னோடியாகவும் திகழச் செய்ய வேண்டும்" என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

## சாலையோர வியாபாரிகள் டிஜிட்டல் பரிவர்த்தனைகளைப் பின்பற்ற திறன் பயிற்சி அளித்தல்




பிரதமரின் சுயநிதித் திட்டத்தின்கீழ், சாலையோர வியாபாரிகளுக்கு டிஜிட்டல் பரிவர்த்தனை குறித்து பயிற்சி அளிப்பதற்கான பிரச்சார இயக்கத்தை மத்திய அரசு நடத்தியுள்ளது. நாடுதழுவிய அளவில், ஜனவரி 4-22, 2021ல் நடத்தப்பட்ட இந்த இயக்கத்தின்போது, டிஜிட்டல் பரிவர்த்தனைகளின் பலன்கள் குறித்து வியாபாரிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. இந்த டிஜிட்டல் பரிவர்த்தனைகளை மேற்கொள்வோருக்கு, மாதந்தோறும் ரூ.100 வரை ரொக்க ஊக்கத்தொகை கிடைப்பதை இத்திட்டம் ஊக்குவிக்கிறது. டிஜிட்டல் பரிவர்த்தனைகள் சரியான முறையில் மேற்கொள்ளப்பட்டு வந்தால், வியாபாரிகள் கடன் பெறுவதும் எளிமையாகும் என்று வங்கிகளும் தெளிவுபடுத்தியுள்ளன. இத்திட்டத்தின் மூலம், வியாபாரிகள் ரூ.10,000 வரை மூலதனக் கடனாக பெறமுடியும் என்பதோடு, 50லட்சத்திற்கும் மேற்பட்ட சாலையோர வியாபாரிகள் பயனடையச் செய்வதே நோக்கமாகும். மத்திய அரசின் இத்திட்டத்தின்கீழ், வட்டி, மான்யம் மற்றும் டிஜிட்டல் கேஷ்பேக் சலுகைகள், இந்தியன் வங்கியால், கடைக்காரர்களின் கணக்கில் செலுத்தப்படுகிறது. இதுபற்றிய கூடுதல் விவரங்களுக்கு, உள்ளூர் வங்கியை அணுகலாம்.

## இந்தியாவின் முதலாவது சுற்றுச்சூழலுக்கு உகந்த சாண வர்ணத்தை கதர்கிராமத் தொழில் வாரியம் அறிமுகப்படுத்தியுள்ளது

"காதி பிரக்ரிதிக் பெயின்ட்" என்ற பெயரில், இந்தியாவின் முதலாவது சுற்றுச்சூழலுக்கு உகந்த சாண வர்ணத்தை கதர்கிராமத் தொழில் வாரியம் அறிமுகப்படுத்தியுள்ளது. இது ஒரு புதுமையான மற்றும் முதலாவது வகை ஆகும். இது, நச்சுத்தன்மையற்ற, பூஞ்சை எதிர்ப்பு, பாக்டீரியா எதிர்ப்புத் தன்மை கொண்டது ஆகும். இந்த வர்ணம், காரீயம், பாதரசம், க்ரோமியம், ஆர்செனிக், காட்மியம் போன்ற கனத்த உலோகக் கலப்பு இல்லாத வர்ணம் ஆகும். துர்நாற்றமற்ற இந்த வர்ணத்திற்கு, இந்திய தர நிர்ணய அமைப்பின் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. காதி பிரக்ரிதிக் பெயின்ட், டிஸ்டம்பர் மற்றும் பிளாஸ்டிக் எமல்சன் ஆகிய இரண்டு வடிவங்களில் கிடைக்கிறது.




இதன் விலை, டிஸ்டம்பருக்கு லிட்டருக்கு ரூ.120ஆகவும், எமல்சன் வகைக்கு லிட்டருக்கு ரூ.225ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## சோம்நாத் அறக்கட்டளையின் தலைவராக பிரதமர் தேர்வு



பிரதமர் நரேந்திர மோடி, குஜராத்தில் உள்ள ஸ்ரீ சோம்நாத் அறக்கட்டளையின் புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். வருங்காலத்தில், இந்த அறக்கட்டளைக்கு வழிகாட்டுவதற்காக, அதன் அறங்காவலர்கள், பிரதமரை ஒருமனதாக தேர்வு செய்துள்ளனர். ஏற்கனவே தலைவராக இருந்த கேசுபாய் படேல், அக்டோபர் 2020-ல் காலமானதையடுத்து, இப்பதவி காலியாக இருந்தது. அறங்காவலர்கள் அனைவரும் ஒன்றிணைந்து பாடுபடுவதன் மூலம், நாட்டின் தலைசிறந்த பாரம்பரியத்திற்கேற்ப, யாத்ரீகர்களுடன் வலுவான பிணைப்பை ஏற்படுத்தும் விதமாக, தேவையான அடிப்படை வசதிகள், தங்குமிடம், பொழுதுபோக்கு வசதிகளை மேலும் மேம்படுத்த முடியும் என்று பிரதமர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். அவர், மொரார்ஜி தேசாய்-க்குப் பிறகு, சோம்நாத் அறக்கட்டளையின் தலைமைப் பொறுப்பை ஏற்கும் இரண்டாவது பிரதமர் ஆவார். இந்த அறக்கட்டளை, எட்டு உறுப்பினர்களைக் கொண்டது. மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, முன்னாள் துணைப் பிரதமர் எல்.கே.அத்வானி, குஜராத் முன்னாள் தலைமைச் செயலாளர் பி.கே. லஹரி, ஹர்ஷ்வர்தன் நியோதியா மற்றும் ஜெ.டி.பார்மர் ஆகியோர், அறக்கட்டளையின் இதர உறுப்பினர்கள் ஆவர்.

## சாதனை அளவாக, ஒரு நாளைக்கு 76 கிலோமீட்டர் தொலைவுக்கு நெடுஞ்சாலை கட்டுமானம்



மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை, ஜனவரி 8, 2021 அன்று தொடங்கிய வாரத்தில், 534 கிலோமீட்டர் தொலைவுக்கு தேசிய நெடுஞ்சாலைகளை அமைத்து புதிய சாதனை படைத்துள்ளது. அதாவது, ஒரு நாளைக்கு 76 கிலோமீட்டர் தொலைவு வீதம் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது. நடப்பு 2020-21ம் நிதியாண்டில், ஏப்ரல் 2020 முதல் ஜனவரி 15, 2021 வரையிலான காலத்தில், 8,169 கிலோமீட்டர் தொலைவுக்கு தேசிய நெடுஞ்சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இது, ஒரு நாளைக்கு 28.16 கிலோமீட்டர் என்ற வேகத்தில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளதற்கு இணையானது. இதுபோன்ற அசுர வேகத்தில் பணிகள் மேற்கொள்ளப்படுவதால், மார்ச் 31, 2021-க்குள், 11,000 கிலோமீட்டர் சாலை அமைப்பது என்ற இலக்கை கடக்க முடியும் என நெடுஞ்சாலைத்துறை நம்பிக்கை கொண்டுள்ளது. கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தில், ஒரு நாளைக்கு 26.11 கிலோமீட்டர் என்ற வேகத்தில், 7,573 கிலோமீட்டர் தொலைவுக்கான சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது. ■




**இந்திய அரசின் காலண்டர் செயலி**

ஆண்ட்ராய்டு போன்களில் இந்த செயலியை கூகுள் பிளே ஸ்டோரிலிருந்து தரவிறக்கம் செய்ய
https://play.google.com/store/apps/details?id=in.gov.calendar

IOS போன்களில் தரவிறக்கம் செய்ய
https://apps.apple.com/in/app/goi-calendar/id1546365594

https://goicalendar.gov.in/

# 'குருதேவ்'-க்கு கவிதாஞ்சலி



ரவீந்திரநாத் தாகூர் அல்லது 'குருதேவ்' ஒரு சாதாரணக் கவிஞர் மற்றும் எழுத்தாளர் மட்டுமல்ல, அவர் ஒரு சிறந்த இசையமைப்பாளர், தத்துவஞானி மற்றும் ஓவியர் ஆவார். அவரது கவிதைகள் மற்றும் கீதங்கள், இந்தியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய இரு நாடுகளாலும், தத்தமது தேசிய கீதங்களாக ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு பிரசித்தி பெற்றவை. இந்தியாவின் 'ஜன கன மன' மற்றும் பங்களாதேஷின் 'அமர் சோனார் பங்களா' ஆகியவை அவரது கவிதைத் தொகுப்புகளிலிருந்து எடுக்கப்பட்டவை ஆகும்.

**பிறப்பு: மே 7, 1861 மறைவு: ஆகஸ்ட் 7, 1941**

கொல்கத்தாவில் உள்ள ஜோராசங்கோ மிஷனில், மே 7, 1861 அன்று பிறந்த ரவீந்திரநாத் தாகூர், சமய சீர்திருத்தவாதியான தேபேந்திரநாத் தாகூர் மற்றும் சாரதா தேவியின் புதல்வர் ஆவார். அவரது படைப்புகள் இன்றைக்கும் மக்களை கவர்ந்திழுக்கும் வல்லமைபெற்ற பன்முகத்தன்மை கொண்டவர் அவர்.

### குழந்தைப் பருவத்திலிருந்தே, இலக்கியத்துடன் சிறந்த பிணைப்புக் கொண்டிருந்தவர்

தாகூர், குழந்தைப் பருவத்திலிருந்தே இலக்கியம் மற்றும் கலை ஆர்வம் மிக்கவராக திகழ்ந்தார். இலக்கிய இதழ்கள் வெளியாவதுடன், இசை மற்றும் நாடக நிகழ்ச்சிகள் நடைபெறக் கூடிய சூழலில் வளர்ந்தவர் அவர். எட்டு வயது சிறுவனாக இருந்தபோதே அவர் கவிதைகள் எழுதத் தொடங்கினார். அவருக்கு 16 வயதானபோது, பானுசிம்மா என்ற பெயரில், தமது முதலாவது கவிதைத் தொகுப்பை வெளியிட்டார். அதே காலகட்டத்தில், தமது சொந்தப் பெயரிலேயே, சிறுகதைகள் மற்றும் நாடகங்களை எழுதத் தொடங்கினார். 1878-ல், பாரிஸ்டர் ஆகும் நோக்கத்துடன் தாகூர் இங்கிலாந்து சென்றார். ஆனால், பட்டப்படிப்பை நிறைவு செய்யாமலேயே 1880-ம் ஆண்டு வங்காளத்திற்குத் திரும்பிய அவர், மீண்டும் தமது எழுத்துப் பணியைத் தொடங்கினார். இம்முறை, வங்காள மற்றும் ஐரோப்பிய இலக்கியத்தின் பிணைப்பாக தமது இலக்கியப் பணிகளை மேற்கொண்டார். டிசம்பர் 22, 1901-ல் பிரம்மச்சார்யாஸ்ரம் என்ற பெயரில் அவர் தொடங்கிய பள்ளி, பின்னாளில் சாந்திநிகேதன் என்றழைக்கப்பட்டது. 1921-ல் அவர், விஸ்வ-பாரதி பல்கலைகழகத்தைத் தோற்றுவித்தார்.



*நான் தூங்கிக் கொண்டே, வாழ்க்கை மகிழ்ச்சியானது என கனவு கண்டேன். நான் விழித்தெழுந்து பார்த்தபோது, வாழ்க்கை சேவையாகத் தோன்றியது. நான் நடித்துக் கொண்டே, சேவையாற்றுவது மகிழ்ச்சியானது என்பதை நிலைநாட்டினேன்*

**- ரவீந்திரநாத் தாகூர்**

### நோபல் பரிசை வென்ற ஐரோப்பியரல்லாத முதல் நபர்

'குருதேவ்' வங்காள இலக்கியம் மற்றும் இசைக்கு மறுவடிவம் கொடுத்தார். இந்தியாவின் செழுமை மிகுந்த கலாச்சார பாரம்பரியத்தை, மேற்கத்திய நாடுகளுக்கும் அவர் அறிமுகப்படுத்தினார். 1913-ல், இலக்கியத்திற்கான நோபல் பரிசை வென்ற ஐரோப்பியர் அல்லாத முதல் நபர் என்ற சிறப்பைப் பெற்றார். 20-ம் நூற்றாண்டின் தலைசிறந்த கவிஞர்களில் ஒருவரான, டபிள்யு.பி. யீட்ஸ், தாகூரின் கீதாஞ்சலியைப் பாராட்டியவர்களில் ஒருவர் ஆவார். இந்தியாவின் தேசிய கீதமான 'ஜன கன மன', அவரது 'பாரதோ பாக்யோ பிதாதா' என்ற தலைப்பிலான கீதத்திலிருநது எடுக்கப்பட்டது, அதேபோன்று பங்களாதேஷின் தேசிய கீதமான 'அமர் சோனார் பங்களா'-வும், அதே தலைப்பிலான பாடல்களிலிருந்து எடுக்கப்பட்டது. இலங்கையின் தேசிய கீதமான 'ஸ்ரீலங்கா மாதா' -விலும் அவரது தாக்கம் எதிரொலித்தது. தாகூரின் சிஷ்யரான ஆனந்த சமரகூன் தான் இந்த கீதத்தை எழுதி, இசையமைத்தார்.



### 'குருதேவ்' மற்றும் அவரது 'மகாத்மா'

எம்.கே. காந்தியை மகாத்மா என்றழைத்த தற்காலத்து பிரமுகர்களில் தாகூர் முதலாவது குறிப்பிடத்தக்க நபர் ஆவார். காந்திஜி-யும் தாகூரை குருதேவ் என்றழைத்தார். இவர்கள் இருவரும் நேரில் சந்திப்பதற்கு முன்பிருந்தே, அவர்களிடையே பரஸ்பர மரியாதை நிலவியது. எனினும், தாங்கள் இருவரும் சித்தாந்த ரீதியான கருத்து வேறுபாடு உடையவர்கள் என்பதை உணர்ந்த பிறகும், அவர்களிடையேயான மரியாதை தொடர்ந்தது. இருவருமே, ஒருவர் மற்றவரது விமர்சனத்தை ஆக்கப்பூர்வமாக எடுத்துக் கொண்டனர்.

### இந்தியாவின் பன்முகத்தன்மை கொண்ட கவிஞர்

தாகூர் தடம்பதிக்காத இலக்கியம் மற்றும் கலை இல்லை என்றே சொல்லலாம். பாடல்கள், கவிதைகள், நாவல்கள், கதைகள், நாடகங்கள், சிற்பங்கள் மற்றும் ஓவியங்கள் என அனைத்துத் துறைகளிலும், தாகூர் உலகப் பிரசித்திபெற்ற படைப்புகளை உருவாக்கினார். கோரா, கரே-பைரே, ஸீஸெர் கபிதா மற்றும் யோகயாக் போன்ற பல்வேறு நாவல்களை அவர் இயற்றினார். ஏராளமான நூல்களையும் அவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். இந்த மொழிபெயர்ப்புகள், அவரது பெயர் மேற்கத்திய நாடுகளிலும் பரவுவதற்கு உதவிகரமான அமைந்தன. கீதாஞ்சலி பாடலுக்குப் பிறகு, அவரது புகழ், உலகெங்கும் பன்மடங்கு பரவியது. ரவீந்திர சங்கீதம் என்றழைக்கப்படும், ஏறத்தாழ 2,230 பாடல்களுக்கு அவர் இசையமைத்துள்ளார்.


### இலக்கியப் பணிகள், பிரிட்டிஷாருக்கு எதிரான ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டன

இந்தியாவின் வைசிராயாக கர்சன் பிரபு இருந்தபோது, வங்காளம் இரண்டு பகுதிகளாக பிரிக்கப்படும் என்று அறிவித்தார். தாகூர் தமது இலக்கியத்தை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தினார். தமது கவிதைகள் மற்றும் இலக்கியப் பணிகள் மூலமாக, பிரிட்டிஷாரின் அட்டூழியங்களை அவர் அம்பலப்படுத்தினார். பிரிட்டனில் தங்கியிருந்த இரவுகள், ஜாலியன் வாலாபாக் படுகொலைக்கு எதிரான "போராட்டத்தின் அடையாளச் சின்னம்" என்று அறிவித்தார்.

### விஸ்வ-பாரதி பல்கலைகழகத்தின் 100-வது ஆண்டு விழாவை இந்தியா கொண்டாடியது

விஸ்வ-பாரதி பல்கலைகழகத்தின் 100-வது ஆண்டு விழாவை இந்தியா கொண்டாடிய வேளையில், தாகூரை நினைவுகூர்ந்த பிரதமர் நரேந்திர மோடி, "வேத காலத்திலிருந்து விவேகானந்தரின் காலம் வரையிலான இந்தியாவின் சிந்தனை ஊற்று, குருதேவின் தேசிய உணர்வுகளில் எதிரொலித்தது. இந்த ஊற்று என்பது, உள்நோக்கி வருவதாக மட்டுமின்றி; இந்தியாவை உலகின் பிற நாடுகளிலிருந்து பிரிக்க முடியாதவையாகவும் வைத்திருந்தது. "இந்தியாவின் சிறந்த படைப்புகள் மூலம் உலகம் பயனடைவதோடு, உலகிலுள்ள சிறந்தவற்றை இந்தியாவும் அறிந்து கொள்ள வேண்டும்" என்பதே அவரது தொலைநோக்கு எண்ணமாக இருந்தது. ■

# புதிய இந்தியாவிற்கான



"நாட்டின் அனைத்துத் துறைகளின் வளர்ச்சி பற்றி பட்ஜெட் விவரிக்கிறது. அதாவது, ஒட்டுமொத்த வளர்ச்சி. குறிப்பாக, இந்த பட்ஜெட், நம் நாட்டின் தென் மாநிலங்கள், வட-கிழக்கு மற்றும் வடக்கிலுள்ள லே-லடாக் போன்ற பிராந்தியங்களின் வளர்ச்சியில் சிறப்புக் கவனம் செலுத்தியிருப்பது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. இந்தியாவின் கடலோர மாநிலங்களான தமிழ்நாடு, கேரளா, மேற்குவங்கம் போன்றவற்றை வர்த்தக மையங்களாக மாற்றும் நோக்கில் இந்த பட்ஜெட் பெரும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அஸ்ஸாம் போன்ற வடகிழக்கு மாநிலங்களின் இதுவரை பயன்படுத்தப்படாத வளங்களைப் பயன்படுத்த வகை செய்துள்ளது."

\- பிரதமர் நரேந்திர மோடி

# பட்ஜெட்

*2021-22 பொது பட்ஜெட் சமுதாயத்தின் அனைத்துத் தரப்பினருக்கும் ஏதாவது ஒரு சிறப்பைக் கொண்டதாக உள்ளது. இந்த பட்ஜெட் வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும். இது, அரசின் நீண்டகால திட்டமிடலை பிரதிபலிக்கிறது. அத்துடன், நாடு சுய-சார்பு அடையும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தும் தடுப்பூசியாகவும் இது அமையும்...*

**சுகாதாரம் மற்றும் கட்டமைப்புத் துறையில் இதுவரை இல்லாத வகையில் அதிகளவில் முதலீடு செய்வதற்கான பிரகடனம், சுய-சார்பு அடைவதற்கான வழியாகும்.**

இந்த பட்ஜெட், எதிர்பார்ப்பு, நம்பிக்கை மற்றும் சமுதாயத்தின் அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கியது. இந்தியாவை, சுயசார்பு மற்றும் தன்னிறைவு பெற்ற நாடாக மாற்றுவதற்கான செயல் திட்டத்தைக் கொண்டது இந்த பட்ஜெட். பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ள அம்சங்கள், நாடு முதலில், விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவது, வலுவான கட்டமைப்பு வசதிகள், ஆரோக்கியமான இந்தியா, நல் ஆளுகை, இளைஞர்களுக்கு வாய்ப்புகள், அனைவருக்கும் கல்வி, பெண்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சி போன்ற உறுதிப்பாட்டை வலுப்படுத்தும்.


புதிய தசாப்தத்திற்கான இந்த முதலாவது பட்ஜெட், நாட்டின் முதலாவது டிஜிட்டல் பட்ஜெட் என்ற வரலாற்றுச் சிறப்புக்கும் உரியது. வருவாய் ஈட்டுவதற்காக, சாமான்ய மனிதன் மீது எந்த சுமையையும் இந்த அரசு சுமத்தவில்லை. மாறாக, பங்கு விலக்கல் போன்ற பிற நடவடிக்கைகள் மூலம், வருவாய் திரட்டுவதற்கான வாய்ப்புகளை ஆராய்ந்து வருகிறது. கொரோனா பெருந்தொற்று, பொருளாதாரத்தின் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில், இது அரசுக்கும் சவாலானதாகத்தான் இருக்கும். இதுபோன்ற நீண்டகால திட்டமிடல் மற்றும் பொதுமக்கள் பங்கேற்பு மூலம், இந்த அரசு, நெருக்கடிகளை வாய்ப்பாக மாற்றியது. ‘அனைவரும் இணைவோம் அனைவரும் உயர்வோம்‘ என்பதை தாரக மந்திரமாகக் கொண்ட பட்ஜெட் அறிவிப்புகள், சுகாதாரம் மற்றும் நலவாழ்வு, சொத்து & நிதி முதலீடு மற்றும் கட்டமைப்பு வசதி, மாற்றத்தை விரும்பும் இந்தியாவிற்கான உள்ளடக்கிய வளர்ச்சி, மனித முதலீட்டிற்கு புத்துயிரூட்டுதல், கண்டுபிடிப்பு மற்றும் ஆராய்ச்சி & மேம்பாடு மற்றும் குறைந்தபட்ச அரசு மற்றும் அதிகபட்ச ஆளுகை ஆகிய ஆறு தூண்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.



முதன்முறையாக டிஜிட்டல் பட்ஜெட்: இதுவரை காணாத, கோவிட்-19 பெருந்தொற்று ஏற்படுத்திய நெருக்கடிகளுக்கு இடையே, இந்த தசாப்தத்தின் முதலாவது பட்ஜெட்டை, அதுவும், டிஜிட்டல் வடிவில் தாக்கல் செய்துள்ளார் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன். இம்முறை அச்சுப் பிரதி ஏதும் அச்சிடப்படவில்லை.

### சுகாதாரம் மற்றும் நலவாழ்வு

இந்த பட்ஜெட் சாமான்ய மனிதனின் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு, சுகாதாரப் புரட்சியை ஏற்படுத்தும் என்று கூறினால் அது மிகையல்ல. 2021-22 பட்ஜெட்டில், இந்தியாவின் சுகாதாரம் மற்றும் நலவாழ்வுத் துறைக்கான முதலீடு 137 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இது முறையான சிகிச்சை அளிப்பதை மட்டும் உறுதி செய்வதோடு அல்லாமல், ஆரம்ப, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை சுகாதார அமைப்புகளின் திறனை மேம்படுத்தவும் உதவுவதோடு, தற்போதுள்ள தேசிய அளவிலான மருத்துவமனைகளை வலுப்படுத்துவதுடன், புதிய மற்றும் இனி உருவாகக் கூடிய நோய்களையும் கண்டறிந்து, குணப்படுத்தத் தேவையான அளவிற்கு தேசிய அளவிலான புதிய மருத்துவமனைகளும் உருவாக்கப்படும். ‘பிரதமரின் சுய-சார்பு ஸ்வஸ்த் பாரத் திட்டம்‘ 6 ஆண்டுகளில் ரூ.64,180 கோடி செலவிடும் வகையில் தொடங்கப்பட்டுள்ளது. ஊட்டச்சத்து கிடைப்பதை வலுப்படுத்தும் நோக்கில், அது மக்களை சென்றடைந்து, நல்ல விளைவை ஏற்படுத்த ஏதுவாக, ஊட்டச்சத்து இயக்கம் 2.0-வை அரசு தொடங்க உள்ளது.




### வளர்ச்சிக்கான கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்

எந்த வகையான வளர்ச்சிக்கும், உரிய கட்டமைப்பு வசதிகள் அவசியம் தேவை. இதனை உணர்ந்த அரசு, 2014 முதற்கொண்டே கட்டமைப்பு மேம்பாட்டிற்கு முன்னுரிமை அளித்து வருகிறது, 2021-22 பட்ஜெட்டிலும் இதில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. சாலைக் கட்டமைப்புகளுக்காக மட்டும், அரசு ரூ.1.18லட்சம் கோடியை ஒதுக்கியுள்ளது. தமிழ்நாடு, கேரளா, மேற்குவங்கம் மற்றும் அஸ்ஸாம் மற்றும் பிற மாநிலங்களிலும், சாலைக் கட்டமைப்பை

“ நாட்டின் வேளாண் துறை, நமது விவசாயிகள், நமது கிராமங்கள் ஆகியவை தான் சுய-சார்பு இந்தியாவிற்கு மிகவும் அடிப்படையானவை. மேற்குறிப்பிட்டவை தொடர்ந்து வலுவாக இருந்தால், சுய-சார்பு இந்தியா தொடர்ந்து வலுவானதாக இருக்கும் ”

**பிரதமர் நரேந்திரமோடி**

> “கொரோனா காலத்தில் செய்யப்பட்ட சீர்திருத்தங்களாகட்டும் அல்லது தற்சார்பு இந்தியாவுக்கான உறுதியாகட்டும், கொரோனாவுக்கு எதிரான போரில் எதிர்வினை மட்டுமே ஆற்றாமல் இந்தியா எப்போதுமே துடிப்புடன் செயல்பட்டுள்ளது. இதை முன்னெடுத்து செல்வதற்கான ஆற்றல் இன்றைய பட்ஜெட்டில் உள்ளது”
>
> **பிரதமர் நரேந்திர மோடி**

மேம்படுத்த, பொருளாதார தொழில்வழித்தடங்களை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. தேசிய கட்டமைப்பு குழாய் பாதை, 7,400 திட்டங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. ரயில் பயணத்தை விரைவானதாகவும், சுகமானதாகவும் ஆக்குவதற்காக, இந்திய ரயில்வே இந்தியாவிற்கான தேசிய ரயில் திட்டம் 2030-ஐ தயாரித்துள்ளது. இந்தத் திட்டம், 2030-க்குள் ‘எதிர்காலத்திற்கு தயார்’ என்ற ரயில்வே நடைமுறையை உருவாக்கும். அத்துடன், இந்த பட்ஜெட்டில் ஒரு சாதனை அளவாக, ரயில்வே துறைக்கு ரூ.1,10,055 கோடியை ஒதுக்கியுள்ளது, இதில், ரூ.1,07,100கோடி மூலதனச் செலவுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. சிறிய நகரங்களிலும் மெட்ரோ ரயில் சேவை அறிமுகப்படுத்தப்படும்.

பசுமை எரிசக்திக்கு கூடுதல் கவனம் செலுத்தப்படும். அடுத்த மூன்று ஆண்டுகளில், 100-க்கு மேற்பட்ட நகரங்களில், குழாய்வழி எரிவாயு வினியோகத்தை உறுதி செய்வதே அரசின் நோக்கம். இத்துடன் சேர்த்து, விரிவான ஹைட்ரஜன் எரிசக்தி இயக்கம் ஒன்றும், 2021-22ல் தொடங்கப்படும்.

இந்தியாவை, 5 ட்ரில்லியன் டாலர் பொருளாதாரம் கொண்ட நாடாக மாற்ற, நாட்டின் உற்பத்தித் துறை, இரட்டை இலக்க அடிப்படையில் நிலையான முறையில் வளர்ச்சியடைய வேண்டும். இந்த நிலையை அடைய, சுயசார்பு இந்தியாவை ஏற்படுத்த, உற்பத்தித் துறையில் உலகளாவிய முன்னோடிகளை உருவாக்கும் விதமாக, 13 துறைகளுக்கு உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தை நிதியமைச்சர் அறிவித்துள்ளார். இதற்காக, அடுத்த 5 ஆண்டுகளில், ரூ.1.97லட்சம் கோடி செலவிட அரசு உறுதி பூண்டுள்ளது.

### கிராமங்கள், விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களுக்கு உள்ளடக்கிய வளர்ச்சி


விவசாயிகள், தொழிலாளர், கிராமப்புற இந்தியா, வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த பணிகளுக்கு, இந்த பட்ஜெட்டில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. வேளாண்துறையின் உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதிசெய்ய, கால்நடை வளர்ப்பு, பால்வளம் மற்றும் மீன்வளப் பணிகளுக்கும் உரிய கடன் கிடைக்கச் செய்யும் நோக்கில், விவசாயக் கடன் இலக்கு, 22-ம் நிதியாண்டில் ரூ.16.5 லட்சம் கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கான கடன் எளிதில் கிடைப்பதற்கும், சந்தைகளை வலுப்படுத்துவதற்கும், விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. போட்டித்தன்மையில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்த ஏதுவாக, மேலும் 1,000 சந்தைகளை இ-நாம் நடைமுறையுடன் ஒருங்கிணைக்க பட்ஜெட்டில் வகை செய்யப்பட்டுள்ளது. ஸ்வமித்வா திட்டம், அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கும் விரிவுபடுத்தப்படும். புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கென, இந்த அரசு, ஒரே தேசம் ஒரே குடும்ப அட்டை திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இதன்மூலம், பயனாளிகள் தங்களுக்கான ரேஷன் பொருட்களை, நாட்டின் எந்தப் பகுதியிலும் பெற்றுக் கொள்ளலாம். நான்கு தொழிலாளர் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. ஸ்டான்ட் அப் இந்தியா திட்டத்தின் கீழ், எஸ்.சி, எஸ்.டி. வகுப்பினர் மற்றும் பெண்களுக்கு கடன் கிடைப்பதை மேலும் எளிமையாக்கும் வகையில், ஆரம்ப பணத் தேவையை, 25 சதவீதத்திலிருந்து, 15 சதவீதமாகக் குறைக்கப்படும் என நிதியமைச்சர் அறிவித்துள்ளார். அனைத்திற்கும் மேலாக, குறு,சிறு, நடுத்தரத் தொழில் துறைக்கு ஆதரவளிக்கும் விதமாகவும், எண்ணற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தத் துறைக்கு, ரூ.15,700 கோடியை அரசு ஒதுக்கியுள்ளது - இது 2020-21ஐ விட இரண்டு மடங்குக்கும் அதிகமானதாகும்.

### கல்வி மற்றும் ஆராய்ச்சியில் முன்னேற்றம்


சமுதாயத்தின் மேம்பாட்டில், தரமான கல்வி முக்கியப் பங்கு வகிக்கிறது. கல்வி மற்றும் ஆராய்ச்சித் துறைகளுக்கென பட்ஜெட்டில் சிறப்பு ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. புதிய தேசியக் கல்விக் கொள்கையின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கும் விதமாக, 15,000 பள்ளிகளை தரமிக்கவையாக மேம்படுத்தவும், 100 புதிய சைனிக் பள்ளிகள் மற்றும் 750 ஏகலைவா மாதிரி உறைவிடப் பள்ளிகளைத் திறக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. தர நிர்ணயம், அங்கீகாரம், முறைப்படுத்துதல் மற்றும் நிதியுதவி செய்வதற்காக, ஒரே குடையின்கீழ் 4 தனித்தனி அமைப்புகளுடன், இந்திய உயர்கல்வி ஆணையம் ஒன்றை ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. தேசிய அளவில் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டிய துறைகளில் கவனம் செலுத்தும் நோக்கில், ஒட்டுமொத்த ஆராய்ச்சி சூழலை வலுப்படுத்த, தேசிய ஆராய்ச்சி அறக்கட்டளை ஒன்றை அமைக்க வேண்டுமென தேசிய கல்விக் கொள்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கென, 5 ஆண்டுகளில், ரூ.50,000 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

குறைந்தபட்ச அரசு, அதிகபட்ச ஆளுகை-யின் கீழ், 75 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய மூத்த குடிமக்களின் வரிச்சுமையைக் குறைக்கவும், பட்ஜெட்டில் வகை செய்யப்பட்டுள்ளது. ஓய்வூதியம் மற்றும் வட்டி வருவாயை மட்டுமே கொண்டுள்ள இந்த மூத்த குடிமக்கள், வருமானவரிக் கணக்கு தாக்கல் செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுவார்கள். பெரு நிறுவனங்களுக்கான வரியும், உலகிலேயே மிகக் குறைந்த அளவிற்குக் குறைக்கப்பட்டுள்ளது. ■


## ஒரு ரூபாய் வருவாய் கிடைக்கும் விதம்




## ஒரு ரூபாய் செலவு செய்யப்படும் விதம்




## பட்ஜெட் ஒரு பார்வை




# பெருந்தொற்று பாதிப்பு ஏற்பட்டாலும், கூடுதல் வரிச்சுமை கிடையாது

*வேளாண் கட்டமைப்பு மற்றும் வளர்ச்சி கூடுதல் வரியால் பாதிப்பு ஏற்படாதவாறு, பெட்ரோல் மற்றும் டீசல் மீதான ஆயத்தீர்வையை அரசு குறைத்திருப்பதன் மூலம், சாமான்ய மனிதர்களுக்கு சுமை ஏற்படுத்தவில்லை. வரிக் கட்டமைப்பிலும் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை*


கொரோனா பெருந்தொற்று காலத்தில், சுய-சார்பு இந்தியாவை உருவாக்க பிரதமர் நரேந்திர மோடி விடுத்துள்ள அழைப்பு, பொருளாதாரத்திற்கு ஊக்கமளிக்க உதவியதோடு, உலகெங்கும் அதிகளவில் உச்சரிக்கப்படும் வார்த்தையாகவும் மாறிவிட்டது. அதே சுய-சார்பு இந்தியா, புதிய இந்தியாவிற்கான பட்ஜெட்டிலும் பிரதிபலித்துள்ளது.

ஒட்டுமொத்த உலகமும், கொரோனா பெருந்தொற்றுக்கு எதிராக போராடிவரும் வேளையில், மத்திய அரசு, கட்டமைப்புகளை வலுப்படுத்துவதற்கான முக்கிய நடவடிக்கைகளை எடுத்திருப்பதோடு மட்டுமின்றி, பொருளாதாரத்தை விரைவுபடுத்தவும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. வரிக் கட்டமைப்பில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்றாலும், 75 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள், வருமான வரிக் கணக்கு தாக்கல் செய்வதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளனர். இது தவிர, வருமான வரிக் கணக்கு தாக்கலை எளிமைப்படுத்தியது, மறுமதிப்பீட்டிற்கான கால அவகாசத்தை, ஆறு ஆண்டுகளிலிருந்து மூன்று ஆண்டுகளாக குறைத்தது உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள், பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ளன.

முக்கியத்துறைகளின் பங்குவிலக்கலுக்கான புதிய கொள்கைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 2020-21 நிதியாண்டில், நிதிப் பற்றாக்குறை 9.5சதவீதமாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. அதேவேளையில், 2021-22 நிதியாண்டின் நிதிப் பற்றாக்குறை, 6.8 சதவீதமாக இருககுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இதனை, 2025-2026க்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.5 சதவீதத்திற்கும் குறைவாகக் கொண்டுவருவதற்கு, மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. ■

## நிதிப் பற்றாக்குறை

ஜிடிபியில் சதவீதம்






- கடந்த சில மாதங்களில் சாதனை அளவுக்கு ஜி.எஸ்.டி. வசூல்
- வருமான வரி மேல்முறையீட்டு டிரிபியூனல் நேரில் ஆஜராகாமல் செயல்படும் வகையில் மாற்றப்படும்

**₹12,00,000 கோடி**

அடுத்த ஆண்டுக்கான மொத்த கடன்

**₹34,83,000 கோடி**

அடுத்த ஆண்டில் அரசு செலவு செய்ய உத்தேசித்துள்ள தொகை



**₹1,500 கோடி**

டிஜிட்டல் பட்டுவாடா முறைகளை ஊக்குவிக்க ஒதுக்கப்பட்ட தொகை

## இந்தியாவின் அடையாளத்தை மாற்றப் போகும் நான்கு புதிய திட்டங்கள்

### ஜல் ஜீவன் மிஷன் (நகர்ப்புறம்)



இத் திட்டத்தின் கீழ், 4,378 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் 2.86 கோடி வீடுகளுக்கு குழாய் இணைப்பு மூலம் தண்ணீர் வழங்குதல் மற்றும் 500 அம்ருத் நகரங்களில் திரவக் கழிவு மேலாண்மைத் திட்டங்களை அமல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஐந்தாண்டுகளில் ரூ.2,87,000 கோடி செலவில் இந்த இலக்குகள் எட்டப்படும்.

### தூய்மையான இந்தியா, ஆரோக்கியமான இந்தியா

சுகாதாரத் துறைக்கான பட்ஜெட் 10 சதவீதத்துக்கு மேல் அதிகரிக்கப்பட்டுள்ளது. தூய்மையான, பாதுகாப்பான குடிநீர் அளிக்கும் வசதியுடன் இணைப்பதன் மூலம் சுகாதாரத் துறையில் நல்ல பயன்கள் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பது இதன் நோக்கம். பிரதமரின் தற்சார்பு ஸ்வஸ்த் பாரத் திட்டம் தொடங்கப் பட்டுள்ளது. இதில் ஆறு ஆண்டு காலத்தில் சுகாதார கட்டமைப்பு வசதிகளுக்கு ரூ.64,180 கோடி செலவிடப்படும். நகர்ப்புற தூய்மை பாரதம் திட்டம் 2.0 ஐந்தாண்டு காலத்தில் மொத்தம் ரூ.1,41,678 கோடி ஒதுக்கீட்டில் அமல் செய்யப்படும்.

### சுத்தமான காற்று

காற்று மாசு காரணமாக ஏற்படும் பிரச்சினைகளைக் கையாள்வதற்கு,



10 லட்சத்துக்கும் மேல் மக்கள் தொகை உள்ள 42 நகர்ப்புற மையங்களுக்கு பட்ஜெட்டில் ரூ.2,217 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது.

### ஸ்கிராப்பிங் கொள்கை



பழைய மற்றும் தகுதியற்ற வாகனங்களை படிப்படியாக பயன்பாட்டில் இருந்து நீக்குவதற்காக, புதிய ஸ்கிராப்பிங் கொள்கை அறிவிக்கப் பட்டுள்ளது. தானியங்கி தகுதிகாண் மையங்கள் மூலம் வாகனங்களுக்கு, தகுதி பரிசோதனை செய்யப்படும். தனிப்பட்ட பயன்பாட்டுக்கான வாகனங்கள் 20 ஆண்டுகளுக்குப் பிறகும், வணிக பயன்பாட்டு வாகனங்கள் 15 ஆண்டுகளுக்குப் பிறகும் இந்தப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும்.

### மிஷன் போஷான் 2.0

உயர் விருப்பம் கொண்ட 112 மாவட்டங்களில் சத்தான உணவு, வழங்குதல், மிஞ்சிய நிலையை எட்டுதல் மற்றும் உரிய பயன்கள் கிடைக்கும் நிலை ஆகியவற்றை பலப்படுத்த, கூடுதல் ஊட்டச்சத்து திட்டத்தையும் போஷான் அபியான் திட்டத்தையும் அரசு ஒன்றாகச் சேர்க்கும். ■

கட்டமைப்பு வசதி

# புதிய இந்தியாவை உருவாக்குவதற்கு ஆயத்தமாதல்

பொருளாதாரத்திற்கு மேலும் உந்துதல் அளிப்பதற்கு, கட்டமைப்புகள் விரிவாக்கத்திற்கான திட்டங்களையும் மற்றும் நெடுஞ்சாலைகள், ரயில்வே மற்றும் மெட்ரோ உடன் இணைந்து பொதுப் போக்குவரத்துத் துறைக்கு உத்வேகம் அளிக்கவும் பட்ஜெட்டில் திட்டங்கள் உள்ளன.



ஒருகாரோனா காலத்தில் பின்னடைவு கண்ட பொருளாதாரம், ஆங்கில V - எழுத்தின் வடிவில் மீட்சிப் பாதையில் உள்ளது. இதற்கு மேலும் உந்துதல் தருவதற்கு, கட்டமைப்பு மேம்பாட்டில் கவனம் செலுத்தப்படுகிறது. கட்டமைப்பு வசதி உருவாக்கத்தில் வெளிநாட்டு நேரடி முதலீடுகளுக்கான விதிமுறைகளைத் தளர்த்துவதன் மூலம் வேலைவாய்ப்புகளை அதிகரிக்க, புதிய பொருளாதார நெடும்பாதைகள் உருவாக்கப்படும். புதியதாக ஒரு வளர்ச்சி நிதி நிறுவனம் (டி.எப்.ஐ.) ரூ.20 ஆயிரம் கோடியில் தொடங்கப்படும். இந்த நிறுவனம் மூலம் 3 ஆண்டுகளில் ரூ.5 லட்சம் கோடி அளவுக்குக் கடன் தர வேண்டும் என்பது நோக்கமாக இருக்கும்.

## ஓராண்டில் 8500 கி.மீ. நீளத்துக்கு புதிய சாலைகள்

ரூ.5.35 லட்சம் கோடி பாரத்மாலா பரியோஜனா திட்டத்தின் கீழ், 2022 மார்ச் மாதத்திற்குள் அரசு மேலும் 8,500 கிலோ மீட்டர் நீளத்துக்கான சாலைகளுக்கான பணிகளை அளிக்கும். அத்துடன் கூடுதலாக 11 ஆயிரம் கிலோ மீட்டர் நீளத்துக்கு தேசிய நெடுஞ் சாலை பணிகள் முடிக்கப்படும். இதுவரை சாலைப் போக்குவரத்து துறைக்கு கூடுதலாக ரூ.1,18,101 கோடி அளிக்கப்பட்டுள்ளது. அசாமில் 1,300 கி.மீ.க்கும் அதிகமான தேசிய நெடுஞ்சாலைகள் அமைக்க ரூ.34,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் 3,500 கி.மீ. நீளத்துக்கான தேசிய நெடுஞ்சாலைப் பணிகள் ரூ.1.03 லட்சம் கோடி முதலீட்டில் நிறைவேற்றப்படும். கேரளாவில் 1,100 கி.மீ. நீளத்துக்கான தேசிய நெடுஞ்சாலைகள் அமைக்கப்படும். இதில் மும்பை - கன்னியாகுமரி பெருவழித் தடத்தின் 600 கி.மீ. சாலையும் அடங்கும். இத் திட்டம் ரூ.65,00 கோடியில் செயல்படுத்தப்படும்.

## எதிர்கால தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் ஆயத்தமாகும் ரயில்வே

2030 ஆம் ஆண்டுக்குள், `எதிர்கால தேவைகளை பூர்த்தி செய்யும்' வகையிலான ரயில்வே வசதிகளை உருவாக்க திட்டமிடப் பட்டுள்ளது. `மேக் இன் இந்தியா' திட்டத்தை ஊக்குவிக்க, சேமிப்புக்

## கிராமப்புற இந்தியா

**₹40,000 கோடி**
கிராமங்களில் கட்டமைப்புகளை பலப்படுத்த ரூ.40 ஆயிரம் கோடி

**86 %**
ஒரே நாடு ஒரே ரேஷன் அட்டை மூலம் 86% மக்களுக்குப் பயன்

## பொதுப் போக்குவரத்து

**₹18**
பொதுப் போக்குவரத்தை மேம்படுத்த ரூ.18 ஆயிரம் கோடி

## இந்திய ரயில்வே

**100 %**
100% ரயில் பாதைகளையும் 2023-க்குள் மின்மயமாக்குதல்

ரயில்வேக்கு ரூ.1,10,055 கோடி. அதில் ரூ. 1,07,100 கோடி மூலதன செலவுக்காக



கிடங்கு செலவுகள் குறைக்கப்படுகின்றன. மேற்குப் பகுதியில் பிரத்யேக சரக்கு நெடும்பாதை (டி.எப்.சி.) மற்றும் கிழக்குப் பகுதி டி.எப்.சி. ஆகியவை 2022 ஜூன் மாதத்திற்குள் தொடங்கப்படும்.

## `மெட்ரோலைட்' மற்றும் `மெட்ரோநியோ' சேவைகள் தொடங்குதல்

பொதுப் பேருந்து போக்குவரத்து சேவைகளை மேம்படுத்த ஆதரவு அளிக்கும் வகையில் ரூ.18,000 கோடி செலவில் ஒரு புதிய திட்டம் தொடங்கப்படும்.

சென்னையில் 118.9 கி.மீ. நீளத்துக்கு மெட்ரோ ரயில் சேவை பணிகள் மேற்கொள்ள ரூ.63,246 கோடி ஒதுக்கப்படுகிறது. கொச்சியில் 11.5 கி.மீ. நீளத்துக்கான மெட்ரோ ரயில் திட்டம் ரூ.1,957.05 கோடியில் உருவாக்கப்படும். `மெட்ரோலைட்' மற்றும் `மெட்ரோநியோ' என்ற இரு புதிய தொழில்நுட்பங்கள் முதல்நிலை மற்றும் இரண்டாம் நிலை நகரங்களில் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படும்.

## நுகர்வோர் தாங்கள் விரும்பும் மின்விநியோக நிறுவனத்தைத் தேர்வு செய்யும் வசதி

மின் விநியோக வசதியை மேம்படுத்த ரூ.3,05,984 கோடி செலவில் ஒரு புதிய திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. சீர்திருத்தங்கள் மற்றும் செயல் திறன் அடிப்படையிலான, நல்ல முன்னேற்றத்தைக் காட்டும் மின் விநியோகத்துக்கு ஊக்கம் தருவதாக இத் திட்டம் இருக்கும். ப்ரீ-பெய்டு ஸ்மார்ட் மீட்டர் வசதி, மின் விநியோக வசதிகளை மேம்படுத்துதல் போன்ற வசதிகளுக்கு மின் விநியோக நிறுவனங்களுக்கு இத் திட்டத்தின் கீழ் உதவி அளிக்கப்படும்.

## ஜல் ஜீவன் மிஷன் (நகர்ப்புறம்) தொடங்கப்படும்

2.86 கோடி வீடுகளுக்கு குழாய் இணைப்பு மூலம் தண்ணீர் வழங்குவதற்காக, ஜல் ஜீவன் மிஷன் (நகர்ப்புறம்) திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. 500 அம்ருத் நகரங்களில் திரவக் கழிவு மேலாண்மை வசதிகள் செய்யப்படும். 2021 முதல் 2026 வரையில் நகர்ப்புற தூய்மை பாரதம் திட்டம் 2.0 அமல்படுத்தப்படும்.

## உஜ்வாலா திட்டத்தில் ஒரு கோடி புதிய குடும்பங்கள் சேர்ப்பு

ஒரு கோடி கூடுதல் பயனாளிகள் பயன்பெறும் வகையில் உஜ்வாலா திட்டம் விரிவுபடுத்தப்படும். நகர எரிவாயு விநியோக நெட்வொர்க்கில், அடுத்த 3 ஆண்டுகளில் மேலும் 100 மாவட்டங்கள் சேர்க்கப்படும். ஜம்மு காஷ்மீரில் எரிவாயுக் குழாய் பதிக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

## குறைந்த விலை வீட்டுவசதித் திட்டம் அறிவிப்பு

குறைந்த விலையில் வீடுகள் கிடைக்கச் செய்வதற்காக, குறைந்த விலை வீட்டுவசதித் திட்டங்களுக்கு வரி செலுத்துவதைத் தள்ளி வைக்கும் திட்டம், மேலும் ஓராண்டுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. குறைந்தவிலை வீடு வாங்குவதற்காக வாங்கிய கடனுக்கான வட்டியில் ரூ.1.5 லட்சம் வரையிலான தொகைக்கு வரிக் கழிவு அளிக்க கூடுதல் சலுகை அளிக்கப்படுகிறது. ■

## தண்ணீர் தான் வாழ்க்கை

**2.86** கோடி வீடுகளுக்கு குழாய் இணைப்பு மூலம் தண்ணீர்

**₹2.87** ஜல் ஜீவன் மிஷன் (நகர்ப்புறம்) திட்டத்துக்கு ரூ.2.87 லட்சம் கோடி

## பயணம் இனி எளிதாகும்

**₹1.18** சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகத்துக்கு ரூ.1.18 லட்சம் கோடி

**8500** மார்ச் 2022-க்குள் 8500 கி.மீ. சாலைப் பணிகள் தொடங்கும்

முக்கிய துறைமுகங்களில் 7 திட்டங்கள் பி.பி.பி. முறையில் செயல்படுத்த ரூ.2000 கோடி




# சீர்திருத்தங்களின் தடுப்பு மருந்து

*ரூ. 2,23,846 கோடி ஒதுக்கீட்டுடன் இதுவரையில் இதுதான் இந்தியாவின் மிகப் பெரிய சுகாதாரத்துக்கான பட்ஜெட்டாக உள்ளது. கடந்த ஆண்டைவிட மிக அதிகமாக 137 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.*

முதல்முறையாக இந்தியாவின் பொது பட்ஜெட்டில் இப்போதுதான் சுகாதாரத் துறைக்கு மிகப்பெரிய அளவிலான தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்சார்பு இந்தியாவுக்கான ஆறு தூண்களில் சுகாதாரம் மற்றும் நலவாழ்வு என்பது தான் மிக முக்கியமான துறையாக இருக்கிறது என்று பிரதமர் நரேந்திர மோடி கூறியுள்ளார். கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு இந்த துறைக்கு 137 சதவீதம் அதிகமாக நிதி ஒதுக்கி ரூ. 94,452 கோடி அளிக்கப்பட்டுள்ளது.

கொரோனா பெருந்தொற்று காலத்தில் கற்றுக்கொண்ட பாடங்களின் அடிப்படையில், தொற்றும் தன்மையுள்ள நோய்களை கண்டறிதல், தடுத்தல் மற்றும் சிகிச்சை அளித்தல் ஆகியவற்றுக்கு வலுவான கட்டமைப்பு வசதிகளை உருவாக்க வேண்டும் என்பதற்கு அரசு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளது. இது போன்ற நோய்களை கண்டறிவதற்கு ஒன்றியங்கள் முதல் மாவட்டங்கள் வரை மற்றும் தேசிய அளவில் மருத்துவ பரிசோதனை ஆய்வகங்களின் நெட்வொர்க் ஒன்று உருவாக்கப்படும். பிராந்திய அளவில் நான்கு வைரஸ் நோய் கண்டுபிடிப்பு ஆய்வகங்கள் அமைக்கப்படும். இதுவரையில் நாட்டின் புனே நகரில் மட்டுமே இதுபோன்ற ஆய்வகம் உள்ளது. 17 புதிய பொது சுகாதார யூனிட்கள் தொடங்குவது மற்றும் ஏற்கனவே செயல்பாட்டில் உள்ள 33 பொது சுகாதார யூனிட்களை

## சுகாதாரக் கட்டமைப்பு வசதிகள் எப்படி மேம்படும்



**₹ 35,000**

கோவிட்-19 தடுப்பூசிக்காக ரூ 35 ஆயிரம் கோடி ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது



**3382**

11 மாநிலங்களில் 3382 ஒன்றிய பொது சுகாதார யூனிட்கள்

**28,812**

பிரதமரின் தற்சார்பு ஸ்வஸ்த் பாரத் யோஜ்னா மூலம் 28,812 கிராமப்புற & நகர்ப்புற சுகாதாரம் & நலவாழ்வு மையங்கள் அமைக்கப்படும்



**11 மாநிலங்களில் அனைத்து மாவட்டங்களிலும் ஒருங்கிணைந்த பொது சுகாதார ஆய்வகங்கள் தொடங்கப்படும்.**

**நாடு முழுக்க புதிய நோய்களை அடையாளம் கண்டு, பரிசோதனை மூலம் கண்டறிவதற்கான கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படும்.**

**சுகாதாரத் துறையிலும் ஆராய்ச்சிகள் ஊக்குவிக்கப்படும். நியூமோகோக்கல் தடுப்பூசி நாடு முழுக்க அளிக்கப்படும்**

**மேலும் இரண்டு கொரோனா தடுப்பு மருந்துகளுக்கான ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன**

*கோவிட்-19 தடுப்பூசிகளுக்கு ரூ 35 ஆயிரம் கோடி ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. தேவை ஏற்பட்டால் கூடுதல் நிதி ஒதுக்கப்படும் என்று நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார். இப்போது இரண்டு தடுப்பூசி மருந்துகளை இந்தியாவில் பயன்படுத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. விரைவில் மேலும் இரு தடுப்பூசி மருந்துகளுக்கு அனுமதி அளிக்கப்படும். 110 க்கும் மேற்பட்ட நாடுகள் இந்தியாவிடம் இருந்து தடுப்பூசியை வாங்க ஆர்வம் காட்டியுள்ளன.*

பலப்படுத்துவது ஆகியவை இதில் செய்யப்படும். நாட்டிற்குள் மக்கள் நுழையக்கூடிய பகுதிகளாக கருதப்படும் 32 விமான நிலையங்கள் 11 துறைமுகங்கள் மற்றும் நில எல்லையில் மக்கள் கடந்து வரும் 7 இடங்களில் இது போன்ற பிரிவுகள் உருவாக்கப்படும். 15 சுகாதார எமர்ஜென்சி செயல்பாட்டு மையங்களும் 2 நடமாடும் மருத்துவமனைகளும் உருவாக்கப்படும். உலக சுகாதார நிறுவனத்தின் தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்துக்கான பிராந்திய ஆராய்ச்சி தளம் ஒன்றும் நாட்டில் உருவாக்கப்படும்.

**₹64,180**

**ஆறு ஆண்டு காலத்தில் பிரதமரின் தற்சார்பு ஸ்வஸ்த் பாரத் யோஜ்னா மூலம் செலவழிக்கப்படும் தொகை**

**4**

**வைரஸ் நோய்கள் குறித்த 4 தேசிய இன்ஸ்டிட்யூட்கள் உருவாக்கப்படும். இப்போது புனேவில் மட்டும் ஒரு இன்ஸ்டிடியூட் உள்ளது. 9 உயிரி பாதுகாப்பு மூன்றாம் நிலை ஆய்வகங்கள் உருவாக்கப்படும்**

**05**

**நோய்க் கட்டுப்பாட்டுக்கான தேசிய மையத்தின் (என்.சி.டி.சி.) பிராந்திய கிளைகள் - 05**

**20**

**மெட்ரோபாலிடன் சுகாதார கண்காணிப்பு யூனிட்கள் 20**

## ஆயுஷ் பட்ஜெட் அதிகரிப்பு



**ஆயுஷ் அமைச்சகத்துக்கு இந்த பட்ஜெட்டில் ரூ.2,970 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டைவிட ரூ.848 கோடி அதிகம்.**

### பிரதமரின் தற்சார்பு ஸ்வஸ்த் பாரத் யோஜ்னா தொடக்கம்

மத்திய அரசு நிதியில் பிரதமரின் தற்சார்பு ஸ்வஸ்த் பாரத் யோஜ்னா என்ற திட்டம் அமலபடுத்தப்படும் என பட்ஜெட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே உள்ள தேசிய சுகாதார மிஷனுடன் கூடுதலாக இத் திட்டம் அமல் செய்யப்படும். இதற்காக ரூ.64,180 கோடி செலவிடப்படும். ஆரம்ப, செகன்டரி மற்றும் தீவிர சுகாதார முறைமை வசதிகளை மேம்படுத்த இத் திட்டத்தில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 50 ஆயிரம் குழந்தைகளின் உயிரைக் காப்பாற்றும் நியூமோகோக்கல் தடுப்பு மருந்து

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட நியூமோகோக்கல் தடுப்பு மருந்து நாடு முழுக்க அளிக்கப்படும். இதனால் சுமார் 50 ஆயிரம் குழந்தைகள் காப்பாற்றப்படுவார்கள். இப்போது இத் திட்டம் 5 மாநிலங்களில் மட்டும் அமல் செய்யப்படுகிறது. ■



# எம்.எஸ்.எம்.இ. துறைக்கு உத்வேகம் அளித்தல்

**பொருளாதாரத்தில் மீட்சியை உருவாக்க பட்ஜெட்டில் குறு, சிறு, நடுத்தர தொழில் துறைக்கு (எம்.எஸ்.எம்.இ.) ரூ 15,700 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு பட்ஜெட் ஒதுக்கீட்டை விட இது இரண்டு மடங்கு அதிகம்**

**05** கோடி புதிய வேலைகள் உருவாக்கப்படும்

**ஜவுளித் துறையை பலப்படுத்த 7 புதிய ஜவுளி மெகா பூங்காக்கள் உருவாக்கப்படும்**

**13 துறைகளில் பி.எல்.ஐ. திட்டங்களுக்கு அடுத்த 5 ஆண்டுகளில் ரூ.1.97 லட்சம் கோடி**

**74%** காப்பீட்டுத் துறையில் அனுமதிக்கக் கூடிய எப்.டி.ஐ. அதிகரிப்பு

பொருளாதாரத்தின் முதுகெலும்பாக கருதப்படும் எம்எஸ்எம்இ துறை கொரோனா காலத்தில் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு பட்ஜெட்டில் இந்த துறைக்கு அதிகபட்ச அளவுக்கு நிவாரணங்களை நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் வைத்திருப்பதற்கு இதுதான் காரணமாக இருக்கிறது. முதலீட்டு வரம்பு மற்றும் விற்றுமுதல் அடிப்படையில் எம்எஸ்எம்இ நிறுவனங்களுக்கான வரையறைகளை அரசு மீண்டும் ஒரு முறை மாற்றி அமைத்துள்ளது. இதற்குமுன் ஜூன் 2020 இந்த வரையறைகள் மாற்றப்பட்டன. புதிய வரையறையின் படி சிறிய நிறுவனங்களுக்கான மூலதன அடிப்படை ரூ.50 லட்சம் என்பதில் இருந்து ரூ 2 கோடி ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதன்மூலம் இரண்டு லட்சம் நிறுவனங்கள் பயன்பெறும். அரசு தகவல் தொகுப்பு ஆய்வு, செயற்கை புலன் அறிதல், எந்திரங்கள் மூலம் கற்றலால் முன்னெடுக்கப்படும் MCA 21 வெர்சன் 3.0 -வை 2021- 22 ஆம் ஆண்டில் தொடங்கும். இ-ஆய்வு, இ-விசாரித்து முடிவெடுத்தல், இ-கலந்தாய்வு, ஒத்திசைவு மேலாண்மை போன்ற கூடுதல் அம்சங்கள் இதில் இடம் பெறும். பொருளாதார வளர்ச்சியில் எம்எஸ்எம்இ துறையின் பங்களிப்பை 30 சதவீதத்தில் இருந்து 40 சதவீதமாக உயர்த்த மத்திய அரசு உத்தேசித்துள்ளது.

**ஆயத்த ஆடைகள், தோல் பொருட்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் ஏற்றுமதிக்கு ஊக்கத் தொகை வழங்குவதற்காக, சுங்கம் இல்லாமல் இறக்குமதி செய்வதில் விலக்கு அளிக்கப்படும் நடைமுறை திருத்தி அமைக்கப்படுகிறது.**

எம்எஸ்எம்இ துறையின் ஏற்றுமதி அளவை 48 சதவீதத்திலிருந்து 60 சதவீதமாக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்காக முதன்முறையாக முதலீட்டாளர் சாசனம் ஒன்றை உருவாக்கும் திட்டமும் உள்ளது. ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கும் காலம் மேலும் ஒரு ஆண்டுக்கு நீட்டிக்கப்படுகிறது. இரும்பு மற்றும் அது தொடர்பான கச்சாப் பொருளுக்கு சுங்கக் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது. இந்திய சூரிய சக்தி கார்ப்பரேஷனுக்கு ரூ 1000 கோடி மூலதனம் கூடுதலாக அளிக்கப்பட்டுள்ளது. இந்திய புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மேம்பாட்டு ஏஜென்சிக்கு ரூ 1,500 கோடி அளிக்கப்பட்டுள்ளது ■


# ஆராய்ச்சி மற்றும் தொழில் திறன் மேம்பாட்டுக்கு ஊக்கத் தொகை அளித்தல்



**தேசிய கல்விக் கொள்கையை அமல் செய்வதற்கு முக்கியத்துவம்: திறன் அடிப்படையிலான கல்வி குறித்து கவனம் செலுத்த பல புதிய நிகழ்ச்சிகள் நடத்தப்படும்**

₹50,000 | தேசிய ஆராய்ச்சி பவுன்டேசனுக்கு ரூ.50,000 கோடி

750



15,000

**மலைவாழ் மக்கள் வாழும் பகுதிகளில் ஏகலைவா மாடலில், 750 வசிப்பிடப் பள்ளிகள் தொடங்கப்படும்**

**தேசிய கல்விக் கொள்கையின் கீழ் 15,000 பள்ளிகள் பலப்படுத்தப்படும்**

தேசிய கல்விக் கொள்கையை அமல் செய்வதற்கு சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. தேசிய கல்விக் கொள்கையின்படி, தரமான கல்வி என்பதுடன் பள்ளிகளின் கட்டமைப்பு வசதிகளும் மேம்படுத்தப்படும். தொழில்திறன் சார்ந்த கல்வி என்பதற்கு அரசு முக்கியத்துவம் அளிக்கும். லே பகுதியில் புதியதாக மத்திய பல்கலைக்கழகம் திறப்பதற்கு ஓர் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. உயர்கல்வியை சிறப்பானதாக ஆக்குவதற்காக உயர்கல்வி கமிஷன் அமைப்பதற்கான சட்ட மசோதா அறிமுகம் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசுக்கும் மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளுக்கும் கல்வியில் திட்டமிடல், நிர்வாகம் உள்ளிட்ட செயல்பாடுகளுடன் இணைந்து, கற்பித்தல் மற்றும் கற்றல் செயல்பாடுகளுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் தேசிய டிஜிட்டல் கல்வி கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படும். ஆட்சி நிர்வாகம் மற்றும் கொள்கை சார்ந்த விஷயங்களை முக்கியமான இந்திய மொழிகளில் மக்கள் அறிந்து கொள்ள வசதியாக தேசிய மொழிபெயர்ப்பு மிஷன் ஒன்றும் தொடங்கப்படும். தாழ்த்தப்பட்ட மாணவ மாணவியருக்கு மெட்ரிக் நிலைக்கு மேலான கல்வி உதவித்தொகை தொடர்ந்து வழங்கப்படும். இளைஞர்களின் திறன்களை மேம்படுத்த அரசு முன் முயற்சிகள் எடுத்துவருகிறது. ஐக்கிய அமீரகம் மற்றும் ஜப்பான் நாடுகளின் கூட்டு முயற்சியுடன் தொழில்துறை திறன்கள், தொழில்நுட்பங்கள், அறிவு சார் விஷயங்களை பரிமாறிக் கொள்வதற்கான சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்படும். ■

**ஏகலைவா மாடல் வசிப்பிட பள்ளிகளை தொடங்குவதற்கு, மலைவாழ் மக்கள் வாழும் பகுதிகளில் ரூ 38 கோடி அளவுக்கும், மலைகள் மற்றும் செல்வதற்கு சிரமமான பகுதிகளில் ரூ 48 கோடி அளவுக்கும் செலவிட வரம்பு உயர்த்தப்பட்டுள்ளது**

வேளாண்மை

# துடிப்பான வேளாண் வளர்ச்சிக்கு



**விவசாயிகளுக்கு உற்பத்தி விலையைவிட ஒன்றரை மடங்கு வரையில் குறைந்தபட்ச ஆதார விலை (எம். எஸ். பி.) அதிகரிப்பு; 2022 ஆம் ஆண்டுக்குள் விவசாயிகள் வருமானத்தை இரட்டிப்பாக்கும் வகையில் முடிவுகள் எடுக்கப்படுகின்றன.**




பருத்தி இறக்குமதி மீது சுங்க வரி உயர்வு



வேளாண் கடன் இலக்கு ரூ.16.5 லட்சம் கோடியாக உயர்த்தப் பட்டுள்ளது.
நுண் நீர்ப்பாசன நிதியம் ரூ.10,000 கோடியாக இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது

கொச்சி, சென்னை, விசாகப்பட்டினம், பாரதீப், பெடுவாகாட் ஆகிய ஐந்து முக்கிய மீன்பிடி துறைமுகங்கள் பொருளாதார செயல்பாட்டு மையங்களாக மேம்படுத்தப்படும்

இந்திய பொருளாதாரத்தின் பெரும்பகுதி விவசாயத்தை சார்ந்து இருக்கிறது. விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த ஆண்டு பொது பட்ஜெட்டில் இந்தத் துறைக்கு நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அதிக முக்கியத்துவம் அளித்துள்ளார். சேமிப்பு கிடங்கு வசதி, குளிர்பதன வசதி, வேளாண் பொருட்கள் போக்குவரத்து வசதி ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான வேளாண் கட்டமைப்பு வசதிகள் தொடர்பாக பல்வேறு திட்டங்களை பட்ஜெட்டில் அவர் குறிப்பிட்டுள்ளார். ஏ.பி.எம்.சி மண்டிகளில் நல்ல வசதிகளை உருவாக்குவதற்காக வேளாண்மை கட்டமைப்பு நிதியத்தில் இருந்து அவை மேம்படுத்தப்படும். வேளாண்மை துறைக்கு 2021 - 22 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டில் ரூ. 1.48 லட்சம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. எப்.பி.ஓ.க்கள் ஊக்குவிக்கப்படுவதன் மூலம் சிறு விவசாயிகள் வருமானம் அதிகரிக்கும். வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்த உற்பத்திப் பொருள்களின் மதிப்பு கூட்டுதலை ஊக்குவிப்பதற்காக ஆபரேஷன் கிரீன் திட்டத்தின்கீழ் அழுகும் தன்மையுள்ள பொருள்களின் பட்டியலில் மேலும் 22 காய்கறிகள் சேர்க்கப்பட்டுள்ளன. கடல்பாசி சாகுபடியை ஊக்குவிப்பதற்காக தமிழகத்தில் பன்முக பயன்பாடு கொண்ட கடல்பாசி பூங்கா ஒன்றை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. ஊரக கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கு ரூ 40,000 கோடி செலவிடப்படும். தேயிலைத் தோட்ட தொழிலாளர்களின் மேம்பாட்டுக்காக ரூ 1,000 கோடி அளிக்கப்படும். **e-NAM** என்ற ஆன்லைன் வர்த்தகத்தில் 1,000 புதிய மண்டிகள் சேர்க்கப்படும் ■

**கிராமப்புற பகுதிகள் மேம்பாட்டுடன் மீன்வளம் மற்றும் தோட்டக்கலைத் துறையில் கவனம்**

**அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் SWAMITVA திட்டம் அமல் செய்யப்படும்**

பாதுகாப்பு

# பாதுகாப்புத் துறை பட்ஜெட் ரூ. 4.78 லட்சம் கோடியாக உயர்வு

**நவீனமயமாக்கலுக்கு பெரிய உந்துதல் தருவதற்காக, பாதுகாப்புத் துறைக்கான மூலதன ஒதுக்கீடு 19% அதிகரிக்கப்பட்டுள்ளது.**





**₹4.78**

பாதுகாப்புத் துறைக்கான ஒதுக்கீடு ரூ.4.78 லட்சம் கோடி. 2014-ல் இது ரூ.2.29 லட்சம் கோடியாக இருந்தது.

**18.75%**

ஆயுதப் படைகளின் நவீனமாக்கலுக்கான பட்ஜெட் அதிகரிப்பு 18.75%



**100**

புதிதாகத் திறக்கப்படவுள்ள சைனிக் பள்ளிகள் எண்ணிக்கை

பாதுகாப்பு துறைக்கு மூலதன செலவு தொகையை 18.75 சதவீதம் உயர்த்தி கொடுத்து இருப்பதன் மூலம் இந்த பட்ஜெட்டில் பாதுகாப்புத்துறை நவீனமயமாக்கலுக்கு வரலாற்றில் இல்லாத அளவுக்கு உந்துதல் தரப்பட்டுள்ளது. கடந்த 15 ஆண்டுகளில் பாதுகாப்புத் துறையில் மூலதனச் செலவுக்காக ஒதுக்கப்படும் அதிகபட்ச தொகையாக இது இருக்கிறது. 2021-22 பட்ஜெட்டில் பாதுகாப்பு துறைக்கான பட்ஜெட் ஒதுக்கீடு ரூ.4,78,195.62 கோடியாக இருக்கும்.

- மூலதனச் செலவுக்கான ஒதுக்கீடு 2021-22 நிதியாண்டில் ரூ 1,35,060.72 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இது நவீனமாக்கல் மற்றும் கட்டமைப்பு வசதி மேம்பாட்டுக்கானதாக இருக்கும். இந்த ஒதுக்கீடு 2020 - 21 நிதி ஆண்டை காட்டிலும் 18.75 சதவீதம் அதிகமாகவும், 2019 - 20 நிதி ஆண்டை காட்டிலும் 30.62 சதவீதம் அதிகமானதாகவும் இருக்கிறது.

**பாதுகாப்புத் துறையில் ஆராய்ச்சியை ஊக்குவிப்பதற்காக மூலதன ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளது. எல்லைப்புற கட்டமைப்புகளை பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.**

- பாதுகாப்பு அமைச்சகத்தில் ஓய்வூதியம் தவிர்த்து, பாதுகாப்பு சேவைகள் மற்றும் இதர துறைகளுக்கான ஒட்டுமொத்த ஒதுக்கீடு 2021 - 22 ஆம் ஆண்டுக்கு ரூ. 3,62,345.62 கோடியாக இருக்கிறது. 2020 - 21 நிதி ஆண்டைக் காட்டிலும் இது ரூ. 24,792.62 கோடி அதிகம்.
- நடைமுறைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக சம்பள வருமானம் அல்லாத தலைப்பின்கீழ் ஒதுக்கீடு ரூ. 54,624.67 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது இது 2020 - 21 நிதி ஆண்டை காட்டிலும் 6 சதவீதம் அதிகம்.
- டி ஆர் டி ஓ வுக்கான மூலதன ஒதுக்கீடு ரூ. 11,375.50 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.
- எல்லைப்புற சாலைகள் அமைப்பிற்கு (BRO) நிதி ஒதுக்கீடு ரூ. 6004.08 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது இது 2021 - 22 நிதி ஆண்டை விட 7.48 சதவீதம் அதிகம் ■

# புதிய தசாப்தத்தில் தற்சார்பு இந்தியாவுக்கான அடித்தளத்தை இந்த பட்ஜெட் அமைக்கிறது: நிதியமைச்சர்

*தற்சார்பு என்பதை குறிக்கும் 'ஆத்மநிர்பார்' என்ற வார்த்தை 130 கோடி இந்தியர்களின் எண்ணங்களின் வெளிப்பாடு மட்டுமல்ல. 2020இல் ஆக்ஸ்போர்டு ஹிந்தி வார்த்தையாகவும் அது இடம் பெற்றுள்ளது. நாட்டை தற்சார்பானதாக ஆக்கும் வகையில் லட்சிய நோக்குடன் சமர்ப்பிக்கப்பட்ட முதலாவது பட்ஜெட் இதுவாகத்தான் இருக்கும். இந்த பட்ஜெட் எந்த வகையில் வித்தியாசமானது என்று, நியூ இந்தியா சமாச்சார் கன்சல்டிங் எடிட்டர் சந்தோஷ்குமாரின் கேள்விகளுக்கு நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பதிலளித்துள்ளார்*

> **கட்டமைப்புத் திட்டங்களைப் பூர்த்தி செய்ய ஐந்து ஆண்டுகளாகும் என்று கூறப்படுகிறது. இருந்தாலும் வேலைவாய்ப்புகள் உடனடியாக உருவாக்கப்பட்டு விடும். இதனால் பொருளாதாரத்திற்கு உடனடியாக உந்துதல் கிடைக்கும்.**



**Q கேள்வி : தற்சார்பு இந்தியா திட்டம் அறிவிக்கப்பட்ட பிறகு சமர்ப்பிக்கப்படும் முதலாவது பட்ஜெட் இது. இந்த பட்ஜெட் தற்சார்பு பாதையில் எடுத்துச் செல்வதாக எந்த வகையில் இருக்கும்?**

**A பதில் :** தற்சார்பு என்பது புதிய கோட்பாடு அல்ல. பழங்கால இந்தியா பெருமளவுக்கு தற்சார்பு கொண்டதாக இருந்திருக்கிறது. அதேசமயத்தில் உலகின் வணிக மையமாகவும் இருந்திருக்கிறது. தற்சார்பு இந்தியா என்பது நம்முடைய திறமைகளில் நம்பிக்கை கொண்ட 130 கோடி இந்தியர்களின் எண்ணங்களை வெளிப்படுத்துவதாக உள்ளது. 2020 மே மாதம் தற்சார்பு இந்தியா திட்டம் 1.0 அறிவிக்கப்பட்டது. பின்னர் மேலும் இரண்டு திட்டங்கள் (ANB 2.0 மற்றும் ANB 3.0) அறிவிக்கப்பட்டன. புறக்கணிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான ஏற்பாடுகளை, பிரதமரின் தலைமையின் கீழ் நாங்கள் செய்து வருகிறோம். பிரதமரின் கரீப் கல்யாண் யோஜ்னா, மூன்று தற்சார்பு இந்தியா திட்டங்கள், பின்னர் செய்த அறிவிப்புகள் ஆகியவை 5 மினி பட்ஜெட்களுக்கு இணையானவை. கட்டமைப்பு சீர்திருத்தங்களுக்கு உந்துதல் தருவதாக தற்சார்பு இந்தியா திட்டங்கள் அமைந்துள்ளன.

> கோவிட் தடுப்பூசி மருந்துக்கு நாங்கள் ரூ 35,000 கோடி ஒதுக்கி இருக்கிறோம். இது இந்த ஆண்டுக்கு மட்டும் தான். இன்னும் கூடுதலாக தேவைப்பட்டால் அதை தருவதற்கு நான் உறுதி அளிக்கிறேன்.

## Q&A

**பட்ஜெட் தயாரிக்கும் போது உங்கள் முன்னுரிமை விஷயங்கள் என்னவாக இருந்தன?**

பட்ஜெட் அறிவிப்புகள் 6 தூண்களின் அடிப்படையில் அமைந்துள்ளன:

- சுகாதாரம் மற்றும் நலவாழ்வு
- இயல்புநிலை மற்றும் நிதி மூலதனம் மற்றும் கட்டமைப்பு
- வளரத் துடிக்கும் இந்தியாவுக்கான பங்கேற்புடன் கூடிய வளர்ச்சி
- மனிதவள முதலீட்டுக்குப் புத்துயிரூட்டுதல்
- புதுமை சிந்தனை மற்றும் ஆராய்ச்சி & மேம்பாடு
- குறைந்தபட்ச அரசு தலையீடு, அதிகபட்ச நிர்வாகம்

**Q கேள்வி :** விவசாயிகள் மற்றும் பொருளாதார ரீதியில் நலிவடைந்த மக்களின் நலனுக்கு இந்த அரசு முக்கியத்துவம் அளிக்கிறது. இந்த பட்ஜெட்டில் அவர்கள் என்ன எதிர்பார்க்கலாம்?

**A பதில் :** இந்த அரசு விவசாயிகளின் நலனுக்கு அர்ப்பணிப்புடன் செயல்பட்டு கொண்டிருக்கிறது. ஸ்வமித்வா திட்டத்தை பிரதமர் அறிமுகம் செய்திருக்கிறார். இந்தத் திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களில் சொத்துக்களை வைத்திருப்பவர்களுக்கு `ஆவணங்கள் பெறும் உரிமைகள்' அளிக்கப்பட்டுள்ளன. இதுவரையில் 1,241 கிராமங்களில் 1.8 லட்சம் சொத்துக்களின் உரிமையாளர்களுக்கு ஆவணங்கள் அளிக்கப்பட்டுள்ளன. இப்போது இந்த திட்டத்தை அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு விரிவுபடுத்த நான் முன்மொழிவு செய்திருக்கிறேன். 2021 - 22 நிதியாண்டில் வேளாண்மை கடன்களுக்கான இலக்கை ரூ. 16.5 லட்சம் கோடியாக நான் உயர்த்தி இருக்கிறேன். கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் போன்ற துறைகளுக்கு அதிக கடன் வசதி கிடைப்பதை உறுதி செய்வதில் நாங்கள் கவனம் செலுத்தி இருக்கிறோம். கிராமப்புற கட்டமைப்பு மேம்பாட்டு நிதியத்துக்கான ஒதுக்கீட்டை ரூ. 30,000 கோடியில் இருந்து ரூ 40,000 கோடியாக நாங்கள் உயர்த்தியுள்ளோம். ரூ 5,000 கோடி தொகுப்பு நிதியுடன் நுண் நீர் பாசன நிதியம் உருவாக்கப்படும். மேலும் ரூ.5,000 கோடி அளிப்பதன் மூலம் இதை இரட்டிப்பாக உயர்த்த நான் உத்தேசித்திருக்கிறேன். வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்த துறைகளின் உற்பத்தி பொருள்களின் மதிப்பு கூட்டுவதற்கு உந்துதல் அளிக்க `ஆப்பரேசன் க்ரீன் திட்டத்தில்' அழுகும் தன்மையுள்ள மேலும் 22 காய்கறிகள் சேர்க்கப்படும். தற்போது இதில் தக்காளி, வெங்காயம், உருளைக்கிழங்கு போன்றவை மட்டுமே உள்ளன. வேளாண் சந்தை வசதியில் e-NAM தளத்தின் மூலம் வெளிப்படையான போட்டி ஏற்படுத்தப்பட்டிருப்பதைக் கருத்தில் கொண்டு, மேலும் ஆயிரம் மண்டிகள் இந்த தளத்துடன் ஒருங்கிணைப்பு செய்யப்படும். ஏ.பி.எம்.சி. மண்டிகளில் கட்டமைப்புகளை பலப்படுத்தும் வகையில் வேளாண்மை கட்டமைப்பு நிதி இந்த மண்டிகளுக்கு அளிக்கப்படும்.

அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு, குறிப்பாக இடம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கு கூடுதல் முக்கியத்துவம் தரும் வகையில், தனிப்பட்ட முறையில் பணியாற்றுபவர்கள், கட்டடம் மற்றும் கட்டுமான தொழிலாளர்கள் குறித்த தகவல்களை சேகரிப்பதற்கு ஒரு முனையத்தை உருவாக்க அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. அனைத்து வகை தொழிலாளர்களுக்கும் குறைந்தபட்ச ஊதியம் என்பது பொருந்தும். அவர்கள் அனைவருக்கும் தொழிலாளர் ஈட்டுறுதி காப்பீட்டு (ஈ.எஸ்.ஐ.) வசதி கிடைக்கும். அனைத்து பிரிவுகளிலும் பணியாற்ற பெண்கள் அனுமதிக்கப்படுவார்கள். உரிய பாதுகாப்பு அம்சங்களுடன் இரவுகளிலும் அவர்கள் பணியாற்ற அனுமதிக்கப்படுவார்கள்.

**Q கேள்வி :** பிரதமர் எப்போதும் இளைஞர் சக்தி பற்றி பேசி வருகிறார். தற்சார்பு இந்தியா திட்டத்தில் அவர்களின் பங்கு முக்கியமானது என்று கருதுகிறார். இந்த வகையில் இந்த பட்ஜெட் எந்த அளவுக்கு முக்கியமானதாக இருக்கும்?

**A பதில் :** இளைஞர்களுக்கு தொழில் பயிற்சி வாய்ப்புகளை மேம்படுத்தும் வகையில் தொழில் பழகுநர் சட்டத்தை திருத்துவதற்கு அரசு உத்தேசித்துள்ளது. இப்போதுள்ள தேசிய தொழில் பழகுநர் திட்டத்தின் அம்சங்கள் மாற்றி அமைக்கப்படும். கல்வியை முடித்த பிறகு தொழில் பழகுதல், பட்டதாரிகள் மற்றும் பொறியியல் பிரிவுகளில் டிப்ளமோ படிப்பவர்களுக்குப் பயிற்சிகள் அளிக்கப்படும். இதற்காக

**இந்த அரசு நீண்டகால அடிப்படையில் கொள்கைகளை உருவாக்குகிறது. நல்ல நிலையை உருவாக்க இது திட்டமிட்டு, முன்னெடுத்துச் செல்கிறது. இதை உறுதி செய்தாக வேண்டும்.**

ரூ 3000 கோடி அளிக்கப்படும். தொழில் திறன் தகுதிகள், மதிப்பீடு, சான்றளிப்பு ஆகியவற்றுடன், சான்றிதழ் பெற்ற பணியாளர்களுக்கு வேலை கிடைக்கச் செய்தலுக்கான மதிப்பீடு அளவுகளைத் தயாரிக்கும் பணி நடந்து வருகிறது. ஜப்பானிய தொழிற்சாலை மற்றும் கைத்தொழில் திறன்கள், நுட்பங்கள் மற்றும் அறிவுசார் விஷயங்களைப் பகிர்வதற்காக ஜப்பானுடன் இணைந்து இடைமுகப் பயிற்சிக்கு பயிற்சியளிக்கும் (TITP) திட்டமும் உள்ளது. மேலும் பல நாடுகளுடன் இதுபோன்ற திட்டத்தைச் செயல்படுத்த முயற்சிக்கப்படும்.

இந்திய உயர்கல்வி கமிஷன் செயல்படுத்துவதற்கான சட்டம் இந்த ஆண்டில் உருவாக்கப்படும். தரம் நிர்ணயித்தல், அங்கீகாரம் அளித்தல், ஒழுங்குபடுத்துதல், நிதி அளித்தல் ஆகிய நான்கு தனித்தனி அம்சங்களைக் கவனிக்கும் ஒரே அமைப்பாக இது இருக்கும். நம் நாட்டின் பல நகரங்களில் ஆராய்ச்சி நிலையங்கள், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளுக்கு அரசின் உதவிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இதுபோன்ற 9 நகரங்களில் முறைப்படியான கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படும். இந்த நிறுவனங்களில் இன்னும் நல்ல ஒருங்கிணைப்பு கிடைக்கவும். அவற்றின் தனிப்பட்ட தன்னாட்சி பாதுகாக்கப்படாமல் இருப்பதும் இதில் உறுதி செய்யப்படும். இதற்காக ஒருங்கிணைப்பு மானியம் ஒதுக்கி வைக்கப்படும். லடாக்கில் உயர் கல்வி வசதி கிடைப்பதற்காக லே பகுதியில் மத்திய பல்கலைக்கழகம் ஒன்றை அமைக்க அரசு உத்தேசித்துள்ளது.

**Q கேள்வி :** கொரோனா வைரஸ் பெருந்தொற்று காலத்தில் குறு, சிறு, நடுத்தர தொழில் (எம்எஸ்எம்இ) துறை மிக மோசமாக பாதிக்கப்பட்டு, பின்னர் அந்த துறைக்கு உதவிகள் அளிக்கப்பட்டன. இந்த பட்ஜெட்டில் அந்தத் துறைக்கு விசேஷமாக என்ன இருக்கிறது?

**A பதில் :** எம்எஸ்எம்இ துறைக்கு உதவி செய்ய நாங்கள் பல நடவடிக்கைகள் எடுத்து இருக்கிறோம். இந்த பட்ஜெட்டில் இந்த துறைக்கு நான் ரூ. 2700 கோடி ஒதுக்கி இருக்கிறேன். இந்த ஆண்டின் பட்ஜெட் மதிப்பீட்டில் இது இரண்டு மடங்கிற்கும் அதிகமானது. பல பொருள்களின் மீதான சுங்க கட்டணத்தை திருத்தி அமைப்பது குறித்தும் நாங்கள் அறிவிப்பு செய்து இருக்கிறோம்.

## Q&A

**கேள்வி :** பாதுகாப்புத் துறை அமைச்சராக நியமிக்கப்பட்ட முதலாவது பெண்மணியாக நீங்கள் இருக்கிறீர்கள். இப்போது நாட்டின் நிதியமைச்சராக இருக்கிறீர்கள். புதிய இந்தியாவில் பெண்களுக்காக இந்த பட்ஜெட்டில் என்ன இருக்கிறது?

**பதில் :** எட்டு கோடி வீடுகளுக்கு பயன் அளித்த உஜ்வாலா திட்டம் இப்போது மேலும் ஒரு கோடி பயனாளிகளுக்கு அளிக்கப்படும். அனைத்துத் துறைகளிலும் பெண்கள் பணியாற்ற அனுமதிக்கப்படுவர். போதிய பாதுகாப்பு அம்சங்களுடன், இரவுநேரப் பணியில் ஈடுபடவும் அனுமதிக்கப்படுவர். அசாம் மற்றும் மேற்குவங்கத்தில், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு, குறிப்பாக பெண்கள் மற்றும் அவர்களின் குழந்தைகளின் நலனுக்காக ரூ.1000 கோடி ஒதுக்கப்படுகிறது. மேலும், ஸ்டான்ட் அப் இந்தியா திட்டத்தின் கீழ் கடன் கிடைக்க வசதியாக, பயனாளியின் பங்களிப்புத் தொகையை 25 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாகக் குறைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**Q கேள்வி :** கொள்கை சீர்திருத்தங்கள் மூலம் `வாழும் நிலை எளிதாக்குவது' என்பது அரசின் மந்திரமாக உள்ளது. இந்த பட்ஜெட்டில் என்ன சீர்திருத்தங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன, அவற்றின் தாக்கம் எப்படிப்பட்டதாக இருக்கும்?

**A பதில் :** நகர்புற ஜல் ஜீவன் மிஷன் தொடங்கப்படும். 4378 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் 2.86 கோடி வீடுகளுக்கு குழாய் இணைப்பு மூலம் தண்ணீர் வசதி அளிப்பது, 500 அம்ருத் நகரங்களில் திரவ கழிவு மேலாண்மை வசதிகள் இதன் மூலம் செய்யப்படும். ஐந்தாண்டு காலத்தில் ரூ. 2,87,000 கோடி செலவில் திட்டங்கள் நிறைவேற்றப்படும். நகர்புற தூய்மை பாரதம் திட்டம் 2.0 மூலம் ரூ. 1,41,678 கோடி செலவில் 5 ஆண்டுகளில் பணிகள் மேற்கொள்ளப்படும். அதிகரித்து வரும் காற்று மாசு பிரச்சனையை சமாளிப்பதற்கு 10 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 42 நகர்ப்புற மையங்களுக்கு இந்த பட்ஜெட்டில் ரூ. 2217 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

இவை எல்லாவற்றுடனும் சேர்த்து, நகர்ப்புற எரிவாயு விநியோக நெட்வொர்க் திட்டத்தில் மேலும் 100



சுகாதாரத் துறை பற்றி நாம் குறிப்பிடும்போது, சத்தான உணவு மற்றும் தூய்மையையும் சேர்த்துக் கொள்ள வேண்டியது முக்கியம். முழுமையான அணுகுமுறையின் மூலம் மட்டுமே நம்மால் இலக்கை எட்ட முடியும்.

அனைத்துப் பிரிவு தொழிலாளர்களுக்கும் குறைந்தபட்ச ஊதியச் சட்டம் பொருந்தும். அவர்கள் அனைவருக்கும் ஈ.எஸ்.ஐ. வசதி கிடைக்கும். அனைத்துப் பிரிவுகளிலும் வேலை பார்க்க பெண்கள் அனுமதிக்கப்படுவர். போதிய பாதுகாப்பு அம்சங்களுடன் இரவுநேரப் பணியிலும் அவர்கள் ஈடுபட அனுமதிக்கப்படும்.

- நிர்மலா சீதாராமன்

மாவட்டங்கள் அடுத்த மூன்று ஆண்டுகளில் சேர்க்கப்படும். ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேச பகுதியில் குழாய் மூலம் எரிவாயு எடுத்துச் செல்லும் திட்டம் நிறைவேற்றப்படும். சாலை, ரயில்வே, மெட்ரோ போக்குவரத்து குறித்தும் இந்த பட்ஜெட்டில் பெரிய அறிவிப்புகள் இருக்கின்றன. கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு இந்த பட்ஜெட்டில் சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

**Q கேள்வி :** அரசியலில் சுகாதாரத் துறை ஒருபோதும் முக்கிய பிரச்சனையாக பேசப்பட்டது இல்லை. ஆனால் முதன்முறையாக அனைவருக்கும் ஒரே மாதிரியான சுகாதார வசதிகள் கிடைப்பதற்கு இந்த அரசு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. பிரதமரின் ஜன ஆரோக்கியா ஆயுஷ்மான் பாரத் திட்டம் இதற்கு உதாரணமாக உள்ளது. ஆரோக்கியமான மற்றும் அதிகாரம் பெற்ற இந்தியாவை உருவாக்குவதற்கு இந்த பட்ஜெட் எந்த அளவுக்கு உதவிகரமாக இருக்கும்?

**A பதில் :** இந்த பட்ஜெட்டில் சுகாதாரத் துறை கட்டமைப்பு வசதிகளுக்கான முதலீடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. நோய் தடுப்பு, குணமாக்குதல், நலவாழ்வு என்ற மூன்று விஷயங்களை மேலும் பலப்படுத்துவதில் நாங்கள் கவனம் செலுத்தி இருக்கிறோம். மத்திய அரசு நிதியில் அமல்படுத்தும் ஒரு புதிய திட்டம், பிரதமரின் தற்சார்பு ஸ்வஸ்த் பாரத் திட்டம் ஆகியவை தொடங்கப்பட்டு, கடந்த ஆறு ஆண்டுகளில் ரூ.64,180 கோடி அளிக்கப்பட்டுள்ளது. இது ஆரம்ப நிலை, அடுத்த நிலை மற்றும் தீவிர சிகிச்சை வசதிகளை மேம்படுத்துவதற்கு உதவும். புதிய நோய்களை கண்டறிந்து, குணமாக்கும் வசதிகளை செய்வதற்காக தற்போது செயல்பட்டு வரும் தேசிய நிறுவனங்களை பலப்படுத்துதல், புதிய நிறுவனங்களை உருவாக்குதல் ஆகியவை செய்யப்படும். இப்போது ஐந்து மாநிலங்களில் மட்டும் வழங்கப்பட்டு வரும் நியூமோகோக்கல் என்ற தடுப்பூசி நாடு முழுவதற்கும் விரிவுபடுத்தப்படும். 2021 - 22 ஆண்டில் கோவிட்-19 தடுப்பூசி மருந்துகள் தயாரிப்புக்கு ரூ 35 ஆயிரம் கோடி அளிக்கப்பட்டுள்ளது. சுகாதாரம் மற்றும் நல வாழ்வுக்கான பட்ஜெட் ஒதுக்கீடு 2021- 22 ஆம் ஆண்டுக்கு 2,23,846 கோடியாக இருக்கும். இதற்கான பட்ஜெட் ஒதுக்கீடு ரூ. 94,542 கோடியாக இருந்தது. இது 137 சதவீத உயர்வாகும்.

**Q கேள்வி :** டிஜிட்டல் பொருளாதாரத்தில் அரசின் திட்டங்கள் என்ன? இதை மேலும் ஊக்குவிப்பதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும்?

**A பதில் :** சமீப காலத்தில் டிஜிட்டல் பட்டுவாடாக்கள் பல மடங்கு அதிகரித்திருக்கின்றன. டிஜிட்டல் பரிவர்த்தனைகளை மேலும் ஊக்குவிப்பதற்காக இந்த பட்ஜெட்டில் ரூ. 1500 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. டிஜிட்டல் முறையிலான பட்டுவாடாக்களை ஊக்குவிப்பதற்கு ஊக்கத்தொகை அளிப்பதற்கு புதிய திட்டம் வகை செய்யும்.

# நான்காவது தொழில் புரட்சி

# மனிதகுலம் பயன்பெற தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த இந்தியா தயாராக உள்ளது




*கடந்த ஆறு ஆண்டுகளில் பலமான கட்டமைப்பு வசதிகளை உருவாக்கியுள்ள இந்தியாவின் நான்காவது தொழில் புரட்சியில் டிஜிட்டல் வசதி அடித்தளமாக உள்ளது. உலகப் பொருளாதார அமைப்பின் டாவோஸ் மாநாட்டில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, பொருளாதார சுதந்திரத்தை உறுதி செய்யவும், ஏழைகள் மற்றும் சமூகத்தில் உரிமைகள் மறுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை நிலையை மேம்படுத்தவும் இதைப் பயன்படுத்தலாம் என்று கூறினார்.*

புதிய இந்தியா என்ற உறுதியுடன் நாடு முன்னெடுத்துச் செல்லக்கூடிய தருணத்தில், நான்காவது தொழில் புரட்சி என்பது, நாட்டிற்கு மட்டுமன்றி மக்களுக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. கடந்த ஆறு ஆண்டுகளில் நாட்டை நான்காவது தொழில் புரட்சிக்கு அரசு தயார்படுத்தி வந்துள்ளது. அடிப்படை வசதிகள் தயார் நிலையில் இருக்கின்றன என்பதன் அடிப்படையில்தான் இந்த தொழில் புரட்சியின் வெற்றி அமைந்திருக்கும். இந்த கடின உழைப்பின் பயனாகத்தான் முதலீட்டாளர்களுக்கு உகந்த நாடாக இந்தியா உருவாகி இருக்கிறது. 2021 ஜனவரி 28ஆம் தேதி உலக பொருளாதார அமைப்பின் டாவோஸ் மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார். இந்தியாவில் தொழில் செய்வதற்கான சூழ்நிலைகள் குறித்து ‘முன்கூட்டிய தகவல்கள் தெரிந்த மற்றும் உகந்த சூழ்நிலைகள்‘ நிலவுகின்றன என்றும் இந்தியாவில் தற்சார்பு நிலை என்பது உலக அளவிலான செயல்பாடுகளை பலப்படுத்துவதாக இருக்கும் என்றும் அப்போது பிரதமர் கூறினார்

**உலகில் முதல்நிலையில் உள்ள 400 உயர் நிறுவனங்கள் முன்னிலையில் புதிய இந்தியா பற்றி பிரதமர் உறுதியளித்தார்.**

பிரதமரின் முழு உரையைக் கேட்க இந்த கியூ ஆர் கோடை ஸ்கேன் செய்யவும்

# தொழில் துறை முன்னோடிகளின் கேள்விகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி அளித்த பதில்கள்:

## சீமன்ஸ் தலைவர் மற்றும் சி.இ.ஓ. ஜோ கேசர், தற்சார்பு இந்தியா பற்றி கேள்விகள் எழுப்பினார்.

கேள்வி நேரத்தின்போது பதிலளித்த பிரதமர், தற்சார்பு இந்தியா திட்டத்தின் அம்சங்கள் பற்றி கேசருக்கு விளக்கம் அளித்தார். இந்தியாவை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி மையமாக மாற்றுவது இந்த தொலைநோக்கு திட்டத்தின் ஒரு அம்சம் என்று குறிப்பிட்டார். அதற்காக கூட்டுறவு வரி மற்றும் ஜிஎஸ்டி ஆகியவற்றை அரசு குறைத்துள்ளது என்றும் தெரிவித்தார். வரி நடைமுறைகளையும் அரசு எளிமைப்படுத்தி உள்ளது. தொழிலாளர் சட்டங்கள் எளிமைப் படுத்தப்பட்டுள்ளன. இவை தொழில் செய்பவர்களுக்கு உகந்த சூழ்நிலைகளை ஏற்படுத்தி தரும். மேலும், தொழில் செய்யும் நிலைமையை எளிதாக்குவதற்காக கம்பெனிகள் சட்டத்தில், குற்றமுறு பிரிவின்கீழ் (கிரிமினில் பிரிவில்) வரும் செயல்பாடுகளை அந்த பட்டியலில் இருந்து அரசு நீக்கிவிட்டது. உற்பத்தியுடன் இணைந்த ஊக்கம் அளிக்கும் 26 பில்லியன் டாலர் திட்டத்தில் சாதகமான அம்சங்களை பயன்படுத்திக் கொள்ளுமாறு உலக அளவிலான முதலீட்டாளர்களுக்கு பிரதமர் அழைப்பு விடுத்தார்.

## ஏ.பி.பி. நிறுவனத்தின் சி.இ.ஓ. ஜோர்ன் ரோசென்கிரென், கட்டமைப்பு தொடர்பான திட்டங்கள் குறித்து கேள்வி எழுப்பினார்.

எந்த வகையான வளர்ச்சிப் பணிகளுக்கும் கட்டமைப்பு வசதிகள் தான் அடிப்படையானது. இதை

**பிரதமர் கூறியது: வாய்ப்புகளுடன் நம்பிக்கை, புதிய சக்தி ஆகியவை இந்தியாவில் நிறைந்துள்ளன.**

உணர்ந்த அரசு, கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டுக்கு முன்னுரிமை அளித்தது. கடந்த ஆறு ஆண்டுகளில் 57,000 கிலோ மீட்டர் அளவுக்கு நெடுஞ் சாலைகள் உருவாக்கப்பட்டுள்ளன. ரயில் பாதைகளில் 58 சதவீத அளவுக்கு மின்மயமாக்கப்பட்டுள்ளன.

**2018 ஆம் ஆண்டில் டாவோஸில் நடந்த மாநாட்டில் பேசிய பிரதமர், 21வது நூற்றாண்டில் இந்தியா முக்கிய பங்காற்றும் என்றும், கொரோனா வைரஸ் நெருக்கடி காலத்தில் இந்தக் கருத்து உண்மையாக்கப்பட்டிருப்பதை உலகம் பார்த்துக் கொண்டிருக்கிறது என்றும் கூறினார்.**

மின்சாரத் துறையில் கூடுதலாக 36 ஜிகாவாட் அளவுக்கு திறன் அதிகரித்து மேம்படுத்தப்பட்டுள்ளது. ரோசென்கிரென் கேள்விக்கு பதிலளித்த பிரதமர், தற்போது இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டுவரும் கட்டமைப்பு திட்டங்களைப் பட்டியலிட்டார். தேசிய கட்டமைப்பு திட்டத்தின் கீழ் 1.5 ட்ரில்லியன் டாலர் மதிப்புக்கான திட்டங்கள் அடுத்த 5 ஆண்டுகளில் நிறைவேற்றப்படும் என்றும் தெரிவித்தார். மேலும் பொருளாதார மண்டலப் பகுதிகளுக்கு போக்குவரத்து இணைப்பு வசதி ஏற்படுத்திக் கொடுப்பதற்காக பன்முக நோக்கிலான மாஸ்டர் பிளான் ஒன்றை இந்தியா உருவாக்கி வருகிறது என்றும் பிரதமர் குறிப்பிட்டார். கொரோனா பெருந்தொற்று பாதிப்பு சூழ்நிலையிலும் இந்தியாவில் வெளிநாட்டு நேரடி முதலீடு 13 சதவீதம் அதிகரித்துள்ளது என்பதையும் பிரதமர் தெரிவித்தார்.

## மாஸ்டர் கார்டு நிறுவன சி.இ.ஓ. அஜய் எஸ். பாங்கா இந்தியாவில் நிதி பங்கேற்பு நிலை குறித்து கேள்வி எழுப்பினார்.

பாங்கா கேள்விக்கு பதில் அளித்த பிரதமர், நிதி பங்கேற்பு தொடர்பாக நாட்டில் நிலவும் விஷயங்கள் குறித்தும், எம்எஸ்எம்இ துறையை பலப்படுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் விவரித்தார். பயனாளிகளுக்கு நேரடியாக வங்கி கணக்கில் பணம் செலுத்தும் திட்டத்தின்கீழ் கோடிக்கணக்கான குடிமக்கள் பயன்பெற்றுள்ளனர் என்றும், வங்கிகளுக்கு நேரில் செல்லாமலேயே அந்த பணத்தை அவர்களால் பயன்படுத்த முடிந்திருக்கிறது என்றும் பிரதமர் கூறினார். சாலையோர வியாபாரிகளுக்கு கடன் உத்தரவாதம் அளிக்க டிஜிட்டல் பொருளாதாரம் உதவியாக இருக்கிறது என்றும் பிரதமர் குறிப்பிட்டார். எம்எஸ்எம்இ என்பதற்கான வரையறைகளை மாற்றி, அந்த துறை மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது. நல்ல வாய்ப்புகளை உருவாக்கி கொடுப்பதற்கு தொழில்நுட்ப வசதிகள் பயன்படுத்தப்படுகின்றன. இதற்கு அரசின் இ - மார்க்கெட்பிளேஸ் என்பது ஒரு நல்ல உதாரணமாக இருக்கிறது. அரசின் கொள்முதல் செயல்பாடுகளில் 4 லட்சத்து 50 ஆயிரம் எம்எஸ்எம்இக்கள் பங்கேற்று இருக்கின்றன.

## ஐ.பி.எம். நிறுவனத்தைச் சேர்ந்த அரவிந்த் கிருஷ்ணா டிஜிட்டல் தேவைகள் குறித்து கேள்வி எழுப்பினார்.

கிருஷ்ணாவின் கேள்விக்கு பதிலளித்த பிரதமர், டிஜிட்டல் இந்தியாவின் ஆழம் குறித்து விவரித்தார். நாட்டின் டிஜிட்டல் தோற்றம் முழுமையாக மாறிவிட்டது என்றும் அவர் குறிப்பிட்டார். வசதிகளை

**'தற்சார்பு இந்தியா' உலகப் பொருளாதாரத்துக்குப் புத்துயிரூட்டும். பங்கேற்பு மற்றும் அதிகாரம் அளிப்பு மூலம் நிலை மாற்றத்தை ஏற்படுத்த அரசு விரும்புகிறது.**

அணுகுதல், அதில் பங்கேற்பு மற்றும் அதிகாரம் அளிப்பதில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற அரசின் நோக்கம் பற்றியும், இதில் பயனாளர் அந்தரங்கங்கள் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டியது பற்றியும் அவர் குறிப்பிட்டார். கிருஷ்ணாவுடன் கடந்த முறை நடந்த உரையாடல் பற்றியும் பிரதமர் நினைவுகூர்ந்தார். அந்த சமயத்தில் உலக நாடுகள் கொரோனா வைரஸ் பாதிப்புக்கு ஆளாகி இருந்ததையும் பல நாடுகளில் முடக்கநிலை அமலில் இருந்ததையும் நினைவுபடுத்தினார். அதுபோன்ற சூழ்நிலையிலும் கூட இந்தியாவில் குடிமக்களுக்கு டிஜிட்டல் பொருளாதாரம் நிறைய உதவிகரமாக இருந்தது என்றும் பிரதமர் தெரிவித்தார்.■

# தடுப்பூசி தோழமை

## இப்போது உலக நாடுகள் ‘இந்தியாவில் தயாரித்த' கொரோனா வைரஸ் தடுப்பு மருந்துகளைப் பெறும்

கொரோனா வைரஸ் பெருந்தொற்றை உலக நாடுகள் எதிர்கொண்டுள்ள நிலையில், இந்தியா தன் உள்நாட்டுத் தேவைகளை பூர்த்தி செய்வது மட்டுமின்றி, நூறாண்டுகளுக்கு ஒரு முறை ஏற்படக் கூடிய நெருக்கடியை சமாளிக்க மற்ற நாடுகளுக்கும் உதவி வருகிறது. கொரோனா வைரஸ் பாதிப்புக்கு எதிராக, உலகில் மிகப் பெரிய அளவிலான தடுப்பூசி இயக்கத்தை இந்தியா தொடங்கியுள்ளது. அருகில் உள்ள நாடுகளுக்கும் ‘இந்தியாவில் தயாரித்த' தடுப்பு மருந்துகளை அளித்து உதவி செய்யத் தொடங்கியுள்ளது.



சமஸ்கிருதத்தில் - `சர்வே சாந்து நிரமயா‘, எல்லோருக்கும் நோயற்ற வாழ்வு என்ற வாசகம் உள்ளது. இதிலிருந்து உத்வேகம் பெற்றுள்ள இந்தியா, கோவிட்-19 நெருக்கடியை எப்படி கையாள வேண்டும் என்று உலக நாடுகளுக்கு காட்டிவருகிறது. வைரஸ் நோய்த் தொற்றை வெற்றிகரமாக கட்டுப்படுத்திவிட்ட நிலையில், இரண்டு உள்நாட்டு தடுப்பூசி மருந்துகளை தயாரித்துள்ளது. மேலும் உலக அளவில் மிகப்பெரிய தடுப்பூசி இயக்கத்தையும் தொடங்கியுள்ளது. இப்போது தடுப்பூசி தோழமை முயற்சி மூலம் உலக நாடுகளுக்கு நம்பிக்கை தருவதாகவும் இந்தியா இருக்கிறது

### அருகில் உள்ளவர்களுக்கு முதலில் உதவுதல் என்ற கொள்கை

அருகிலுள்ள மற்றும் பங்காளர் நாடுகளின் கோரிக்கைகளின் அடிப்படையில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட தடுப்பூசி மருந்துகளை ஜனவரி 20ஆம் தேதியிலிருந்து அவர்களுக்கு வழங்க தொடங்கியுள்ளது. பூட்டான், மாலத்தீவுகள், வங்கதேசம், நேபாளம், மியான்மர் மற்றும் செஷல்ஸ் போன்ற நாடுகள் இந்த தடுப்பூசி மருந்தை பெற்றிருக்கின்றன. இந்தியாவில் தனது மக்களுக்கு தேவையான அளவுக்கு தடுப்பூசி மருந்துகள் இருப்பதை உறுதி செய்து கொண்ட பிறகு, மற்றவர்களுக்கு இவை அளிக்கப்படுகின்றன

“வேறொரு நாட்டுடன் ஒப்பிட்டு பார்த்து இந்தியா குறித்து முடிவு செய்வது சரியானதாக இருக்காது. உலக மக்கள் தொகையில் 18 சதவீதம் பேரை கொண்டிருக்கும் ஒரு நாட்டில் கொரோனா வைரஸ் கட்டுப்படுத்தப்பட்டு மனிதகுலம் காப்பாற்றப்பட்டு இருக்கிறது. கொரோனா வைரஸ் பாதிப்பின் ஆரம்ப கட்டத்தில் நாம் முகக் கவச உறைகள், பி.பி.இ. கவச உடைகள், பரிசோதனை உபகரணங்கள் ஆகியவற்றை இறக்குமதி செய்து கொண்டிருந்தோம். இன்றைக்கு நம்முடைய உள்நாட்டு தேவைகளை பூர்த்தி செய்வது கொள்வது மட்டுமன்றி, இவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியும் செய்து கொண்டிருக்கிறோம். இன்றைக்கு உலகில் மிகப்பெரிய அளவில் கொரானா வைரஸ் தடுப்பூசி இயக்கத்தை நாம் தொடங்கியிருக்கிறோம். கோவிட்-19 தடுப்பூசி மருந்துகளை மற்ற நாடுகளுக்கு அனுப்பி, தடுப்பூசி கட்டமைப்பு வசதிகளை உருவாக்க உதவிகள் செய்வதன் மூலம் பல நாடுகளில் மக்களின் உயிரை இந்தியா காப்பாற்றி வருகிறது.

**- பிரதமர் நரேந்திர மோடி**




கோவிட்-19 பெருந்தொற்று காலத்தில் பல நாடுகளுக்கு ஹைட்ராக்சிகுளோரோகுயின், ரெம்டெசிவிர் மற்றும் பாரசிட்டமால் மாத்திரைகளையும், பரிசோதனை உபகரணங்கள், வென்டிலேட்டர்கள், முகக்கவச உறைகள், கையுறைகள் மற்றும் இதர மருத்துவப் பொருட்களையும் இந்தியா வழங்கியது. `சஞ்சீவி மலையை' ஏந்திச் செல்லும் அனுமனின் படத்துடன் ட்விட்டரில் பதிவிட்ட பிரேசில் அதிபர் ஜாயிர் போல்சோனரோ, இந்தியாவுக்கும், பிரதமர் நரேந்திர மோடிக்கும் நன்றி தெரிவித்திருந்தார். தனது ட்விட்டர் பதிவில் `தன்யவாத்' (நன்றி என்பதற்கான இந்தி வார்த்தை) என்றும் குறிப்பிட்டிருந்தார்.

கோவிட்-19 நோய்க்கு எதிரான தடுப்பூசி போடும் இயக்கத்தை வெற்றிகரமாக தொடங்கியது குறித்து இந்தியாவுக்கும் பிரதமருக்கும் அருகில் உள்ள நாடுகளின் தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர். அருகில் உள்ள நட்பு நாடுகளுக்கு தாராள மனதுடன் இந்தியா உதவிகள் செய்வது குறித்து இலங்கை அதிபர் கோத்தபய ராஜபக்ஷே நன்றி தெரிவித்துக் கொண்டுள்ளார். இலங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷே , மாலத்தீவு அதிபர் இப்ராகிம் முகம்மது சோலி, பூட்டான் பிரதமர் லாட்சே ட்ஷெரிங் ஆகியோர், இந்த தடுப்பூசி மருந்து கண்டுபிடிக்கப்பட்டு இருப்பது கொரோனா வைரஸ் தொற்றுக்கு முடிவு கட்டுவது முக்கியமான செயல்பாடாக இருக்கும் என்று கூறியுள்ளனர்.

ஜனவரி 31 தேதி வரையிலான தகவல்களின்படி, பல்வேறு நாடுகளுக்கு 64 லட்சம் டோஸ்கள் அளவிற்கு தடுப்பூசி மருந்துகளை இந்தியா பரிசாக அளித்து இருக்கிறது. ■

## கோவிட்-19 தடுப்பூசி மருந்திற்கு உத்தரவாதம் அளிக்கும் டாக்டர்கள், முன்களப் பணியாளர்கள்



கொரோனா வைரஸ் பாதிப்புக்கு எதிரான நடவடிக்கைகளில் உறுதியான ஒரு கட்டத்தை இந்தியா எட்டியிருக்கிறது. உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இந்தியாவின் தடுப்பூசி மருந்துகள் தருமாறு பல நாடுகளிடம் இருந்து கோரிக்கைகள் வந்திருக்கின்றன. இதனால் இந்த தடுப்பு மருந்துகளின் நம்பகத்தன்மை அதிகரித்திருக்கிறது. அதுமட்டுமன்றி இந்தத் தடுப்பூசி போட்டுக் கொண்ட டாக்டர்கள் மற்றும் முன்கள பணியாளர்களும் இதற்கு உத்தரவாதம் அளிக்கின்றனர். சத்தீஸ்கரில் மருத்துவக் கல்லூரியில் தூய்மைப் பணியாளராக இருக்கும், துல்சா தன்டி என்பவர், இந்தத் தடுப்பூசி போட்டுக் கொண்ட பிறகு, தான் ஆரோக்கியமாக இருப்பதாகத் தெரிவித்துள்ளார். அஸம்கர் மாவட்ட மருத்துவமனையில் தூய்மைப் பணி செய்து வரும் கேசா தேவி என்பவர் இந்த மருந்தின் முதல் டோஸ் போட்டுக் கொண்டிருக்கிறார். தாம் முழு ஆரோக்கியத்துடன் இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். ``எல்லோரும் இந்த தடுப்பூசியைப் போட்டுக்கொள்ள வேண்டும்'' என்றும் அவர் கூறியுள்ளார்.

முன் களப்பணியாளர்கள் மட்டுமன்றி டாக்டர்களும் இதே அளவுக்கு நம்பிக்கை அளிக்கின்றனர். குஜராத் மாநிலம் அகமதாபாத் மக்கள் மருத்துவமனை கூடுதல் கண்காணிப்பாளர் டாக்டர் ரஜ்னிஷ் பட்டேல், கோவிட்-19 தடுப்பூசி மருந்து குறித்து இதே கருத்தை தெரிவித்துள்ளார். ``நான் தடுப்பூசி போட்டுக் கொண்டிருக்கிறேன். நம்முடைய தடுப்பூசி மருந்து, கொரோனா வைரஸ் கிருமிக்கு எதிராக செயல்திறன் மிக்கது பாதுகாப்பானது'' என்று அவர் கூறியுள்ளார்

## 18 நாட்களில் 40 லட்சம் கோவிட்-19 தடுப்பூசிகள் செலுத்தி, விரைவாக செயல்படுத்திய நாடாக இந்தியா மாறியுள்ளது

இதுவரையில் 64 லட்சம் டோஸ்கள் அளவுக்கு கொரோனா தடுப்பூசி மருந்துகள் 17 நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன

*ஜனவரி 31 வரையிலான தகவல்கள்*

### இந்தியாவில் தடுப்பூசிகள்



**41,38,918**

18 நாட்களில் தடுப்பூசி செலுத்தப்பட்ட மக்கள் எண்ணிக்கை

| மொத்த நோயாளிகள் | சிகிச்சையில் இருப்போர் | குணம் பெறும் விகிதாச்சாரம் |
|---|---|---|
| 1,07,77,284 | 1,60,057 | 97.08% |




| தொற்று பாதிப்பு விகிதாச்சாரம் | இறப்பு விகிதம் |
|---|---|
| 1.49% | 1.43% |

2021 பிப்ரவரி 2 வரையிலான தகவல் - (ஆதாரம்: சுகாதார அமைச்சகம்)

# சுற்றுலாவாசிகள் விரும்பும் கேவாடியா

**சர்தார் படேலின் ஒற்றுமைக்கான சிலை அமைந்துள்ள இடம், இந்தியாவின் பிற பகுதிகளுடன் 8 புதிய ரயில்கள் மூலம் இணைப்பு**






*ரயில்கள் நல்ல போக்குவரத்து வசதியை அளிப்பதுடன் நேரத்தையும் மிச்சப்படுத்துகிறது. குஜராத் மாநிலம் கேவாடியா பகுதியை நாட்டின் பிற பகுதிகளுடன் இணைக்க, பிரதமரின் தலைமையின் கீழ் 8 ரயில் சேவைகள் தொடங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் சர்தார் படேலின் சிலை உள்ள பகுதிக்கு ரயில் போக்குவரத்து வசதி உறுதி செய்யப்படும். தொலை தூரத்தில் உள்ள ஒரு சிறிய பகுதியாக இனிமேல் கேவாடியா பகுதி இருக்காது. உலக சுற்றுலாவாசிகள் அதிகம் செல்ல விரும்பும் இடமாக இது மாறி வருகிறது.*


ஒற்றுமையின் சின்னமாக சர்தார் வல்லபாய் படேலின் பிரம்மாண்டமான சிலை அமைந்திருக்கும் பகுதி இப்போது நாட்டின் பல்வேறு பகுதிகளுடன் இணைப்பு வசதியை பெற்றிருக்கிறது. அந்தச் சிலை அமைந்துள்ள பகுதிக்கு தொடர்ந்து ரயில் வசதி கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் 2021 ஜனவரி 17ஆம் தேதி பிரதமர் நரேந்திர மோடி 8 ரயில்களின் சேவைகளை தொடங்கி வைத்தார். குஜராத் மாநிலம் கேவாடியாவிற்கு, டெல்லி, வாரணாசி, ரேவா, மும்பை, சென்னை, பிரதாப் நகர், அகமதாபாத் ஆகிய நகரங்களில் இருந்து ரயில் சேவைகள் தொடங்கப்பட்டுள்ளன. கேவாடியாவின் வளர்ச்சியில் இது புதிய அத்தியாயத்தை தொடங்குவதாக மட்டுமின்றி, அந்தப் பகுதிக்கு சுற்றுலா பயணிகள் வருகையை அதிகரிக்கச் செய்வதாகவும் இருக்கும். ஒன்றுபட்ட இந்தியாவை உருவாக்கிய சர்தார் படேலுக்கு பெருமை சேர்க்க இதைவிட வேறு என்ன இருக்க முடியும்?

இதுமட்டுமன்றி பசுமை கட்டட சான்றிதழ் பெற்று தொடங்கப்பட்ட இந்தியாவின் முதல் ரயில் நிலையமாகவும் இந்த ரயில் நிலையம் அமைந்திருக்கிறது

## கேவாடியாவின் வளர்ச்சியில் புதிய அத்தியாயத்தை உருவாக்குதல்

ஒற்றுமைக்கான இந்த சிலை, தேசத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட பிறகு 50 லட்சத்திற்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் வந்து சென்றிருக்கிறார்கள். கொரோனா பாதிப்பின் போது அமல் செய்த முடக்கநிலை நீக்கி, சிலை திறக்கப்பட்ட நிலையில் இங்கு வருவோரின் எண்ணிக்கை, தொடர்ந்து, சீராக அதிகரித்துக் கொண்டே இருக்கிறது.

## ஒரே சேருமிடத்திற்கு நாட்டில் எட்டு வெவ்வேறு இடங்களில் இருந்து ரயில் சேவைகள் ஒரே நாளில் தொடங்கப்பட்டிருப்பது இந்திய ரயில்வே வரலாற்றில் இதுவே முதல்முறை.




இந்த ரயில்கள் தவிர, மேலும் 2 ரயில்களும் விடப்படும். அகமதாபாத் - கேவாடியா ஜனசதாப்தி ரயிலில் `விஸ்டா டோம் கோச்கள்' பயணிகளை ஈர்ப்பதாக இருக்கும்.

| | |
|---|---|
| கேவாடியாவில் இருந்து வாரணாசி வரை | மஹமனா எக்ஸ்பிரஸ் (வாரந்தோறும்) |
| தாதரில் இருந்து கேவாடியா வரை | தாதர் - கேவாடியா (தினசரி) |
| அகமதாபாத்தில் இருந்து கேவாடியா வரை | ஜன சதாப்தி எக்ஸ்பிரஸ் (தினசரி) |
| கேவாடியாவில் இருந்து நிஜாமுதீன் வரை கிராந்தி | நிஜாமுதீன் - கேவாடியா சம்பர்க் எக்ஸ்பிரஸ் (வாரம் இரு முறை) |
| கேவாடியாவில் இருந்து ரேவா வரை | கேவாடியாவில்- ரேவா எக்ஸ்பிரஸ் (வாரந்தோறும்) |
| சென்னையில் இருந்து கேவாடியா வரை | சென்னை - கேவாடியா எக்ஸ்பிரஸ்(வாரந்தோறும்) |
| பிரதாப் நகரில் இருந்து கேவாடியா வரை | MEMU ரயில் (தினசரி) |
| கேவாடியாவில் இருந்து பிரதாப் நகர் வரை | MEMU ரயில் (தினசரி) |

## ரயில் போக்குவரத்து தொடர்பு மூலம் அந்தப் பிராந்தியத்தின் தோற்றத்தை மாற்றுதல்

- ஒற்றுமை சிலை அமைந்துள்ள இடத்தில் இருந்து 5 கி.மீ. தொலைவில் புதிய கேவாடியா ரயில் நிலையத்தை ரயில்வே உருவாக்கி வருகிறது.
- டாபோய், சன்டோட், கேவாடியா ஆகிய புதிய ரயில் நிலையங்கள் கலைநயத்துடன் வடிவமைக்கப்பட்டு, அந்தப் பகுதி அம்சங்களை இணைந்து, நவீன பயணிகள் வசதிக்கான அம்சங்களை உள்ளடக்கியதாக வடிவமைக்கப்பட்டுள்ளன. 80 கி.மீ. நீளம் உள்ள அந்தப் பகுதி முழுக்க மின்மயமாக்கப்பட்டு, சுற்றுச்சூழல் பாதுகாக்கப்பட்டுள்ளது.
- பிரதாப் நகர் - டாபோய் இடையிலான வேகம் மணிக்கு 75 கி.மீ. என்பதில் இருந்து, மணிக்கு 110 கி.மீ. என அதிகரிக்கப்பட்டுள்ளது. டாபோய்--கேவாடியா பிரிவு மணிக்கு 110 கி.மீ. வேகத்தில் செல்லக் கூடியதாக உருவாக்கப்பட்டு வருகிறது. பிரதாப் நகரில் இருந்து கேவாடியா வரையிலான பகுதியில் ரயில்களின் வேகம் 130 கி.மீ. வரை மேம்படுத்தப்படும்.

### பிரதமர் உரையில் முக்கிய அம்சங்கள்

- சுற்றுலா வசதி மேம்படுவதால், மலைவாழ் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு பெருகி, அவர்களுக்கு நவீன வசதிகள் கிடைக்கும்.
- ரயில்வே உற்பத்தி மற்றும் ரயில்வே தொழில்நுட்பத்தில் சுயசார்பில் நாம் கவனம் செலுத்தியதால், ரயில்வே நவீனமாக்கும் முயற்சிகள் வேகமாக செயல்படுத்தப்படுகின்றன.
- 20 மாநிலங்களைச் சேர்ந்த, கல்வியில் சிறந்த நூற்றுக்கணக்கான இளைஞர்களுக்கு, ரயில்வேயின் தற்கால மற்றும் எதிர்கால நிலையை மேம்படுத்தும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.
- இந்திய ரயில்வேயை சர்தார் வல்லபாய் பட்டேலின் லட்சியமும், இந்திய ரயில்வேயின் லட்சியமும் ஒரே மாதிரி இருப்பதால், இந்த நிகழ்ச்சி முக்கியத்துவமானதாக உள்ளது.
- மலைவாழ் மக்களின் ஆர்ட் கேலரி மற்றும் பார்வைக்கான கேலரி ஆகியவை கேவாடியாவில் உருவாக்கப்படுகின்றன. அந்த பார்வைக்கான கேலரியில் இருந்து ஒற்றுமைக்கான சிலையை சுற்றுலாப் பயணிகள் பார்க்கலாம்.
- ஒற்றுமைக்கான சிலையைக் காண வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை, அமெரிக்காவின் சுதந்திர தேவி சிலையைக் காண செல்பவர்களின் எண்ணிக்கையைவிட அதிகமாக உள்ளது.

**கேவாடியா ரயில் நிலையம்: பசுமைக் கட்டட சான்றிதழுடன் தொடங்கப்படும் முதலாவது இந்திய ரயில் நிலையம்**

- பசுமைக் கட்டட சான்றிதழுடன் தொடங்கப்படும் முதலாவது இந்திய ரயில் நிலையமாக கேவாடியா ரயில் நிலையம் உள்ளது.
- இந்த ரயில் நிலையத்தின் முதல் இரண்டு பகுதிகளில் ஏ.சி. காத்திருப்பு அறைகள் மற்றும் விவிஐபிகளுக்கான பகுதிகள் போன்ற வசதிகள் உள்ளன

பிரதமரின் முழு உரையைக் கேட்க இந்த கியூ ஆர் கோடை ஸ்கேன் செய்யவும்

இந்த இடம் பிரபலமாகி வருவதை கருத்தில் கொண்டு, நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் இருந்து இந்தியாவுக்கு ரயில் சேவைகளை அரசு தொடங்கியுள்ளது. புதிய போக்குவரத்து வசதி தொடங்கப்பட்டு இருப்பதால் அந்தப் பகுதியில் நிறைய வாய்ப்புகள் அதிகரிக்கும். போக்குவரத்து வசதி மேம்பட்டு இருக்கும் காரணத்தால் தினமும் ஒரு லட்சம் பயணிகள் வருவதற்கு வாய்ப்பு இருப்பதாக எதிர்பார்க்கப்படுகிறது. திட்டமிட்டு செயல்பட்டால் சுற்றுச்சூழலை பாதுகாப்பதுடன் பொருளாதாரம் மற்றும் சூழலியல் அம்சங்களை எந்த அளவுக்கு வேகமாக மேம்படுத்த முடியும் என்பதற்கு இது ஒரு நல்ல உதாரணமாக இருக்கிறது. ■



நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் இல்லமான கொல்கத்தாவில் உள்ள நேதாஜி பவனில் பிரதமர் நரேந்திர மோடி மரியாதை செலுத்துகிறார்

# "தற்சார்பு இந்தியா, தங்க வங்கத்திற்கு நேதாஜிதான் மிகப் பெரிய உத்வேகமாக உள்ளார்"

தன்னலமற்ற சேவை, மிஞ்ச முடியாத உறுதி ஆகியவற்றுக்காக நேதாஜி சுபாஷ் சந்திரபோஸுக்கு மரியாதை செலுத்தும் வகையில், அவருடைய பிறந்த நாளான ஜனவரி 23 ஆம் தேதியை 'பராக்கிரம தினமாக' கொண்டாட அரசு முடிவு செய்துள்ளது. போஸ் 125 வது பிறந்த நாளை ஒட்டி இந்த முடிவு எடுக்கப்பட்டது. எல்லைக் கோடு முதல், எல்லைக் கட்டுப்பாட்டு கோடு வரையில், போஸ் கனவு கண்ட வலிமையான இந்தியாவை உலகம் பார்த்துக் கொண்டிருக்கிறது என்று, பிரதமர் கூறியுள்ளார்.

இந்த ஆண்டில் இருந்து, மகத்தான சுதந்திரப் போராட்ட வீரர் சுபாஷ் சந்திர போஸ் பிறந்த நாளான ஜனவரி 23 ஆம் தேதியை ``பராக்கிரம தினமாகக்'' கொண்டாடி, எல்லையற்ற அவருடைய வீர தீர செயல்களுக்கு மரியாதை செலுத்தப்படும். மக்கள், குறிப்பாக இளைஞர்கள் பொறுமை மற்றும் தேசபக்தி உணர்வை வளர்த்துக் கொள்ள உதவிட வேண்டும் என்பதே இதன் நோக்கம். நேதாஜியின் 125வது பிறந்த தினத்தை தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் அரசு கொண்டாடியது. 2021 ஜனவரி 23 அன்று, ஓராண்டு கால கொண்டாட்ட நிகழ்வுகளை கொல்கத்தா விக்டோரியா நினைவிடத்தில் பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார். நிரந்தர கண்காட்சி ஒன்றும், காட்சிப்பட அரங்கும் தொடங்கி வைக்கப்பட்டன. `கலந்தாடல் வகை கண்காட்சியில்' நேதாஜி வாழ்வில் 125 முக்கிய நிகழ்வுகள் சித்தரிக்கப்பட்டுள்ளன. தங்க வங்கமான `சோனார் பங்க்ளா'வுடன், ஆத்ம நிர்பர் பாரத் `தற்சார்பு இந்தியா' என்ற கனவுக்கும் நேதாஜி மிகப் பெரிய உத்வேகமாக உள்ளார் என்று பிரதமர் கூறினார். ■

- நேதாஜி பிறந்த ஜனவரி 23 ஆம் தேதியை `பராக்கிரம தினம்' என அறிவிக்கும், அரசிதழ் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.
- ஹெளரா - கல்கா மெயிலுக்கு `நேதாஜி எக்ஸ்பிரஸ்' என ரயில்வே நிர்வாகம் பெயர் மாற்றம் செய்துள்ளது
- அந்தத் தருணத்தின் நினைவாக நாணயம் மற்றும் தபால் தலையை பிரதமர் வெளியிட்டார்.
- இந்திய மண்ணில் மூவர்ணக் கொடியை நேதாஜி ஏற்றியதன் 75வது ஆண்டை குறிக்கும் வகையில் 2018-ல் பொது நிகழ்ச்சி ஒன்று நடத்தப்பட்டது. மேலும் அந்தமானில், ரோஸ் தீவுக்கு நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் தீவு என பெயரிடப்பட்டது; நெயில் தீவுக்கு ஷாஹீத் தீவு என பெயரிடப்பட்டது; ஹேவ்லாக் தீவுக்கு ஸ்வராஜ் தீவு என பெயரிடப்பட்டது.

"

நேதாஜியின் பிறந்த நாளான ஜனவரி 23 ஆம் தேதி ஒவ்வொரு ஆண்டும் `பராக்கிரம தினமாக'' கொண்டாட நாடு முடிவு செய்துள்ளது. இன்றைக்கு, சுதந்திரம் பெற்று 75வது ஆண்டை நோக்கி நாடு சென்று கொண்டிருக்கும் நிலையில், தற்சார்பு இந்தியாவை உருவாக்கும் உறுதியுடன் முன்னேறும் நிலையில், நேதாஜியின் வாழ்க்கை, அவருடைய ஒவ்வொரு பணி, அவரது ஒவ்வொரு முடிவும் நமக்கு உத்வேகம் தருபவையாக உள்ளன

- பிரதமர் நரேந்திர மோடி

பிரதமரின் முழு உரையைக் கேட்க இந்த கியூ ஆர் கோடை ஸ்கேன் செய்யவும்




# புதிய வழியில் பிரதமரின் திறன் மேம்பாட்டு திட்டம்

**தற்போதைய காலத்துக்கு ஏற்ற வகையில், திறனை வளர்ப்பதற்கான திறன் மேம்பாட்டு திட்டம் 3.0, இந்தியாவை சர்வதேச திறனுக்கான தலைநகராக மாற்ற உதவும்**

உலகம் முழுவதும் மக்களின் வாழ்க்கை முறையை கொரோனா வைரஸ் மாற்றியுள்ளது. மேலும், திறன் தேவைகளிலும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. உள்ளூர் பொருளாதாரத்துக்கு ஆதரவு அளிக்கவும், சர்வதேச தேவைகளை நிறைவேற்றவும், பிரதம மந்திரியின் திறன் மேம்பாட்டுத் திட்டம் 3.0-வை அரசு தொடங்கியுள்ளது. சர்வதேச அளவிலும், உள்ளூர் அளவிலும் மாறிவரும் தேவைக்கு ஏற்ப இது வடிவமைக்கப்பட்டுள்ளது. ரூ.949 கோடி மதிப்பிலான இந்தத் திட்டத்தின்மூலம், கொரோனாவுக்கு பிந்தைய உலகில், சுமார் 8 லட்சம் இளைஞர்களுக்கு திறன் பயிற்சி அளிக்கப்படும்.


பல ஆண்டுகளாக ஜம்மு-காஷ்மீர் போராடி வந்த நிலையில், அங்கு வசிக்கும் சமிர் அகமது நாசர் என்பவர், தற்போது தொழில்முறை முடி திருத்துநராக மாறியுள்ளார். நிதி அடிப்படையில் அதிகாரம் பெற்றவராக இருப்பதுடன், சுயசார்பு கொண்டவராகவும் மாறியுள்ளார். இதற்காக பிரதம மந்திரியின் திறன் மேம்பாட்டுத் திட்டத்துக்கு அவர் நன்றி தெரிவிக்கிறார். பிரித்தம் மற்றும் அவரது நண்பரும் கூட இதேபோல மேம்பாடு அடைந்துள்ளனர். இதற்கு முன்னதாக, இரவு-பகலாக உழைத்தபோதிலும், தங்களது தேவைகளை அவர்களால் நிறைவேற்ற முடியவில்லை. இருந்தாலும், பிரதமரின் திறன் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், தொழில்துறை வெல்டிங் பயிற்சி பெற்றதைத் தொடர்ந்து, மிகப்பெரும் நிறுவனங்களில் அவர்கள் பணியாற்றி வருகின்றனர். இதுகுறித்து பிரித்தம் கூறும்போது, “உரிய திறன் பயிற்சி பெறாததால், ரூ.8,000 மட்டுமே வருமானம் பெற்று வந்தேன். பிரதம மந்திரியின் திறன் மேம்பாட்டு திட்டத்தின்கீழ், பயிற்சி பெற்ற பிறகு, அதிக சம்பளத்தில் மிகப்பெரும் நிறுவனத்தில் எனக்கு வேலை கிடைத்தது. பல்வேறு துறைகளிலும் தொழில் நிறுவனங்களுக்கான வெல்டிங் பணி வாய்ப்புகள் இருப்பதால், இந்தப் பயிற்சியானது ஏராளமான வாய்ப்புகளை ஏற்படுத்தியுள்ளது,” என்றார்.

திறனை வளர்த்துக் கொள்வதன்மூலம், மக்களின் வாழ்க்கையை எளிதானதாகவும், சிறப்பானதாகவும் எவ்வாறு மாற்றிக் கொள்ள முடியும் என்பதற்கு இவை சில உதாரணங்களாக உள்ளன.

கொரோனா பெருந்தொற்று, புதிய திறனுக்கான தேவையை உருவாக்கியுள்ளது. நீண்டகால நோக்கத்தின் அடிப்படையில், மூன்றாவது கட்ட பிரதமரின் திறன் மேம்பாட்டுத் திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இது இளைஞர்களுக்கு 300-க்கும் மேற்பட்ட திறன் மேம்பாட்டு பயிற்சி முறைகளை கொண்டுவருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த பிரதமரின் திறன் மேம்பாட்டுத் திட்டம் 3.0-வானது தற்காலத்துக்கு ஏற்ற, தேவையின் அடிப்படையிலான திறன் மேம்பாடு, டிஜிட்டல் தொழில்நுட்பம், தொழில்துறை 4.0 திறன் ஆகியவற்றில் கவனம் செலுத்தும்.

**மாற்றமிகு இந்தியாவை உருவாக்கும் இலக்கை நிறைவேற்ற பிரதமரின் திறன் மேம்பாட்டு திட்டம் 3.0**

- சுமார் 600 மாவட்டங்களில் இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது
- 300-க்கும் மேற்பட்ட பிரிவுகளுடன் 37 துறைகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது, 28 மாநிலங்கள் மற்றும் 8 யூனியன் பிரதேசங்களில் தொடங்கப்பட்டுள்ளது. இது சுயசார்பு இந்தியா இயக்கத்தை நோக்கிய மற்றொரு நடவடிக்கையாக உள்ளது
- 15 முதல் 45 வயதுக்கு உட்பட்ட வேலைவாய்ப்பற்ற/ வெளியேறிய இளைஞர்களுக்கு திறனை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டது
- 729 பிரதமரின் திறன் மேம்பாட்டு மையங்கள், திறன் மேம்பாட்டு மையங்களாக இல்லாமல் தொகுப்பில் இணைந்துள்ள பயிற்சி மையங்கள், திறன் இந்தியா திட்டத்தின்கீழ் உள்ள 200-க்கும் மேற்பட்ட ஐடிஐ ஆகியவற்றில் பிரதமரின் திறன் மேம்பாட்டு திட்டம் 3.0 மூலம் பயிற்சிகள் அளிக்கப்படும்
- பயிற்சி அளிப்பதோடு, வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்கும் உதவிகள் கிடைக்கும்
- தேவை அடிப்படையிலான திறன் பயிற்சிக்காக மாவட்ட திறன் குழுக்களை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தப்படும்



ஷியாமா பிரசாத் முகர்ஜி கிராம நகர்ப்புற இயக்கம்

# கிராம நகர்ப்புற இயக்கம்: கிராமப்புற இந்தியாவுக்கான நகர்ப்புற திட்டமிடல்

**பிரதமர் நரேந்திர மோடி, தான் ஆற்றும் பல்வேறு உரைகளிலும் எளிதாக வாழ்வது குறித்து விரிவாக பேசியுள்ளார். எனினும், அடிப்படை வசதிகள் என்பது, நகர்ப்புற பகுதிகளுக்கு மட்டுமல்லாமல், 68 சதவீத மக்கள் வாழும் இந்தியாவின் கிராமப்புறங்களிலும் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும். நகர்ப்புறங்களில் கிடைக்கும் அனைத்து வசதிகளும் கிராமப்புற மக்களுக்கும் கிடைப்பதை உறுதிப்படுத்த, 2016-ம் ஆண்டில் ஷியாமா பிரசாத் முகர்ஜி ரூர்பன் இயக்கத்தை அரசு தொடங்கியது**



கல்வி, சிறந்த மருத்துவமனைகள், குடிநீர், இணையதளம், சிறந்த வேலைவாய்ப்புகள் போன்ற வசதிகள், தங்களுக்கும் கிடைக்க வேண்டும் என்று இந்தியாவில் உள்ள கிராமப்புற மக்களும் விரும்புகிறார்கள். இவை அனைத்தும் மக்களை நகரங்களை நோக்கி ஈர்க்கின்றன. இடம்பெயரும்போது, கிராமப்புறங்களில் இந்த வசதிகள் ஏன் கிடைக்கவில்லை என்று அவர்களுக்கு அடிக்கடி கேள்வி எழுகிறது. சாதாரண மக்களின் இந்தப் பிரச்சினைகளை சரிசெய்வதற்காக சத்தீஷ்கரில் பிப்ரவரி 21, 2016-ல் ஷியாமா பிரசாத் முகர்ஜி கிராம நகர்ப்புற இயக்கத்தை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கிவைத்தார். அப்போது உரையாற்றிய

# கிராம நகர்ப்புறம் எவ்வாறு திட்டமிடப்பட்டது?

கிராமப்புற பகுதிகளில் நகர்ப்புற வசதிகளை ஏற்படுத்துவதற்கான மிகப்பெரும் திட்டத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம், கிராமப்புற இந்தியாவை மாற்றும் கனவை நிறைவேற்ற முடியும் என்று மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் ஏபிஜே அப்துல் கலாம் கூறியுள்ளார். நகர்ப்புறங்களையும், கிராமப்புறங்களையும் இணைப்பதற்கு நான்கு விதமான இணைப்பு தேவை என்று அவர் வலியுறுத்தினார். அதாவது, கட்டமைப்பு இணைப்பு, மின்னணுவியல் இணைப்பு, அறிவுசார் இணைப்பு, பொருளாதார இணைப்பு ஆகியவையே அவை. கிராமப்புறங்களில் நகர்ப்புற வசதிகளை ஏற்படுத்துவதற்கான PURA மாதிரி திட்டம் தோல்வியடைந்ததால், கிராம நகர்ப்புறம் (rurban) திட்டம் உருவாக்கப்பட்டது.

- 5 ஆண்டுகளில் சுமார் 300 கிராம நகர்ப்புற தொகுப்புகளை உருவாக்குவது; அடுத்த 3 ஆண்டுகளில் மேலும் 1,000 தொகுப்புகளை உருவாக்குவது என்று அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது
- கிராம நகர்ப்புற திட்டத்தின் நோக்கம் என்பது, நகர்ப்பகுதிகளைப் போன்ற வசதிகளுடன் கூடிய கிராமத்தை உருவாக்குவதே ஆகும். இதனை செய்யும்போது, கிராமப்புற வாழ்க்கையின் சமூக அம்சங்கள், பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்த முடியும்.
- முதல் 5 ஆண்டுகளில் 300 கிராம நகர்ப்புற தொகுப்புகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பிப்ரவரி 2020-ல், 296 தொகுப்புகளை உருவாக்குவதற்கு அரசு ஒப்புதல் வழங்கியது
- கிராம நகர்ப்புறம் என்பது, 30 லட்சம் முதல் 40 லட்சம் மக்கள் தொகையைக் கொண்ட 15-20 கிராமங்களின் தொகுப்பை குறிப்பிடுகிறது. இந்தத் தொகுப்புகளில் நிலப்பகுதி மற்றும் கடலோரப் பகுதிகளில் 25,000 முதல் 50,000 வரையான மக்கள் தொகையுடனும், பாலைவனம், மலைப்பகுதி அல்லது பழங்குடியின பகுதிகளில் 5,000 முதல் 15,000 மக்கள் தொகையுடனும் கூடிய கிராமங்களை தொடர்ச்சியாக பெற்றதாக இருக்கும்.
- இந்தத் தொகுப்புகளை மத்திய ஊரக மேம்பாட்டு அமைச்சகம் அடையாளம் காணும். மாவட்ட அளவிலும், துணை மாவட்ட அளவிலும் கிராம அளவிலும் மக்கள் தொகை, பொருளாதார வாய்ப்புகள், திறன், சுற்றுலா வாய்ப்பு போன்ற பல்வேறு அம்சங்களை அறிவியல்பூர்வமாக ஆய்வுசெய்து தொகுப்புகள் கண்டறியப்படும்.
- பொருளாதார நடவடிக்கைகள், திறன் வளர்ப்பு மற்றும் உள்ளூர் தொழில்முனைவோர் திறன் மற்றும் கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் போன்ற வழிமுறைகளுடன் இந்தத் தொகுப்புகள் உருவாக்கப்படும்.



“

*இது நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் உள்ள மக்களையும் பயனடையச் செய்யும் திட்டம். விரைவில் நகரங்களின் சுமை குறையும். கிராமங்களை விட்டு வெளியேறுவோருக்கு சிறந்த இடம் கிடைக்கும். புதிய நகரங்கள் உருவாக்கப்படும். இந்த புதிய நகரங்கள், பொருளாதார நடவடிக்கைகளுடன் இணைக்கப்பட்டு ஒருங்கிணைக்கப்படும். இந்த சிந்தனையுடன் கிராம நகர்ப்புற திட்டத்தை இன்று நாம் தொடங்கியுள்ளோம். நாட்டில் இந்தத் திட்டம் ஒன்றாக செயல்பாட்டுக்கு வரும்போது, லட்சக்கணக்கான மக்கள் பயனடைவார்கள் என்று நான் நம்புகிறேன்*

**பிரதமர் நரேந்திர மோடி**

அவர், “பொலிவுறு நகரங்கள் இருக்கும்போது, பொலிவுறு கிராமங்கள் இல்லாதது ஏன்? என்று மக்கள் கேள்வி எழுப்புகிறார்கள்,” என்றார்.

இந்தத் திட்டத்துக்கு டாக்டர் ஷியாமா பிரசாத் முகர்ஜியின் பெயர் சூட்டப்பட்டது. கிராம நகர்ப்புறம் என்பது rurban என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படுகிறது. இதில், கிராமப்புறம் என்ற வார்த்தையிலிருந்து rur-ம், நகர்ப்புறம் என்பதற்கான ஆங்கில வார்த்தையிலிருந்து ban என்ற எழுத்துக்களையும் சேர்த்து அழைக்கப்படுகிறது. பொருளாதார, சமூக மற்றும் இணைப்புக்கான கட்டமைப்பு வசதிகளை வழங்கி கிராமப்புறங்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

நாட்டின் உண்மையான வளர்ச்சிக்கு, கிராமப்புறங்களும் மேம்பாடு அடைய வேண்டியது அவசியம். பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமானால், நாம் மக்களுக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும். பின்னர், அடிமட்ட அளவில் வளர்ச்சியை கொண்டுசெல்ல வேண்டும். இதுதொடர்பாக பேசிய பிரதமர் நரேந்திர மோடி, “வளர்ச்சியின் மையங்களாக கிராமப்புற மக்களை உருவாக்குவதற்காகவே கிராம நகர்ப்புற இயக்கம் என்ற சிந்தனை ஏற்பட்டது. இதன்மூலம், பொருளாதார வளர்ச்சியின் அடி நாதமாக அவர்கள் உருவாக்கப்படுவார்கள். அருகில் உள்ள 5-10 கிராமங்களுக்கு சிறு சந்தைகள் மற்றும் வர்த்தகம் இருக்கும். அவை படிப்படியாக கிராம நகர்ப்புறங்களாக மாறும்,” என்றார்.



# போற்றப்படாத நாயகர்கள்:

## குறைந்த அளவில் அறியப்பட்டவர்களுக்காக பத்ம விருதுகள்

*புதிய இந்தியாவின் பத்மஸ்ரீ விருதுகளை வென்றவர்கள், புதிய காலத்தின் நாயகர்கள். குறிப்பிட்ட காரணத்துக்காக தங்களது வாழ்க்கையை முழுமையாக அர்ப்பணித்து செயல்பட்டபோதிலும், பெரும்பாலும் அவர்கள் அறியப்படாதவர்களாகவும், தனிமையான வாழ்க்கை வாழ்பவர்களாகவும் உள்ளனர். எனினும், பத்மஸ்ரீ என்ற வடிவில் அங்கீகாரத்தைப் பெற்ற பிறகு, ஒட்டுமொத்த தேசத்தையும் ஊக்குவிப்பதற்கான ஆதாரமாக அவர்கள் தற்போது மாறியுள்ளனர்*

ஒரு நாயகன், எந்தப் பகுதியிலிருந்தும் வரலாம். தீவிர செயல்பாடுகள் மூலம், தங்களது அடையாளத்தை சாதாரண மக்கள் இட்டுச் செல்கின்றனர். பயனுள்ள காரணத்துக்காக தங்களது வாழ்க்கையை அர்ப்பணித்தபோதிலும், அவர்களுக்கு அங்கீகாரம் கிடைப்பதில்லை என்பது வருத்தம் அளிக்கிறது. இந்த சமமற்ற தன்மையை புரிந்துகொண்டு, இதுபோன்ற போற்றப்படாத நாயகர்களுக்கு மதிப்பளித்து கவுரவிப்பது என மத்திய அரசு முடிவுசெய்துள்ளது. கடந்த 2014-ம் ஆண்டு முதலே இதுபோன்ற நபர்களுக்கு பத்ம ஸ்ரீ விருதுகளை வழங்கி வருகிறது.


சாதாரண மக்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், சிவப்பு சுழல் விளக்கு பயன்படுத்த தடை விதித்து விஐபி-க்கள் கலாச்சாரத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொண்டது. ஒவ்வொருவரின் பங்களிப்பும் முக்கியம், ஒரு சிறு முயற்சி கூட, நாட்டில் பெரிய மாற்றத்தை கொண்டுவரும் என்று பிரதமர் நரேந்திர மோடி கருதுகிறார். புதிய இந்தியாவை கட்டமைப்பதற்காக ஒவ்வொரு குடிமகனும் அளிக்கும் பங்களிப்பையும்

> “
> **பத்ம விருதுகளுக்கு தேர்வுசெய்யப்பட்ட அனைவராலும் நாம் பெருமைப்படுகிறோம். நாட்டுக்கும், மனித சமூகத்துக்கும் அவர்கள் அளித்த பங்களிப்பை இந்தியா கொண்டாடுகிறது. வாழ்க்கையின் பல்வேறு மட்டத்திலும் உள்ள இந்த அரிதான நபர்கள், மற்றவர்களின் வாழ்க்கையில் தரமான மாற்றத்தை கொண்டுவந்துள்ளனர்.**
>
> **-பிரதமர் நரேந்திர மோடி**





பத்ம விபூஷண்
ஷின்சோ அபே



பத்ம விபூஷண்
எஸ்.பி.பாலசுப்பிரமணியம்



பத்ம பூஷன்
தருண் கோகாய்

பத்ம விருதுகளுக்கு தேர்வுசெய்யப்பட்டுள்ளவர்களின் முழுமையான பட்டியலுக்கு நுழைய வேண்டிய இணைப்பு- https://padmaawards.gov.in/PDFS/2021AwardeesList.pdf

# உந்துசக்தியாக மாறிய போராட்டம்

**பத்ம விருதுகளுக்கு தேர்வுசெய்யப்பட்டவர்களில் மக்களால் அறியப்படாத பல்வேறு நபர்களும் உள்ளனர். சமூகத்துக்கு சுயநலம் இல்லாமல் ஆற்றிய சேவைகளுக்காக அவர்கள் கவுரவிக்கப்பட்டுள்ளனர்**



## பிருபால ரபா (அஸ்ஸாம்):

**சூனியக்காரிகள் என்று கூறி தாக்குதல் நடத்தும் செயலை தடுக்கும் மற்றும் பாதுகாக்கும் சட்டம் 2015-ஐ, நிறைவேற்றுவதற்கு காரணமாக இருந்தவர்**

சூனியக்காரி என்று கூறி, தனக்கு எதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதால், அதற்கு எதிராக குரல் கொடுத்தவர் அஸ்ஸாம் மாநிலத்தைச் சேர்ந்த பிருபால ரபா. சூனியக்காரிகள் என்று பெண்களை சித்தரித்து, அவர்களுக்கு எதிராக கொடுமைகளை அரங்கேற்றுவது அவரது கிராமத்தில் வாடிக்கையாக இருந்தது. இந்த கொடுமையான செயல்பாடுகளுக்கு எதிராக குரல் கொடுக்க பிருபால முடிவுசெய்தார். பெண்கள் குழு ஒன்றை உருவாக்கி, போராடத் தொடங்கினார். இவர் இதுவரை 42 பெண்களைப் பாதுகாத்துள்ளார். இவரது முயற்சிகள் காரணமாக, சூனியக்காரிகள் என்று கூறி தாக்குதல் நடத்தும் செயலை தடுக்கும் மற்றும் பாதுகாக்கும் சட்டம் 2015-ஐ அஸ்ஸாம் அரசு நிறைவேற்றியது.



## பாப்பம்மாள் (தமிழ்நாடு)

**105 வயதான இயற்கை விவசாயி**

பொதுவாக 60 வயதை அடைந்தவுடனேயே ஓய்வுபெறும் மனநிலைக்கு மக்கள் சென்றுவிடுகின்றனர். எனினும், தமிழகத்தைச் சேர்ந்த பாப்பம்மாள், 105 வயதிலும் இயற்கை வேளாண்மையில் ஈடுபட மக்களுக்கு உந்துசக்தியாக திகழ்கிறார்! தனது 2.5 ஏக்கர் நிலத்தில் இயற்கை விவசாயம் செய்து வருகிறார். அவரது முயற்சியால் உந்தப்பட்டு, அந்தப் பகுதியில் உள்ள பல்வேறு விவசாயிகளும் இயற்கை வேளாண்மையில் ஈடுபட்டு வருகின்றனர். வேளாண்மை தொடர்பான நிகழ்ச்சிகளில் கூட அவர் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார். தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தின் ஆலோசனைக் குழு உறுப்பினராகவும் செயல்படுகிறார்.

கவுரவிக்கும் வகையிலும், அங்கீகரிக்கும் வகையிலும் பத்ம விருது பெறுவோரை தேர்வுசெய்வதற்கான ஒட்டுமொத்த நடைமுறைகளையும் மத்திய அரசு மாற்றியமைத்துள்ளது. தற்போது ஒவ்வொரு தனிநபரின் பணிகளும் கணக்கிடப்படுகின்றன. அவரது அடையாளத்தை கணக்கிடுவது இல்லை. இந்த அரசின் கீழ் மட்டுமே, நாட்டின் சாதாரண மனிதர் கூட, உயரிய விருதுக்கு பரிசீலிக்கப்படுகிறார்.

தனது மனதின் குரல் நிகழ்ச்சியில் இதுகுறித்து குறிப்பிட்ட பிரதமர் நரேந்திர மோடி, "ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டுவரும் பத்ம விருது பெறுவோரை தேர்வுசெய்ய குறிப்பிட்ட வழிமுறைகள் உள்ளன. எனினும், ஒட்டுமொத்த நடவடிக்கைகளும், கடந்த மூன்று ஆண்டுகளில் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. நமது நாட்டில் உள்ள எந்த நபரையும், எந்தவொரு குடிமகனும் பரிந்துரைக்க முடியும். ஆன்லைன் நடைமுறையை கொண்டுவந்து, ஒட்டுமொத்த நடவடிக்கையிலும் வெளிப்படைத்தன்மை கொண்டுவரப்பட்டுள்ளது," என்றார்.



### டாக்டர் திருவேங்கடம் வீரராகவன் (தமிழ்நாடு) (மறைவுக்குப் பிறகு)

**2 ரூபாய் மட்டுமே வசூலித்த மருத்துவர்**

வடசென்னையைச் சேர்ந்த டாக்டர் திருவேங்கம் வீரராகவன், வெறும் 2 ரூபாய்க்கு மருத்துவம் பார்த்து பிரபலமடைந்தவர். தனது நோயாளிகளின் நிதிச் சுமையை குறைக்கும் வகையில், 1973-ல் 2 ரூபாய்க்கு மருத்துவம் பார்க்கத் தொடங்கினார். பின்னர் கட்டணத்தை ரூ.5-ஆக உயர்த்தினார். அந்தப் பகுதியைச் சேர்ந்த மருத்துவர்கள் எதிர்ப்புத் தெரிவித்ததுடன், குறைந்தது ரூ.100 வசூலிக்குமாறு கேட்டுக் கொண்டனர். இதனை ஏற்க மறுத்து, நோயாளிகளுக்கு இலவசமாக சிகிச்சை அளிக்க முடிவுசெய்தார்.



### நாராயண் தேவ்நாத் (மேற்குவங்கம்):

**உலகின் நெடிய கார்ட்டூன் கதையை உருவாக்கியவர்**

உலகில் மிக நீளமான கார்ட்டூன் கதையை உருவாக்கி சாதனை படைத்தவர் யார் என்று கேட்டால், பொது அறிவில் நல்ல புலமை பெற்றவர்களுக்கு கூட தெரியாது. இந்த அரிய சாதனையை நிகழ்த்தியவர் நாராயண் தேவ்நாத். ஹவுரா பகுதியில் பிறந்த 97 வயதான தேவ்நாத், 70 ஆண்டுகளாக வங்காள மொழியில் கார்ட்டூன் கதைகளை உருவாக்கி வருகிறார். டி.லிட்., பட்டம் பெற்ற ஒரே கார்ட்டூன் கதை வடிவமைப்பாளர் இவர்தான். அவரது கார்ட்டூன் கதாபாத்திரமான பண்டுல், மேற்குவங்கத்தின் ஒவ்வொரு வீட்டிலும் பிடித்த பெயராக உள்ளது.




### சுல்ட்ரிம் சோஞ்சோர் (லடாக்)

**தனது சொத்துக்களை விற்று 38 கிலோமீட்டர் நீள சாலையை அமைத்தவர்**

ஜம்மு-காஷ்மீரின் கார்கில் மாவட்டத்தின் சன்ஸ்கார் பகுதியைச் சேர்ந்த 79 வயதான சுல்ட்ரிம் சோஞ் சோர், உரிய சாலைகள் இல்லாமல் உள்ளூர் மக்கள் கடும் இன்னல்களை அனுபவித்து வருவதை அறிந்து வேதனையடைந்தார். தனது சொத்துக்களை விற்று, ரூ.57 லட்சம் மதிப்பிலான இயந்திரத்தை வாங்கினார். இதன்மூலம், 38 கிலோமீட்டர் தொலைவுக்கு சாலை அமைத்தார். முன்னதாக சாலையில் பல நாட்கள் நடந்து செல்ல வேண்டி இருந்ததுடன் பயணிக்க பெருந்தொகை செலவளிக்க வேண்டியதாக இருந்தது. இந்த சாலை மூலம், அவர்களது சவால்கள் குறைந்தன.



### சுஜித் சட்டோபாத்யாயா (மேற்குவங்கம்)

**ஒட்டுமொத்த ஆண்டுக்கும் டியூஷன் கட்டணமாக ரூ.1 வசூலிக்கும் ஆசிரியர்**

மேற்குவங்கத்தின் பர்த்மான் மாவட்டத்தைச் சேர்ந்த சுஜித் சட்டோபாத்யாயா, பொதுநலனுக்கான அடையாளமாக திகழ்கிறார். மாணவர்களுக்கு பயிற்றுவிப்பு கட்டணமாக ஆண்டு முழுமைக்கும் ரூ.1 மட்டுமே வசூலிக்கிறார். சட்டோபாத்யாயாவின் பயிற்சி மையத்தில் 300-க்கும் மேற்பட்ட மாணவர்கள் படிக்கின்றனர். இதுகுறித்து கூறிய சட்டோபாத்யாயா, "ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளால், படிப்பதற்கு மிகப்பெரும் அளவில் எவ்வாறு கட்டணம் செலுத்த முடியும்? இதனை கருத்தில் கொண்டு, இந்த பயிற்சி மையத்தை தொடங்கினேன். இந்தப் பணிகளுக்காக இதுபோன்ற மிகப்பெரும் கவுரவத்தை நான் எதிர்பார்க்கவில்லை," என்றார்.

ஒவ்வொரு ஆண்டும் குடியரசு தினத்தையொட்டி பத்ம விருதுகள் அறிவிக்கப்படுகின்றன. 2021-ம் ஆண்டில் பத்ம விபூஷண் விருதுக்கு 7 பேரும், பத்ம பூஷன் விருதுக்கு 10 பேரும், பத்மஸ்ரீ விருதுக்கு 102 பேரும் தேர்வுசெய்யப்பட்டுள்ளனர். இந்தியா-ஜப்பான் நட்புறவுக்கு புதிய வடிவம் கொடுத்ததற்காக ஜப்பான் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபே உள்ளிட்ட பிரபலமானவர்களுக்கு பத்ம விபூஷண் விருது வழங்கப்படுகிறது. தமிழகத்தைச் சேர்ந்த பிரபல பின்னணி பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியத்துக்கு அவரது மறைவுக்குப் பிறகு பத்ம விபூஷண் வழங்கப்படுகிறது.



**அஞ்சூ ஜாம்சென்பா (அருணாச்சப்பிரதேசம்)**

**எவரெஸ்ட் சிகரத்தை 5 நாட்களில் இரண்டு முறை ஏறியவர்**

உலகின் மிக உயரமான மலையான எவரெஸ்ட் சிகரத்தை அடைய வேண்டும் என்பது ஒவ்வொரு மலையேற்ற வீரரின் கனவு. 5 நாட்களில் இரண்டு முறை எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த ஒரே பெண் அஞ்சூ ஜாம்சென்பா தான். 41 வயதான அவர், இரண்டு குழந்தைகளுக்கு தாய். மே 16, 2017-ல் முதன்முறையாக எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த அவர், மே 21-ல் இரண்டாவது முறையாக ஏறினார். இதுவரை அவர் எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியை 5 முறை அடைந்துள்ளார்.



**லாகா கான் (ராஜஸ்தான்)**

**ஒரே சிந்தி சாரங்கி இசைக்கலைஞர்**

நாட்டில் உள்ள ஒரே சிந்தி சாரங்கி இசைக்கலைஞர் லாகா கான். ராஜஸ்தான் மாநிலத்தின் ஜோத்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த அவர், மங்கனியர் சமூகத்தைச் சேர்ந்தவர். பயிற்சிபெற்ற பாடகர். இவர், இந்தி, மார்வாடி, சிந்தி, பஞ்சாபி, முல்தானி போன்ற பல்வேறு மொழிகளில் பாடக் கூடியவர். சாகித்ய அகாடமி மற்றும் பல்வேறு சர்வதேச விருதுகளைப் பெற்றுள்ளார். தனது இசை மூலம், உலகம் முழுவதும் மக்களை கவர்ந்துள்ளார்.



**ஆச்சார்யா ராம் யத்ன சுக்லா (உத்தரபிரதேசம்):**

**89 வயதில் இலவச சமஸ்கிருத கல்வி அளிப்பவர்**

உலகின் மிகவும் பழமைவாய்ந்த நாகரீகத்தை கொண்ட நாடுகளில் ஒன்று இந்தியா. நீண்டகாலமாக இருந்த மொழியாக சமஸ்கிருதம் கருதப்படுகிறது. வாரணாசியைச் சேர்ந்த 89 வயதான ஆச்சார்யா ராம் யத்னா சுக்லா, சமஸ்கிருதம் மற்றும் வேத அறிவியலை இலவசமாக கற்றுக் கொடுத்து வருகிறார். இதன்மூலம், இந்த மொழியை புதிய சந்ததியினருக்கு கொண்டு சேர்க்கிறார். காசி வித்வத் பரிஷத்தின் தலைவராக உள்ளார்.



**பூரி பாய் (மத்தியப்பிரதேசம்):**

**ஓவியங்கள் மூலம் சர்வதேச அங்கீகாரம் பெற்றவர்**

தனது கிராம எல்லைகளைத் தாண்டி பித்தோரா ஓவியங்களை கொண்டுசேர்த்த முதல் பழங்குடியின பெண் கலைஞர் பூரி பாய். அவரது பிரச்சாரம், குடிசையின் சுவர்களிலிருந்து காகிதங்களுக்கு மாறின. இது அவருக்கு பாராட்டுகளையும், அங்கீகாரத்தையும் பெற்றுத் தந்தது. ஐரோப்பா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் உள்ள அருங்காட்சியகங்கள் மற்றும் ஓவியக் கூடங்களில் அவரது ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. சாத்பியின் ஏல மையத்தில் அவரது ஓவியங்களில் ஒன்று விற்கப்பட்டது.

அசாம் முன்னாள் முதல்வர் தருண் கோகாய்க்கு அவரது மறைவுக்குப் பிறகு பத்ம பூஷன் வழங்கப்படுகிறது. மக்களவை முன்னாள் சபாநாயகர் சுமித்ரா மகாஜனும் பத்ம பூஷனுக்கு தேர்வுசெய்யப்பட்டுள்ளார்.

பத்ம விருதுக்கான பட்டியலில் பல்வேறு தெரிந்த பெயர்கள் இருந்தாலும், சில பெயர்கள் நாம் இதுவரை அறிந்திருக்காதவையாக உள்ளன. அவர்களது அளப்பரிய பணிகள் மற்றும் ஓய்வில்லா, சுயநலமற்ற முயற்சிகளுக்காக அவர்கள் அங்கீகாரம் பெற்றுள்ளனர்.



## பிரதமரின் விவசாயிகள் நலநிதியின் 2 ஆண்டுகள் மற்றும் மண் வள அட்டையின் 6 ஆண்டுகள்

# புதிய நம்பிக்கையைப் பெற்று, சுயசார்பு கொண்டவர்களாக மாறிய விவசாயிகள்

*பல ஆண்டுகளாக புறக்கணிக்கப்பட்ட விவசாயிகளின் நலனுக்காகவே திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. பிரதமரின் விவசாயிகள் நலநிதி திட்டத்தின்கீழ், விவசாயிகளின் கணக்குகளுக்கு ரூ.1,13,000 கோடிக்கும் மேலான தொகை பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட இந்தத் திட்டம், உலகின் மிகப்பெரும் நேரடி பண பரிவர்த்தனை திட்டமாக உள்ளது. அதேநேரத்தில், 6 ஆண்டுகளுக்கு முன்பு அறிமுகப்படுத்தப்பட்ட மண் சுகாதார அட்டை திட்டம், வேளாண் உற்பத்தியையும், விவசாயிகளின் வருவாயையும் அதிகரிக்க உதவுகிறது*

ராஜஸ்தான் மாநிலத்தின் ஸ்ரீகங்காநகர் மாவட்டத்தில் பிப்ரவரி 19, 2015-ல் மண் வள அட்டை திட்டம் தொடங்கப்பட்டது. இது விவசாயிகளின் வேளாண் உற்பத்தியை அதிகரிக்க உதவுவதோடு மட்டுமன்றி, அவர்களது வருவாயை அதிகரிக்கச் செய்யவும் உதவுகிறது. இதேபோன்று, மற்றொரு முடிவை பிப்ரவரி 24, 2019-ல் அரசு மேற்கொண்டது. நாட்டில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் நலநிதி அளிக்கும் திட்டம், உத்தரப்பிரதேச மாநிலத்தில் தொடங்கப்பட்டது. விவசாயிகளின் வங்கிக்கணக்கில் நான்கு மாதங்களுக்கு ஒருமுறை ரூ.2,000 வரவு வைக்கப்படுவதன் மூலம், விவசாயிகளுக்கு விவசாயம் மற்றும் அதுதொடர்பான நடவடிக்கைகளுக்கு ஏற்படும் செலவுக்கு உதவுவுதே இதன் நோக்கமாகும்.

ஒரு புறம், மண் வள அட்டை திட்டத்தின்மூலம், போதிய அளவில் ஊட்டச்சத்துக்களைப் பயன்படுத்தி, மண் உற்பத்தி திறன் மேம்படுத்தப்பட்டு, சாதகமான பலனைத் தருகிறது. மற்றொருபுறம், விவசாயிகள் நலநிதி திட்டம், விவசாயிகளுக்கு குறிப்பாக சிறு விவசாயிகளுக்கு

> “நல நிதி தொகை, விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படுகிறது. தரகு இல்லை, பணம் குறைக்கப்படுவதில்லை, முறைகேடு எதுவுமில்லை. இது விவசாயிகளுக்கு நேரடியாக சென்றுசேர்கிறது. இந்தத் திட்டத்தின் நோக்கம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஒவ்வொரு விவசாயியின் குடும்பத்துக்கும், உரிய நேரத்திலும் இந்தத் திட்டம் வெற்றிகரமாக சென்றடைகிறது.”
>
> **பிரதமர் நரேந்திர மோடி**

# விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தும் நல நிதி



பிரதமரின் விவசாயிகள் நல நிதி திட்டம் குறித்த முழு விவரங்களை <https://pmkisan.gov.in/> என்ற இணையதளத்தில் காணலாம்

இந்த இணையதளத்தில் விவசாயிகள் பதிவுசெய்து கொள்ளலாம்

இதுவரை 11.52 கோடி பயனாளிகள் பதிவுசெய்துள்ளனர்

## ஆரோக்கிய மண், பசுமைவெளிகள்

- சர்வதேச மண் தினம், 2015-ம் ஆண்டில் கொண்டாடப்பட்டது. அதே ஆண்டில் நாட்டில் உள்ள ஒவ்வொரு விவசாய நிலத்தின் ஊட்டச்சத்து திறனை மதிப்பிடுவதற்காக மண் வள அட்டை திட்டத்தை மத்திய அரசு தொடங்கியது
- ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளிலும் விவசாயிகளுக்கு மண் சுகாதார அட்டைகள் வழங்குவதே இதன் நோக்கம். இதன்மூலம், விளைவிக்கும் பணியின்போது, ஊட்டச்சத்து குறைபாடுகளை சரிசெய்ய முடியும்
- முதல் கட்டத்தில் (2015-17) 10.74 கோடி அட்டைகள் விநியோகிக்கப்பட்டன, இரண்டாவது கட்டத்தில் (2017-19) 11.69 கோடி அட்டைகள் வழங்கப்பட்டன
- இந்தத் திட்டத்துக்காக மத்திய அரசு ரூ.700 கோடிக்கும் மேல் செலவிட்டுள்ளது
- இதுவரை புதிதாக 429 நிலையான மண் பரிசோதனை ஆய்வகங்கள், புதிதாக 102 நடமாடும் மண் பரிசோதனை ஆய்வகங்கள், 8,752 மினி மண் பரிசோதனை ஆய்வகங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன
- விவசாயிகள் தங்களது மண் மாதிரிகளை கண்காணிப்பதுடன், மண் வள அட்டை அறிக்கையைப் பெற முடியும்
- மண் வள அட்டை மூலம் வழங்கப்படும் பரிந்துரைகளால் ரசாயன உரங்களின் பயன்பாடு 8 முதல் 10 சதவீதம் குறைந்துள்ளதாகவும், உற்பத்தியை 5-6 சதவீதம் உயர்த்தியுள்ளதாகவும் தேசிய உற்பத்தி கவுன்சில் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது
- 2019-20-ல் "மாதிரி கிராமங்களை உருவாக்குவது" என்ற திட்டம் சோதனை அடிப்படையில் செயல்படுத்தப்பட்டது. இதன்படி, ஒரு குறிப்பிட்ட இடங்களுக்குப் பதிலாக, விவசாயிகளின் பங்களிப்புடன் அவர்களது விளை நிலங்களில் மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டன.
- இந்தத் திட்டம், இளைஞர்களுக்கு விவசாயம் தொடர்பான வேலைவாய்ப்பையும் ஏற்படுத்தியது. இந்தத் திட்டத்தின்கீழ், 40 வயதுக்கு உட்பட்ட கிராமப்புற இளைஞர்கள் மற்றும் விவசாயிகள், மண் சுகாதார ஆய்வகங்களை ஏற்படுத்தி, ஆய்வுகளை மேற்கொள்ளலாம்.

### பலன்களைப் பெறுவது எப்படி?

மண் சுகாதார அட்டைகளில் இயற்கை விவசாயத்துக்கான பரிந்துரைகள் உள்பட 6 பயிர்களுக்கு இரண்டு விதமான உர பரிந்துரைகள் வழங்கப்படுகின்றன. கூடுதல் பயிர்களுக்கான பரிந்துரைகளையும் விவசாயிகள் கேட்டுப் பெற முடியும். மண் சுகாதார அட்டையின் வலைதளத்தில் விவசாயிகளின் தரவுகள் இடம்பெற்றிருக்கும். விவசாயிகள் பலனடைவதற்காக 21 மொழிகளில் காண முடியும். பொது சேவை மையங்கள் மற்றும் www.soilhealth.gov.in <http://www.soilhealth.gov.in> வலைதளத்தில் உள்ள விவசாயிகளுக்கான பக்கத்தில் தங்களது மாதிரிகள் குறித்த முடிவுகளை கண்காணிப்பது, தங்களது அட்டைகளை அச்சு எடுத்துக் கொள்வது போன்றவற்றைப் பெற முடியும். இதன்மூலம், மண் ஆரோக்கியமாக இருந்தால், நிலம் பசுமையாக இருக்கும் என்ற மந்திரத்தை நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

பலன் அளிப்பதாக மாறியுள்ளது. விவசாயிகள் நலநிதி திட்டத்தின்கீழ், கடந்த 2 ஆண்டுகளில் 10.60 கோடி விவசாயிகளுக்கு அவர்களது வங்கிக்கணக்குகளில் ரூ.1,13,000 கோடிக்கும் மேற்பட்ட தொகை வரவு வைக்கப்பட்டுள்ளது.

ஹரியானாவைச் சேர்ந்த சர்தார் சிங், சுந்தர் சிங், குஜராத்தைச் சேர்ந்த கன்ஷ்யாம் படேல், திரு படேல், மத்தியப்பிரதேசத்தைச் சேர்ந்த மூல்சந்த் மேஹ்வாரா, தெலங்கானாவைச் சேர்ந்த எம்.சுதாகர் ரெட்டி போன்ற விவசாயிகளுக்கு பிரதமரின் விவசாயிகள் நலநிதி திட்டம், மிகப்பெரும் ஆதரவாக உள்ளது. இந்தத் திட்டம் சிறு விவசாயிகள், மிகப்பெரும் நில உரிமையாளர்கள் என அனைத்து தரப்பினருக்கும் மிகப்பெரும் பலன் அளித்து வருவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். ஒவ்வொரு 4 மாதங்களுக்கும் ஒரு முறை உரிய நேரத்தில் தவணை நிதி வந்துசேர்கிறது. இதன்மூலம், ரூ.2,000-க்காக கடன் வழங்குவோரை நாட வேண்டிய தேவை ஏற்படுவதில்லை. ஏனெனில், விவசாயிகள் நல நிதி மூலம் விவசாயிகளின் தேவை நிறைவேற்றப்படுகிறது. ■



# ஜம்மு-காஷ்மீருக்கான மேம்பாடு; விவசாயிகளுக்கு சிறந்த வருமானத்தை உறுதிசெய்தல்

**விவசாயிகளை மேம்படுத்தவும், அவர்களுக்கு சிறந்த வருமானம் கிடைக்கச் செய்யவும் அரசு உறுதிபூண்டுள்ளது. இது, அண்மையில் மத்திய அமைச்சரவை மேற்கொண்ட இரண்டு முடிவுகளில் வெளிப்படுகிறது. கொப்பரை தேங்காய் மற்றும் உடைக்கப்பட்ட தேங்காய்க்கான குறைந்தபட்ச ஆதார விலையை உயர்த்த ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதன்மூலம், 12 மாநிலங்களைச் சேர்ந்த 30 லட்சத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் பயனடைந்தனர். ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசத்தின் அதிவேக வளர்ச்சிக்காக நீர்மின் திட்டத்தை செயல்படுத்தவும் ஒப்புதல் தெரிவிக்கப்பட்டது.**


**முடிவு:** 2021-ம் ஆண்டு பருவகாலத்தில் கொப்பரை தேங்காய்க்கான குறைந்தபட்ச ஆதார விலையை பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு அதிகரித்தது

## பலன்கள்:

- அதிக அளவில் கொப்பரை தேங்காய் உற்பத்தி செய்யும் நாடாக இந்தியா உள்ளது. 20 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் 1.5 கோடி டன் கொப்பரை தேங்காயை உற்பத்தி செய்கிறது. இந்த முடிவு, 12 கடலோர மாநிலங்களைச் சேர்ந்த 30 லட்சம் விவசாயிகளுக்கு பயனளிக்கும்.
- உடைக்கப்பட்ட தேங்காயின் குறைந்தபட்ச ஆதார விலை குவிண்டாலுக்கு 2020-ம் ஆண்டில் ரூ.9,960 என்ற அளவில் இருந்த நிலையில், 2021-ம் ஆண்டில் ரூ.375 அதிகரிக்கப்பட்டு, ரூ.10,335-ஆக நிர்ணயம் செய்யப்பட்டது.
- கொப்பரை தேங்காயின் குறைந்தபட்ச ஆதார விலை குவிண்டாலுக்கு 2020-ம் ஆண்டு பருவகாலத்தில் ரூ.10,300 என்ற அளவில் இருந்த நிலையில், 2021-ம் ஆண்டில் ரூ.300 அதிகரிக்கப்பட்டு, ரூ.10,600-ஆக நிர்ணயம் செய்யப்பட்டது.
- புதிதாக அறிவிக்கப்பட்ட குறைந்தபட்ச ஆதார விலை மூலம், இந்தியா முழுவதுக்குமான சராசரி உற்பத்தி செலவின் அடிப்படையில், உடைக்கப்பட்ட தேங்காய்க்கு 51.87 சதவீதமும், கொப்பரை தேங்காய்க்கு 55.76 சதவீதமும் வருவாய் கிடைப்பது உறுதிப்படுத்தப்படுகிறது.
- நாடு தழுவிய அளவில் விளைபொருட்களுக்கான சராசரி உற்பத்தி செலவில் குறைந்தபட்சம் 1.5 மடங்கு அளவில் குறைந்தபட்ச ஆதார விலை இருக்க வேண்டும் என்று 2018-19-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மத்திய அரசு அறிவித்ததன் அடிப்படையில், 2021-ம் ஆண்டு பருவகாலத்துக்கான கொப்பரை தேங்காய் மீதான குறைந்தபட்ச ஆதார விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.
- இதில் குறைந்தபட்சம் 50 சதவீதம் லாபம் கிடைப்பது உறுதிப்படுத்தப்படுகிறது.
- தென்னை விவசாயம் செய்யப்படும் மாநிலங்களில் குறைந்தபட்ச ஆதார விலை அடிப்படையில் விற்பனை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான மத்திய அரசின் அமைப்புகளாக நாஃபெட், என்சிசிஎஃப் ஆகியவை தொடர்ந்து செயல்படும்.

**முடிவு:**

ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் உள்ள கிஷ்த்வார் மாவட்டத்தில் செனாப் ஆற்றின் மீது 850 மெகாவாட் ரேட்டில் நீர்மின் திட்டத்தை செயல்படுத்த ரூ.5,281.94 கோடி முதலீட்டுத் திட்டத்துக்கு ஒப்புதல். இதனை செயல்படுத்த தேசிய நீர்மின் கழகம் மற்றும் ஜம்மு-காஷ்மீர் மின்சார மேம்பாட்டுக் கழகம் இணைந்து கூட்டு நிறுவனம் ஏற்படுத்தப்படும். இதில், தேசிய நீர் மின் கழகத்துக்கு 51%-ம், ஜம்மு-காஷ்மீர் மின் பகிர்மான கழகத்துக்கு 49 சதவீதமும் பங்குகள் இருக்கும்.



## பலன்கள்:

- ரேட்டில் நீர்மின் உற்பத்தி திட்டத்தை கட்டமைப்பதற்கான கூட்டு நிறுவனத்தை ஏற்படுத்துவதற்காக ஜம்மு-காஷ்மீர் மின்சார மேம்பாட்டுக் கழகத்தின் பங்களிப்புக்காக ரூ.776.44 நிதியை வழங்கி ஜம்மு-காஷ்மீருக்கு அரசு ஆதரவு அளிக்கும். தேசிய நீர் மின் கழகம், தனது பங்களிப்பாக ரூ.808.14 கோடியை முதலீடு செய்யும்.
- 60 மாதங்களில் இந்தத் திட்டம் செயல்பாட்டுக்கு வரும்.
- இந்தத் திட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் மூலம், தொகுப்புக்கு தேவையான அளவு வழங்கப்படும். மேலும், மின் விநியோக செயல்பாடுகளை மேம்படுத்தும்.
- இந்தத் திட்டத்தின் கட்டுமானப் பணிகள் மூலம், சுமார் 4,000 பேருக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு கிடைக்கும். இது ஜம்மு-காஷ்மீரின் ஒட்டுமொத்த சமூக--பொருளாதார மேம்பாட்டுக்கு பங்களிப்பை செய்யும்.

# உறுதியான தீர்மானம் இருந்தால் சாதிக்க முடியும்!

**அரசின் புதிய வேளாண் ஊக்குவிப்புத் திட்டங்கள், சர்க்கரை வள்ளிக் கிழங்கை விளைவிக்கும் ராம்குலாப்-பின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. டிசம்பர் 2020-ல் நடைபெற்ற நிகழ்ச்சியில் அவரை பிரதமர் பாராட்டினார்; பெண்கள் குழுவாக இணைந்து மேற்கொண்ட நடவடிக்கைகள் மூலம், காசிரங்கா தேசிய பூங்காவை தூய்மையாக வைத்திருக்க உதவியதுடன் வேலைவாய்ப்புகளையும் உருவாக்கியது**

## விவசாயிகளுக்கான புதிய வாய்ப்புகள்




கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியின்போது, பிரதமர் நரேந்திர மோடியால் பாராட்டப்பட்டதால், உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயி ராம்குலாப், அனைவராலும் அறியப்பட்டார். 300 விவசாயிகளை உள்ளடக்கிய விவசாயிகள் உற்பத்தியாளர் அமைப்பை ஏற்படுத்தினார். இவர்கள் தங்களது விளைபொருட்களை ஏற்கனவே இருந்ததைவிட 1.5 மடங்கு கூடுதல் விலைக்கு விற்பனை செய்கின்றனர். 10,000-க்கும் மேற்பட்ட விவசாய உற்பத்தியாளர் அமைப்புகளை ஏற்படுத்தும் பிரச்சாரத்தில் அரசு ஈடுபட்டு வருகிறது. இந்த அமைப்புகள் மூலம் நிதிஉதவி வழங்கப்படுகிறது. ராம்குலாப்பால் உருவாக்கப்பட்ட விவசாய உற்பத்தியாளர் அமைப்பு, தங்களது வி-43 ரக சர்க்கரை வள்ளிக்கிழங்கை அகமதாபாத்தில் செயல்படும் வேளாண் நிறுவனத்துக்கு விற்பனை செய்து வருகிறது. பிரதமரால் பாராட்டப் பெற்றதைத் தொடர்ந்து, ராம்குலாப்பை இந்திய ரயில்வே அதிகாரிகள் தொடர்புகொண்டு, விளைபொருட்களை குஜராத்துக்கு கொண்டுசெல்ல உதவுவதாக தெரிவித்துள்ளனர். இதன்மூலம், நேரம் மற்றும் பணம் மிச்சமாகிறது. அந்த நிறுவனம், 400 டன் சர்க்கரை வள்ளிக் கிழங்கை வாங்கிக் கொண்டு கிலோவுக்கு ரூ.25 வழங்கும். இதே சர்க்கரை வள்ளிக்கிழங்குக்கு உள்ளூர் சந்தையில் ரூ.15 முதல் ரூ.20 வரை மட்டுமே கிடைக்கிறது. 10 டன் கொண்ட முதல் சரக்கு பிப்ரவரி மாதத்தில் அனுப்பிவைக்கப்படும். ஜூன் 2021-ல் 200 டன் அளவுக்கு சர்க்கரை வள்ளிக்கிழங்கு விநியோகிக்கப்படும். தற்போது ராம்குலாப்-பின் சர்க்கரை வள்ளிக்கிழங்கு, குஜராத்தில் உள்ள சந்தைகளுக்கு குறைந்த விலையிலும், வெறும் 35 மணிநேரங்களிலும் சென்றடைகிறது.

## கழிவுகளை ஆடையாக மாற்றுவது



உலகில் அழிந்துவரும் இனமான ஒற்றைக்கொம்பு காண்டாமிருகங்கள் பராமரிக்கப்படும் மற்றும் உலகின் பாரம்பரிய சின்னமாக உள்ள காசிரங்கா தேசிய பூங்காவைச் சுற்றியுள்ள பகுதிகளில் வீசப்படும் பிளாஸ்டிக் கழிவுகளை கையாள்வதற்கான புத்தாக்க வழிமுறையை ரூப்ஜோதி சைக்கியா கோகோய் கண்டறிந்தார். இந்த குப்பைகளை பொறுக்கி, தனது “கிராம நெசவு” என்ற நிறுவனம் மூலம் பாரம்பரிய கைத்தறி ஆடையாக மாற்றி வருகிறார். ரூப்ஜோதி-யும், அந்தப் பகுதியைச் சேர்ந்த மற்ற பெண்களும், குப்பைகளை சேகரிக்கும் பணியில் ஈடுபடுகின்றனர். போதுமான அளவில் சேகரிக்கப்பட்டவுடன், அனைத்து பிளாஸ்டிக் கழிவுகளும் கழுவி உலரவைக்கப்படுகிறது. சேகரிக்கப்படும் பொருட்களை நீளமான சிறு பட்டைகளாக வெட்டுகின்றனர். கையால் அதனை கட்டி, நீளமான நூல்களைப் போன்று உருவாக்குகின்றனர். இந்த நூல்கள், பருத்தி நூல்களுடன் சேர்த்து பாரம்பரிய நெசவு மூலம் நெய்யப்படுகிறது. இதையடுத்து, இந்த ஆடை மூலம், பாரம்பரிய ஆடைகள், நாடா, மேஜை விரிப்புகள் உள்ளிட்ட பல்வேறு வகையான பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. இதுவரை, அவர், அஸ்ஸாமின் 35 கிராமங்களில் உள்ள 2,000-க்கும் மேற்பட்ட பெண்களுக்கு பயிற்சி அளித்து சுயசார்பு கொண்டவர்களாக மாற்றியுள்ளார். 2012-ம் ஆண்டில் இந்தக் குழுவினர் “kaziranga haat” என்ற பெயரில் விற்பனையகத்தை ஏற்படுத்தினர். இதன்மூலம், தாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை, வெளிநாட்டினர் மற்றும் மற்ற நுகர்வோருக்கு நேரடியாக விற்பனை செய்கின்றனர். அவரது முயற்சி, சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கு உதவுவதுடன், பெண்களை நிதி அடிப்படையில் அதிகாரம் பெற்றவர்களாக மாற்றியுள்ளது.



# இந்தியா வலிமையானதாகவும், திறன்பெற்றதாகவும் மாறியுள்ளது

**உள்ளூர் நாயகர்கள் மற்றும் அவர்களது சாதனை முயற்சிகளை தனது மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி பாராட்டினார். தற்போதைய கொரோனா நெருக்கடி காலத்தில் இந்தியாவின் சுயசார்பு மற்றும் திறன் எவ்வாறு உலகுக்கு சேவையாற்ற உதவியது என்றும் அவர் விளக்கினார்**

### பத்ம விருதுகள்:

இதுவரை போற்றப்படாத நாயகர்களை கவுரவிக்கும் பாரம்பரியம், இந்த முறையும் கூட பின்பற்றப்பட்டுள்ளது. விருதுக்கு தேர்வுசெய்யப்பட்டவர்களைப் பற்றியும், அவர்களது பங்களிப்பையும் நீங்கள் அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

### அதிவேகமாக தடுப்பூசி செலுத்தும் பணி:

உலகின் மிகப்பெரும் கொரோனா தடுப்பூசி போடும் பணியை இந்தியா மேற்கொண்டு வருகிறது. வெறும் 15 நாட்களில் 30 லட்சத்துக்கும் மேற்பட்ட முன்களப் பணியாளர்களுக்கு இந்தியா தடுப்பு மருந்தை செலுத்தியுள்ளது. இதற்கு அமெரிக்கா 18 நாட்களையும், பிரிட்டன் 36 நாட்களையும் எடுத்துக் கொண்டன!

### சுற்றுலா தலங்கள்:

நாட்டில் உள்ள 15 உள்ளூர் சுற்றுலாத் தலங்களுக்கு பயணம் மேற்கொள்ள வேண்டும் என்ற எனது ஆலோசனையால் தூண்டப்பட்டு, பிரியங்கா பாண்டே என்பவர், இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத்தின் பாரம்பரிய இல்லத்தை ஜனவரி 1-ல் பார்வையிட்டார். நாட்டின் மாபெரும் தலைவர்களை அறிந்துகொள்வதற்கான அவரது முதல் நடவடிக்கையாக இது உள்ளது.

### இந்தியாவை கண்டறிதல்:

இந்தியா, தனது 75-வது சுதந்திர தினத்தை கொண்டாட உள்ள நிலையில், இந்தியா-75 என்ற நோக்கத்தில் இளம் எழுத்தாளர்களுக்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது இந்தியாவின் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரம் குறித்து ஆழமாக படித்த இளம் எழுத்தாளர்களை, சுதந்திர போராட்டம் மற்றும் சுதந்திர போராட்ட வீரர்கள் குறித்து எழுத ஊக்குவிக்கும்.

### புத்தாக்கத்தின் சக்தி:

போயின்பள்ளியில் உள்ள காய்கறி சந்தையில் காய்கறி கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. ஒவ்வொரு நாளும் 10 டன் கழிவுகளிலிருந்து சுமார் 500 யூனிட் மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. சுமார் 30 கிலோ அளவுக்கு உயிரி எரிபொருளும் கூட உற்பத்திசெய்யப்படுகிறது.

### பெண்கள் மேம்பாடு:

பெங்களூருவிலிருந்து சான்பிரான்சிஸ்கோவுக்கு இடைநில்லா விமானத்தை இந்தியாவைச் சேர்ந்த 4 பெண் விமானிகள் இயக்கியுள்ளனர். ஜனவரி 26-ல் நடைபெற்ற அணிவகுப்பில், இந்திய விமானப்படையைச் சேர்ந்த இரண்டு பெண் அதிகாரிகள் புதிய வரலாறு படைத்துள்ளனர். நாட்டில் உள்ள பெண்களின் பங்களிப்பு தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

### வேளாண்மை:

ஜான்சி நகரில் ஒரு மாத காலத்துக்கான "ஸ்ட்ராபெரி திருவிழா" அண்மையில் தொடங்கியது. தற்போது, பந்தல்காண்ட் பகுதியில் ஸ்ட்ராபெர்ரியை விளைவிப்பதற்கான ஆர்வம் அதிகரித்து வருகிறது. இதில், ஜான்சியைச் சேர்ந்த குர்லீன் சாவ்லா மிகப்பெரும் பங்கு வகித்துள்ளார்! ஜான்சியின் ஸ்ட்ராபெர்ரி திருவிழா, வீடுகளிலேயே இருங்கள் என்ற வழிமுறையை வலியுறுத்துகிறது.

### எல்லை கடந்து சென்ற யோகா:

சிலியில் நவம்பர் 4-ம் தேதி தேசிய யோகா தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது. சிலி நாடாளுமன்றத்தின் மற்றொரு செயல்பாடு உங்களை ஆச்சரியப்படுத்தும். சிலி நாடாளுமன்ற மேலவை துணைத் தலைவரின் பெயர் ரவீந்திரநாத் குயின்டெரோஸ். விஷ்வ கவிஞர் குருதேவர் ரவீந்திரநாத் தாகூரால் உந்தப்பட்டு, அவர் இந்தப் பெயரை வைத்துக் கொண்டார்.

### சாலை பாதுகாப்பு:

ஜனவரி 18 முதல் பிப்ரவரி 17 வரை சாலை பாதுகாப்பு மாதத்தை இந்தியா பின்பற்றுகிறது. சாலை விபத்துக்கள் என்பது நாட்டுக்கு மட்டுமல்லாது உலகுக்கே கவலை அளிக்கும் அம்சமாக உள்ளது. இந்தியாவில் இன்று, சாலைப் பாதுகாப்புக்காக மக்கள் தனிநபர்களாகவும், ஒன்றாகவும் அரசுடன் இணைந்து பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### படைப்பாற்றலை அங்கீகரித்தல்:

எல்லை சாலை அமைப்பு கட்டமைத்துள்ள சாலைகளைக் கடந்து செல்லும்போது, பல்வேறு புத்தாக்க வாக்கியங்களைக் காண முடியும். இதுபோன்ற வாக்கியங்களை MYGOV தளத்துக்கு நீங்கள் அனுப்பிவைக்கலாம் அல்லது MYGOV தளத்தில் காணலாம். சிறந்த வாக்கியங்கள், இந்தப் பிரச்சாரத்துக்கு பயன்படுத்தப்படும்.

பிரதமரின் மனதின் குரல் உரையைக் கேட்க இந்த கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.



**Narendra Modi @narendram...**

சுயசார்பு இந்தியாவுக்கான பட்ஜெட் என்பது விவசாயிகள் மற்றும் வேளாண் துறைக்கான பட்ஜெட். இது நமக்கு உணவு அளிப்பதற்கு கடுமையாக உழைப்போருக்கு வருவாயை இரட்டிப்பாக்கவும், வேளாண் துறையில் எதிர்கால தொழில்நுட்பங்களை புகுத்தவும் பங்களிப்பை செய்யும். கடன் வாய்ப்புகள் மேம்படுத்தப்படும். மண்டி கட்டமைப்புகள் வலுப்படுத்தப்படும்.



**Rajnath Singh @rajnathsingh ·**

2021-22-ம் நிதியாண்டுக்கான பட்ஜெட்டில் பாதுகாப்புத் துறைக்கான ஒதுக்கீட்டை ரூ.4.78 லட்சம் கோடியாக அதிகரித்ததற்காக பிரதமருக்கும், நிதியமைச்சருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். நிதிஒதுக்கீட்டில் மூலதன செலவினத்துக்காக ரூ.1.35 லட்சம் கோடி வழங்கப்படுகிறது. இதன்மூலம், பாதுகாப்புத் துறைக்கான மூலதன செலவு அளவு சுமார் 19 சதவீதம் அதிகரித்துள்ளது. 15 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு பாதுகாப்புத் துறைக்கான மூலதன செலவினம் அதிகரிக்கப்பட்டுள்ளது.



**Amit Shah @AmitShah · 17h**

शिक्षा की गुणवत्ता के लिए मोदी सरकार ने ₹3000 करोड़ की राष्ट्रीय अप्रेंटिसशिप प्रशिक्षण योजना शुरू की है। ₹50,000 करोड़ से National Research Foundation शुरू होगा। राष्ट्रीय भाषा अनुवाद मिशन भी शुरू होगा जिससे क्षेत्रीय भाषाओं के विकास को बल मिलेगा।
#AatmanirbharBharatKaBudget



**Nitin Gadkari @nitin_gadkari**

आदरणीय प्रधानमंत्री श्री @narendramodi जी के नेतृत्व में वित्त मंत्री श्रीमती @nsitharaman जी ने जो बजट पेश किया है वो नए भारत की नींव रखेगा और 130 करोड़ भारतवासियों की ज़िंदगी बेहतर करेगा।
#AatmanirbharBharatKaBudget



**Piyush Goyal @PiyushGoyal ·**

சுயசார்பு இந்தியாவுக்கான பட்ஜெட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள வரிக் குறைப்புகள் மற்றும் ஊக்கத்தொகைகளுக்கு வரவேற்பு தெரிவிக்கிறேன். நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியத்துவம் வாய்ந்த தூணை வலுப்படுத்தும் இந்த நடவடிக்கைக்கு இந்திய தொழில் துறை வரவேற்பு தெரிவிக்கிறது.



**Dr Harsh Vardhan @drharshv...**

சுயசார்பு இந்தியாவுக்கான பட்ஜெட்டானது, புதிய வளமான இந்தியாவை உருவாக்குவதற்கு மனித மூலதனத்தை ஊக்குவிக்கிறது

- தேசிய கல்விக் கொள்கையின்கீழ் பள்ளிகள் தரமானதாக வலுப்படுத்தப்படுகிறது
- மலைவாழ் பகுதிகளில் கல்வி கட்டமைப்புகளை மேம்படுத்துகிறது
- தாழ்த்தப்பட்ட மாணவர்களை மேம்படுத்துகிறது
- அரசு உதவிபெறும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு இடையேயான இணைப்பை வலுப்படுத்துகிறது

# India puts its military might and cultural heritage on show



**BSF unfurls 131-foot-high Tricolour, tallest along India-Pak border in J&K**

ARUN SHARMA

K-CURVE CONCERNS

# Big jump in spending must for a sustained recovery

It is not just MSMEs, even the core sector is doing badly and sluggish 2-wheeler sales make it clear the uptick is patchy



[ DAVOS ADDRESS ]

# Many more made-in-India Covid vaccines soon: Modi


HT Correspondent

NEW DELHI: Prime Minister Narendra Modi on Thursday hailed India's progress in tackling the Covid-19 pandemic, said that India's success in saving lives has been a global good, and pledged a commitment to help other countries with more "made-in-India" vaccines.

Speaking at the World Economic Forum's Davos Agenda ...

Right now, there are two made-in-India vaccines — but in the coming days, many more vaccines will come. This will help us support other countries at scale

NARENDRA MODI, Prime Minister



... leaders — held virtually this year — with a focus on the post-pandemic world and harnessing the technologies of the fourth industrial revolution.

Tracing back India's journey against the pandemic, Modi said: "I remember how in February, March and April, many global experts and institutions had made many predictions. It was said that India would be the most affected by Covid-19 ...

# PM: 1 lakh NCC cadets to be trained for role in coastal, border areas

EXPRESS NEWS SERVICE
NEW DELHI, JANUARY 28



'A third of them will be girl cadets'

## CABINET CLEARS HIKE IN MSP FOR COPRA

HT Correspondent

# There should be discussions this session for meaningful results: PM

Prasad slams Oppn boycott, says President above political differences

LIZ MATHEW

RNI No. :
DELTAM/2020/78809
February: 16-28, 2021

# நியூ இந்தியா சமாச்சார்

Fortnightly

RNI Registered No. DELTAM/2020/78809, Delhi Postal License No DL (S)-1/3551/2020-22, WPP NO U (S)-99/2020-22, posting at BPC, Meghdoot Bhawan, New Delhi-110001 On 13-17 advance Fortnightly, (Publishing Date February 4, 2021, Pages-48)

## सर्वप्रथम राष्ट्र, फिर गुरु, फिर माता-पिता, फिर परमेश्वर। अत: पहले खुद को नही राष्ट्र को देखना चाहिए।

**-छत्रपति शिवाजी महाराज**

சத்ரபதி சிவாஜியின் 391ஆவது பிறந்த நாளான பிப்ரவரி 19 அன்று, நாடு அவரை நினைவு கூர்கிறது.

**'வீர சிவாஜி போர்களத்தில் பிரகாசித்ததோடு, நிர்வாகத்திலும் தடம் பதித்தார். தனது மேன்மையான ஆட்சியின் மூலம் பலரது வாழ்க்கையை மேம்படுத்தினார்'**

**பிரதமர் நரேந்திர மோடி**





**Editor:** **Kuldeep Singh Dhatwalia,** Principal Director General, PIB, New Delhi

**Published & Printed by: Satyendra Prakash,** Director General, BOC on behalf of Bureau of Outreach and Communication

**Published from Bureau of Outreach and Communication, 2nd Floor, Soochna Bhawan, New Delhi - 110003**

**Printed at** Infinity Advertising services Pvt. Ltd. FBD-One Corporate Park, 10th Floor, New Delhi-Faridabad border, NH-1, Faridabad-121003 (Haryana)